REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

...E SUDAROLI

வார மலர்



## நிலத்துக்கு மீள்தல்

## வன்னி மக்களின் அவலங்களுக்கு முடிவு எப்போது வரும்?

# நிலத்துக்கு மீள்தல்



காலைவேளையில் ஒரு தொலைபேசி அழைப்பு. அழைத்தவரின் குரலில் ஆதங்கம் ஒட்டியிருந்தது.


''நான் வசாவிளான் மகாவித்தியாலய அதிபர் கதைக்கிறன். பள்ளிக்கூடக் கட்டடத்தைவிட்டு எங்களை எழும்பச் சொல்லுகினம். பிள்ளையளை இனி வெளியால வைச்சுத்தான் படிப்பிக்க வேணும். எங்களைச் சொந்த இடத்தில இயங்க விட்டாலும் பரவாயில்லை. அதுக்குள்ள வீட்டுச்சொந்தக்காரரும் விடுகினமில்லை. அவங்களும் பழைய இடத்துக்குப் போக அனுமதிக்கிறாங்களில்லை. நல்லபடியா இயங்கின பாடசாலைக்கு இப்படி ஒரு நிலைமை'' துயரம் தோயும் குரலில் அந்தப் பாடசாலையின் அதிபர் சொல்லிக்கொண்டே போனார்.

வசாவிளான் மகாவித்தியாலயம் யாழ்ப்பாணம் வலி.வடக்கில் இயங்கிய ஒரு பாடசாலை. ஆயினும் யுத்தம் அந்தப் பாடசாலையை இடம்பெயர வைத்தது. சொந்த இடத்தில் இருந்து பிடுங்கி எறியப்பட்டு, உரும்பிராய் என்னும் இடத்தில் மீண்டும் வேர் கொண்டு பழையபடி கல்விப்பணியில் உயரும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருக்கிறது. ஆயினும் பாடசாலை தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்த 3 வீடுகளில், ஒரு வீட்டின் உரிமையாளர் அந்த வீட்டில் இருந்து வெளியேறுமாறு பாடசாலை நிர்வாகத்துக்கு அழுத்தம் கொடுத்து வந்ததன் எதிரொலியே பாடசாலையின் ஒரு தொகுதி மாணவர்கள், திறந்த வெளியில் கற்க வேண்டிய நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது. அட! இந்த முறையும் இந்த பத்தியில் பாடசாலைப் புராணமா? என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கவே செய்கிறது.

இடம்பெயர்ந்து, இயங்கி வருகின்ற- பொதுச்சேவையில் ஈடுபடுகின்ற - பெருமளவு ஆளணியையும், நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்டிருக்கிற - பாடசாலை ஒன்றுக்கே இந்த அவலம் என்றால் , சாதாரண மக்கள் எவ்வளவு துயரங்களைச் சுமந்து கொண்டிருப்பார்கள் என்று எண்ணிப்பாருங்கள். யுத்தத்தின் இடைவிடாத நகர்தல் மக்களையும் ஓடப்பண்ணிக் கொண்டிருந்தது.

விரைவில் மீளத் திரும்பி விடலாம் என்ற நம்பிக்கையுடன் கையில் அகப்பட்ட பொருள்களுடன் வெளியேறிய வலி.வடக்கு மக்கள் 20 வருடங்களுக்கு மேலாக தமது நிலம் பற்றிய ஏக்கங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்த நீண்டகால அலைதலில் வலி.வடக்கு மக்கள் பட்ட துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல. இலங்கையிலேயே நீண்ட காலம் இடம்பெயர்ந்தவர்கள் என்ற சாதனைக்கும் இப்போது இவர்கள்தான் சொந்தக்காரர்கள். விவசாயத்தையே பிரதான தொழிலாகக்கொண்ட



வலி.வடக்குப் பிரதேசம் ஒரு செம்பாட்டுப்பூமி. இந்த செம்பாட்டுப் பூமி தனக்குள் இன்னும் பல வளங்களையும் ஒளித்து வைத்திருக்கின்றது. பெருமளவான கடலுணவுகளைக் கொண்டிருக்கிற வளமான கடலும் வலி.வடக்குப் பிரதேசத்தில் உண்டு. இவை எல்லாவற்றையும் விட்டு விலக மனமில்லாமல் யுத்தத்தால் துரத்தப்பட்ட மக்கள், எந்தவித வளங்களும் அற்ற வறண்ட நிலங்களில், ஆகதி முகாம்களில், உறவுகளின் இல்லங்களில் முடங்கவேண்டியேற்பட்டது.

மக்கள் இல்லாத - படையினரின் நடமாட்டம் மட்டுமேயுள்ள- சூனியப்பிரதேசமாக மாறிப்போன வலி.வடக்கின் பலபகுதிகள், பலாலிப்பெருந்தளத்தை விஸ்தரிப்பதற்காக விழுங்கப்பட்டன. உயர்பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. வெற்றிலையும், மரக்கறிவகைகளும் செழித்திருந்த இடங்களிலெல்லாம் பாரிய மண் அணைகளும், முட்கம்பி வேலிகளும், மிதிவெடிகளும் பயிரிடப்பட்டன. இனியொருபோதும் மக்களை மீளக்குடியமர்த்தும் நோக்கமே இல்லாதது போலவே இந்த நடவடிக்கைகள் அமைந்தன. யுத்தம் தனது உக்கிரத்தை வெளிப்படுத்தும் போதெல்லாம் பலாலி உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களின் எல்லைகளும் விரிவடைந்து கொண்டே செல்லத்தொடங்கின. உயர் பாதுகாப்பு வலயங்களின் வளர்ச்சி, வலி.வடக்கிலிருந்த இடம்பெயர்ந்திருந்த மக்களின் சொந்த நிலத்துக்கு மீள்தல் பற்றிய கனவுகளைச் சுருங்கச் செய்தது. தமது சொந்த இடங்களைத் தம் நினைவுகளிலிருந்து முற்றாகத் தொலைத்துவிட வேண்டியதுதான் என்னும் முடிவுக்கு மக்கள் வரவேண்டியிருந்தது.

இதனால் தாம் தற்காலிகமாகத் தங்கியிருந்த இடங்களிலேயே தமது சொந்த இடங்களில் இருந்த பாடசாலைகள், பொது அமைப்புகள் என்பவற்றை மீள ஸ்தாபிக்கத் தொடங்கினர். கிட்டத்தட்ட நிலம் கடந்த தமது கிராமங்களை அவர்கள் முகாம்கள், உறவினர் வீடுகள் என்வற்றில் தங்கியிருந்தவாறே, தமது இடையறாத தொடர்பாடல்களின் ஊடாக நிலம் கடந்த தமது கிராமங்களை முழுமையான வகையில் இல்லாவிட்டாலும் ஓரளவுக்கேனும் உருவாக்கிக் கொள்ளமுடிந்தது. ஆயினும் இத்தகைய அமைப்பு முறை தற்காலிகம் என்ற அடைமொழியை எல்லா இடங்களிலும் முன்னால் அணிந்துகொண்டு திரிய வேண்டியிருந்தது. இதைவிட அவர்களின் தங்கியிருப்பு பெரும் கேள்விக்குறியாக மாறியது.

விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்குத்தானே?. தமது உறவினர் வீடுகளில் அடைக்கலமாகியிருந்த வலி.வடக்கு மக்கள் கொஞ்ச நாளைக்குள்ளேயே வேண்டாத விருந்தாளிகளாயினர்.

யாழ்ப்பாணத்தவர்களுக்கே உரித்தான நக்கல், நளினம், குத்தல் என்பனவெல்லாம் உறவினர்களிடம் இருந்து வெளிப்பட்டன. நாளொரு நக்கலும் பொழுதொரு பொல்லாப்புமாக நாட்கள் ஒவ்வொன்றுமே நரகமாகவே அந்த மக்களுக்கு நகர்ந்தது. வலி.வடக்கு மக்களில் அநேகமானோர் இடம்பெயர்ந்த பின்னர் ஆகக்குறைந்தது 10 வீடுகளிலாவது மாறி, மாறிக் குடியிருக்கவேண்டியிருந்தது. வீட்டு உரிமையாளர்களினாலும் இவர்கள் பந்தாடப்பட்டனர். வாடகைகள் அடிக்கடி அதிகரித்தன. ஊரில் எல்லாவற்றையுமே இழந்து விட்டு வந்தவர்களால் இத்தகைய ரொக்கட் வேக வாடகை அதிகரிப்பை எதிர்கொள்ளமுடியாமலிருந்தது. வாடகை குறைந்த வீடுகளைத் தேடி மக்கள் தொடர்ந்தும் இடம்பெயர்ந்தனர். அது கானல் நீரைக் கையால் அள்ளிக்குடித்த கதையாக, ஏமாற்றத்தை மட்டுமே தந்து கொண்டிருந்தது.

வாடகை குறைந்த -அதேநேரம் தமது குடும்பத்துக்கு ஏற்ற இடத்தில் - வீடுகளைக் கண்டுபிடிப்பதென்பது குதிரைக்கொம்பான விடயம். வாடகை குறைந்த வீடுகள் கிடைக்காதவர்கள் ரயில் தண்டவாளப் பாதைகளில் தற்காலிகக் குடிசைகளை அமைக்கத்தொடங்கினர்.

நல்லவேளையாக நாட்டில் இயல்புநிலை குழம்பிப் போயிருந்ததால் யாழ்ப்பாணத்துக்கான ரயில்சேவை தடைப்பட்டிருந்தமை இந்த மக்களுக்கு வாய்ப்பான விடயமாக மாறியது. ரயில் ஓடிய பாதைகள் எல்லாமே வலி.வடக்கு மக்களை கைநீட்டி வரவேற்றன. அந்தக் குடிசைகளே தமது நிரந்தரமான வசிப்படமாக மாறிவிடுமோ என்று அவர்களில் பலரும் எண்ணினர்.

அகதி முகாம்களில் வசிப்பதும் அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. வெள்ளம், தொற்றுநோய்கள், வசதியீனங்கள் என்று இடர்பாடுகள் அவர்களைத் துரத்தின. அத்தோடு பெரும்பாலான மக்கள் முகாம்களில் வசிப்பது தமது கௌரவத்துக்கு இழுக்கை ஏற்படுத்துவதாகவும் கருதினர். யாழ்ப்பாணத்தவர்களின் மேட்டுக்குடித்தனம் இத்தகைய இக்கட்டான நிலையிலும் அவர்களை விட்டு விலகவில்லை. சமூகத்தில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிய குடும்பங்களே அகதிமுகாம்களில் தொடர்ந்தும் தங்கியிருந்தன. அவர்களும் தமது ஆயுள் முழுதும் முகாம்களிலேயே கழிய வேண்டியதுதான் என நம்பினர். 1990களுக்குப் பின்னர் பிறந்த - வலி.வடக்கைத் தமது பூர்வீகமாகக் கொண்ட - பிள்ளைகளுக்கு (அவர்கள் இன்றைக்கு இளைஞர்கள்) தமது சொந்த இடம் எப்படியிருக்கும் என்பதே தெரியாது. காலம் இத்தகைய வஞ்சனையை அவர்களுக்கு ஏற்படுத்தியிருந்தது.



மனிதத்துயர்களை ஏற்படுத்திக்கொண்டே இருந்த யுத்தம் எவருமே எதிர்பாராதவகையில் தன் முடிவுரையை இலங்கையில் எழுதிகொண்டது. இதன் பின்னர் நிகழத்தொடங்கிய மீள்குடியேற்றங்கள் வலி.வடக்கு மக்களின் மனதில் வற்றிப்போன சொந்த நிலம் மீதான கனவுகளைத் தூசு தட்டின. உயர்பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக அகற்றப்படும் என்ற அரசின் அறிவிப்புகள் இந்தக்கனவுக்கு இன்னமும் வலுச்சேர்த்தன. வடமராட்சி கிழக்கில் நிகழ்ந்த மீள்குடியேற்றமும், யாழ்ப்பாணத்தின் புதிய அரச அதிபராகக் கடமையேற்றுள்ள இமெல்டா சுகுமார் மீள்குடியேற்றத்தில் காட்டுகின்ற அதீத அக்கறையும் மக்களிடத்தே தொலைந்து போன தம் நிலம் திரும்பக்கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்தது.

வலி.வடக்கில் - ஒருபகுதியில் - கடந்த செவ்வாய்க்கிழமை மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்துவைப்பதாக அறிவிப்புகள் வெளிவந்தன. மக்களின் வறண்டு போன மனங்களில் இந்த அறிவிப்பால் ஒரே மழைதான். ஆனாலும் துரதிர்ஷ்டம் அவர்களை விட்டு விலகியபாடாயில்லை. மிதிவெடிகள் அகற்றும் பணிகள் இன்னமும் பூர்த்தி அடையாததால் குறிப்பிட்ட தினத்தில் மீள்குடியேற்றம் வலி.வடக்கில் நிகழவில்லை. ஆனால் மிதிவெடிகள் அகற்றப்படாததால்தான் மீள்குடியேற்றம் தாமதமாகின்றது என்னும் காரணத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. வன்னியில் சாந்தபுரம் பகுதியில் இருந்து இப்போது வலி.வடக்கு வரை இந்த நொண்டிச்சாட்டே தொடர்ச்சியாக அரசால் முன்வைக்கப்படுகின்றது. சிறு வயதில் பாடசாலைக்கு போகாமல் விட்டுவிட்டு, நேற்று எனக்கு காய்ச்சல் அதுதான் பள்ளிக்கூடம் வரேலை என்று கிளிப்பிள்ளை போல சொல்லும் நொண்டிச்சாட்டைப் போலவே இக் கூற்று அமைகின்றது.

ஆனாலும் அதி கூடிய காலம் இலங்கையில் அகதி வாழ்விலேயே கழித்த வலி.வடக்கு மக்களுக்கு நொண்டிச்சாட்டுகளும் தாமதங்களும் எவ்வித ஒத்தடங்களையும் கொடுத்துவிட முடியாது. அவர்களுக்குத் தேவை மற்றவர்களைப் போல தாமும் தமது சொந்த நிலத்துக்குத் திரும்ப வேண்டும் என்பதுதான். அந்த மீள்தல் கிடைக்கும் வரை நிலம் பற்றியதான அவர்களின் ஏக்கப் பெருமூச்சுகள் தீயாக மாறி, மக்களை மீள் குடியேற அனுமதிக்க மறுப்பவர்களின் மனச்சாட்சிகளை பொசுக்கியும் விடலாம். *

**பிரமன்**

# வன்னி மக்களின் அவலங்களுக்கு முடிவு எப்போது வரும்?

கடந்த வருடம் மே மாதத்தில் இடம் பெற்ற இறுதிக் கட்டப் போரில் சிக்கிப் பின்னர் இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்தவர்கள் படிப்படியாக மீளக் குடியமர்த்தப்படுகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம்பெயர்ந்த 280,000 பேரைத் தங்க வைக்க அமைக்கப்பட்டிருந்த 47 முகாம்களில் 42 முகாம்கள் மூடப்பட்டுவிட்டன எனவும் எஞ்சியவை வருட இறுதிக்குள் மூடப்பட்டுவிடும் என்றும் மீள்குடியமர்வுக்குப் பொறுப்பான அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன அறிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்டு விட்டார்கள் என அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டாலும் மீள் குடியமர்வின் பின் அந்த மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் வெளியில் வருவதாக இல்லை.

போருக்கு முன்னர் அந்த மக்கள் எத்தகைய வாழ்க்கையை வாழ்ந்தார்களோ, அந்த வாழ்க்கைக்கு அவர்கள் திரும்ப இன்னும் பல வருடங்கள் செல்லும் எனக் கருதப்படுகிறது.

அவர்களின் உடைமைகள், சொத்துக்கள் அழிக்கப்பட்டுவிட்டன. வீடுகள் யாவும் சிதைக்கப்பட்டுவிட்டன. அவர்களின் வாழ்வாதாரத்துக்கான தொழில்களை மீண்டும் ஆரம்பிக்க முடியாத நிலை.

பெரும்பாலான மக்கள் விவசாயத்தையும் கடற்றொழிலையும் நம்பியிருந்தவர்கள். அங்கு கடற்றொழி



லுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை. விவசாயத்தை மேற்கொள்ளவும் போதிய உதவிகள் கிட்டவில்லை.

கடற்றொழிலுக்கு அனுமதி வழங்கி, அவர் களுக்கு தேவையான படகுகள், வலைகள் வழங்கப் பட்டால் மீண்டும் அந்த மக்கள் நிமிர்ந்து நிற்க வாய்ப்புக் கிட்டும். அதே போன்று விவசாயத்துக்கும் போதிய உதவி கள் வழங்கப்பட்டால் அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்த வாய்ப்புக் கிட்டும்.

மக்களின் மீள்குடியமர்வுக்காக ஏதோ பெருமளவில் உதவிகளை வழங்கப் போவதாக இந்தியாவும் மேற்கு நாடுகளும் கூறிக்கொண்டிருந்தாலும் மக்களுக்கு அந்த உதவிகள் கிடைக்கவே இல்லை.

தறப்பாள்களை கூரையாகக் கொண்ட சிறுகொட்டில்களுக்குள் தமது அவல வாழ்வை அவர்கள் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். கல்வீடுகளில் சகல வசதிகளுடனும் வாழ்ந்த மக்கள் இன்று சிறு கொட்டில்களுக்குள் முடங்கி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மீளக் குடியமர்ந்த மக்களுக்கு வீடுகள் அமைக்க நிதி உதவி வழங்க முடியாது. அதற்கு எம்மிடம் நிதிவளம் இல்லை. அந்த மக்களின் வாழ்வாதாரத் துக்குத் தேவையான உதவிகளை அதாவது விதைநெல், உரம் போன்றவற்றை வழங்குவோம். அவர்கள் விவசாயம் செய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டு வீடுகளை அமைக்கட்டும் என்று அரசு தனது நிலைப்பாட்டைக் கூறிவிட்டது.

எமக்கு வீடுகள் கட்டித்தர சர்வதேச அமைப்புக் கள் தயாராக இருக்கின்றன. அவற்றின் உதவிகளை நாம் பெறுவதற்கு அந்த நிறுவனங்கள் இயங்க அனுமதி வழங்குங்கள் என்று மக்கள் கேட்கிறார்கள்.

சர்வதேசத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு விதித்துள்ள தடைகள் காரணமாக அந்த நிறுவனங்கள் பெரியளவில்) உதவிகளை வழங்கப் பின்னடித்துள்ளன. முன்னர் 50றகு மேற்பட்ட நிறுவனங்கள் வெவ்வேறு துறைகளில் உதவிகளை வழங்கின.

வீடுகள் அமைக்க சில நிறுவனங்களும், கல் வியை மேம்படுத்த சில நிறுவனங்களும், சுகாதாரத்தை மேம்படுத்த சில நிறுவனங்களும், விவசாயத்தை ஊக்குவிக்க சில நிறுவனங்களும் கடற்றொழிலை மேம்படுத்த சில நிறுவனங்களும் என 50 இற்கு மேற்பட்ட நிறுவனங்கள் அங்கு இயங்கின.

யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் அந்த நிறுவனங்களை எல்லாம் அங்கிருந்து அரசு வெளி யேற்றி விட்டது. அந்த நிறுவனங்கள் தமது பணிகளை நிறுத்தி விட்டு, தமது நாடுகளுக்கே சென்றுவிட்டன.

மீண்டும் அந்த நிறுவனங்கள் இலங்கைக்கு வர விருப்பினாலும் அவற்றுக்கு அரசின் அனுமதி கிடைக்காது. அனுமதி வழங்கப்பட்ட ஒரு சில நிறுவனங்களுக்கும் அரசு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அதன் காரணமாக சர்வதேச நிறுவனங்கள் இங்குவந்து பணியாற்ற விரும்பவில்லை.

வெளிநாட்டு உதவிகளை எம்மிடம் தாருங்கள். நாங்கள் எமது மக்களுக்கு வழங்குவோம் என்று அரசு கூறுகிறது. அரசு மூலம் நிதியை வழங்க விரும்பாத அந்த நிறுவனங்கள் உதவிகளையே நிறுத்திவிட்டன.

யாழவன்

இத்தகைய நிலை நீடிக்குமானால் மக்களின் அவல வாழ்வுக்கு விடிவு கிட்டமாட்டாது. அவர்கள் சிறு கொட்டில்களையே தஞ்சம் என வாழ வேண்டியது தான்.

மக்களின் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்திப் பணிகளில் அரசுடன் இணைந்து செயற்படப் போவதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. அரசுப் பிரதிநிதிகளும் கூட்டமைப்புப் பிரதிநிதிகளும் அங்கம் வகிக்கும் குழுவை அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்குழு அமைக்கப்பட்டதும், நேரடியாக அந்த மக்களிடம் குழுவின் உறுப்பினர்கள் சென்று தேவைகளை கண்டறிய வேண்டும். அந்த மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும். அவசரமும் அவசியமுமான அந்தச் செயற்பாடு விரைவு படுத்தப்பட வேண்டும். சிறு சிறு உதவிகளைக் கிள்ளித் தெளிக்காமல், அந்த மக்களின் தேவையைக் கண்டறிந்து அதற்கு ஏற்ப மக்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும். அப்போதுதான் அந்த மக்களின் வாழ்வு விடியும்.

அதுநிற்க, நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி



மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில் முக்கிய விடயம் ஒன்றை வெளிப்படுத்தியுள்ளார். இலங்கை இனப்பிரச்சினைக்கு வெளிச் சக்திகளால் திணிக்கப்படும் எந்த வகைத் தீர்வும் விரோதத்தைப் பெரிதாக்குவதுடன் முழுமையாகத் தோல்வியடையும். அதுவே இதுவரை கண்ட வரலாறு. எந்தவொரு தீர்வும் உள்நாட்டில் இருந்து உருவாகி வந்தால் மட்டுமே வெற்றிபெறும். இப்படி ஜனாதிபதி தனது உரையில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலத்தில் இருந்து தமிழ்மக்கள் தமது உரிமைக்காகப் போராடி வருகின்றார்கள். ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைவர்கள் எடுத்த நிலைப்பாடுகளே தமிழ் மக்கள் தமது உரிமைக்காகப் போராடும் நிலையை உருவாக்கியது.

இரண்டாம் தரப் பிரஜைகளாகத் தமிழ் மக்கள் நடத்தப்பட்டு வருகின்றனர். தொழில் வாய்ப்பு, கல்வி உட்பட சகல துறைகளிலும் தமிழ் மக்களுக்குச் சிங்களத் தலைவர்கள் பாரபட்சம் காட்டியமையே, இனப்பிரச்சினை

# உள்நாட்டில் முன்னெடுக்கும் தீர்வு முயற்சிகள் வெற்றி பெறுமா?

என்று ஒன்று தோன்றக் காரணமாயிற்று.

இந்த நாட்டில் வாழும் சகல மக்களும் சமமான உரிமையுடன் வாழக்கூடிய நிலை தோற்றுவிக்கப்படாததால், தமிழ் – சிங்கள மக்களிடையே முரண்பாடு தோன்றியது. அந்த முரண்பாடு பெரிதாகி நாட்டையே உலுப்பும் நிலைக்கு வந்துள்ளது. அந்த முரண்பாட்டைத் தீர்க்கப் பல ஒப்பந்தங்கள் சிங்களத் தரப்புக்கும் தமிழர் தரப்புக்கும் இடையில் செய்யப்பட்டன.

அந்த ஒப்பந்தங்கள் எல்லாம், ஒப்பந்தத்தில் இடப்பட்ட கையொப்பங்களின் மை காய முன்பே கிழித் தெறியப்பட்டன. தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

சிங்கள நாடு என்ற நச்சுவிதை சிங்களத் தலைவர்களால் விதைக்கப்பட்டதன் விளைவுதான் இந்த ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வராமைக்குக் காரணம். ஓங்கி வளர்ந்துள்ள பேரினவாதம் தமிழர்களுக்கு உரிமை வழங்கத் தடையாக நிற்கிறது. இன்றும் அதே நிலை தான் தொடர்கிறது. இந்த நிலையில் ஜனாதிபதியின்

ஐ.நா.பேச்சு சொல்ல வருவது என்ன என்பது புரியவில்லை என்கின்றனர் நோக்கர்கள்.

நாட்டில் புரையோடிக் கிடக்கும் இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வுகாணவேண்டும் என்று ஜனாதிபதி கூறுவது, காலத்தைக் கடத்தும் ஒரு நடவடிக்கையின் ஆரம்பம் என்று கூறுகிறார்கள் தமிழ்த்தலைவர்கள்.

கடந்த 60 வருடங்களாக உள்நாட்டில் காண முடியாத தீர்வை எப்படி இனியும் காணமுடியும் என்று கேள்வி எழுப்புகிறார்கள் அவர்கள். தமிழ்மக்கள் தமது தாயகப் பகுதியில் தாமே நிர்வாகத்தை நடத்தக் கூடியவாறு சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வையே வேண்டி நிற்கிறார்கள். அத்தகைய தீர்வை உள்நாட்டில் காண முடியாது. இதன் காரணமாகச் சர்வதேசத்தின் உதவியை நாடி நிற்கிறோம் என்று கூறுகின்றனர் தமிழ் தலைவர்கள்.

சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் என அகிம்சை வழியில் உரிமைப் போராட்டங்களை முன்னெடுத்த தமிழ்மக்கள், அவற்றால் தீர்வு கிட்டாததால் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அந்த ஆயுதப் போராட்டம் சிங்களத் தலைமைகளால் முறியடிக்கப்பட்டு இப்போது வெற்றிடம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் தமிழ்மக்கள் ஏற்கக்கூடிய நியாயமான தீர்வு ஒன்றை அரசு முன்வைத்தால்தான் இனப்பிரச்சினைக்கு முடிவு காணமுடியும்.

சர்வதேசத்தின் பிரச்சனத்தில், அவர்களின் அனுசரணையில் நோர்வே அரசாங்கம் இனப்பிரச்சினை தீர்வு காணும் முயற்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. சிங்களவர் தரப்பும் தமிழர் தரப்பும் கேட்டுக் கொண்டதற்கிணங்க வந்தது நோர்வே. ஐந்து வருடகாலம் தன்னால் ஆன பணியை முன்னெடுத்தது நோர்வே. ஆனால் இருதரப்புக் களுக்கும் இடையில் இணக்கத்தைக் கொண்டு வரமுடியாத நிலையே நோர்வேக்கு ஏற்பட்டது. இறுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையின் பேரில், தனது அனுசரணைப் பணியைக் கைவிட்டு வெளியேறியது நோர்வே.



உலக அரங்கில் பல நாடுகளின் இன முரண்பாடுகளில் தலையிட்டு தீர்வுகளைக் கண்ட நோர்வேயால் இலங்கையில் தீர்வைக் காணமுடியாது போய்விட்டது.

உள்நாட்டில் இடம்பெற்ற பேச்சுக்களில் எட்டப்பட்ட ஒப்பந்தங்களை நிறைவேற்ற முடியாத வரலாற்றை மாற்றியமைக்க சர்வதேசத்தின் பிரசன்னத்தில் எடுக்கப்பட்ட முயற்சியும் தோல்வி கண்டுவிட்டது.

இந்த நிலையில் உள்நாட்டில் தீர்வைக் காணமுடியும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐ.நா.சபையில் கூறியுள்ளார். உள்நாட்டில் தீர்வைக் காண்பதற்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சிக் குழுவின் தீர்வு கிடப்பில் போடப்பட்ட நிலையில், தீர்வுக்கான புதிய முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்கள் தமது பிரதிநிதிகளாகத் தெரிவு செய்துள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழு ஒன்றை நியமிக்க இணங்கியுள்ளார்.

அந்தக் குழுவுக்கு அரச தரப்புப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டு விட்டனர். கூட்டமைப்பு தமது பிரதிநிதிகளை விரைவில் நியமிக்கவிருக்கிறது.

இலங்கைக்குள் தீர்வு ஒன்றைக் காண எடுக்கும் இந்த முயற்சி வெற்றியளிக்குமா? எனப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். ✸

# தவறு எங்கே?

'தினமும் துப்புரவு செய்கிறோம் குப்பை பெருகுகிறது. தினமும் சாப்பிட்டாலும் மீண்டும் பசிக்கிறது. எல்லாவற்றையும் எப்போதும் செய்து கொண்டேயிருக்க வேண்டியிருக்கு. இப்படிச் செய்தே வாழவேண்டியிருக்கு' என்று எழுதப்பட்டிருந்தது ஒரு குறிப்பேட்டில்.

இது பலவற்றுக்கும் பொருந்தக் கூடிய ஒரு குறிப்பு. தொடர்ந்து சனங்களின் கஷ்டங்களைப் பற்றியும் அவர்களுடைய துயரங்களைப் பற்றியும் எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் அவர்களுடைய பிரச்சினைகள் அப்படியே தான் இருக்கின்றன.

சனங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் அவர்களுடைய தேவைகளை நிறைவேற்றுவதற்குமென்று எத்தனையோ அமைப்புகள்; எவ்வளவோ ஏற்பாடுகள்; பெருந்தொகையான பணச் செலவு. பல அடுக்குகளில் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள். அவர்களுக்கான வாகனங்கள், வசதிகள், பொருட்கள், சலுகைகள், கொடுப்பனவுகள். சனங்களுக்காகவும் சனங்களின் பெயராலும் அரசியல்வாதிகள், அரசியற் கட்சிகள், அரசாங்கம். அரசாங்கத்தைத் தட்டிக் கேட்க எதிர்க்கட்சிகள். இதையெல்லாம் கண்காணிக்கப் பத்திரிகைகள், ஊடகங்கள். இதைவிடச் சட்டங்கள், பாதுகாப்பு ஏற்பாடுகள், சர்வதேச அமைப்புகள்...



அப்பப்பா இப்படியெல்லாம் வசதிகளும் ஏற்பாடுகளும் இருக்கும்போது எதற்காகச் சனங்கள் இன்னும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்? எதற்காக இன்னும் அவர்கள் துன்பத்தில் அழுந்திக் கொண்டும் புலம்பிக் கொண்டுமிருக்க வேண்டும்?

இவ்வளவு ஏற்பாடுகளும் ஆட்களும் தெரிவினர்களும் இருக்கும்போது யாராவது இன்னும் தங்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன என்றால் அவர்களைத் தண்டிக்காமல் விடுவது பெருந்தப்பு. அதிலும் படித்துப் பட்டம் பெற்றவர்களே பதவிகளில் இருக்கிறார்கள்.

கள்வர்களையும் ஏமாற்றுக்காரர்களையும் யாராவது வைத்துக் கொள்வார்களா? அப்படி அவர்களை இதுவரையும் வைத்திருந்தால் அதற்குச் சனங்கள்தான் பொறுப்பே தவிர, வேறு யாருமில்லை என்பதைச் சனங்கள் விளங்கிக் கொள்ள வேணும்.

அரசாங்கத்தைத் தெரிவு செய்வது சனங்கள். அரசாங்க உத்தியோகத்தர்களாக இருப்பதும் சனங்கள். அதிகாரிகளும் சனங்களே. அவர்களுடைய பிள்ளைகள் நமது பிள்ளைகள் படிக்கின்ற பாடசாலைக்குத்தான் வருகிறார்கள். இந்த அதிகாரிகளும் எங்களுடைய சந்தைக்கே வருகிறார்கள். அவர்களுக்கும் நாம்தான் மீன் பிடிக்கிறோம். அரிசி கொடுக்கிறோம். அவர்களுக்காகவும் சேர்த்தே நாங்கள் வயலில் வேலை செய்கிறோம். அவர்களுடைய வாகனங்களையும் நாங்கள்தானே திருத்தம் செய்கிறோம்.

நாங்கள் இல்லாமல் அவர்களால் இயங்கவே முடியாது. அப்படியிருக்கும் பொழுது அவர்களால் எப்படி எங்களை ஏமாற்ற முடியும்? எங்களிலேயே தங்கியிருப்போரை நாங்கள் அல்லவா வென்றிருக்க வேணும். அவர்களால் எதுவும் செய்ய முடியாதே.

எந்தச் சட்டமும் மக்களுக்கானவை என்றல்லவா சொல்லப்பட்டிருக்கின்றன. எல்லா அரசாங்கங்களும் மக்களுக்கு விசுவாசமாக நடக்கின்றன என்றுதானே சொல்கின்றன. அப்படியென்றால் இதெல்லாம் பொய்யா? இதெல்லாம் பொய் என்றால், இந்தப் பொய்கள் எப்படி பிரகாசமாக உயிர்வாழ்கின்றன?

சனங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். போரில் கொல்லப்படுகிறார்கள். அகதிகளாக அலைகிறார்கள். அவர்களுக்கு வீடில்லை. தொழில் இல்லை. சாப்பாடில்லை. மின்சாரமில்லை. படிக்க வசதியில்லை. அவர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள். ஏமாற்றப்படுகிறார்கள். புறக்கணிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் சொல்வதை எப்படி ஏற்றுக் கொள்வது?

உலகப் பெரும் அமைப்பான - உலகமே ஏற்றுக்கொண்ட - ஐ.நாவே இருக்கும்போது எப்படிச் சனங்கள் பாதுகாப்பில்லாமல் இருக்க முடியும்? எப்படி அவர்கள் அடிமைகளாகவும் அநாதைகளாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும் இருக்க முடியும்?

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க உலகத்தில் எந்த நீதிமான்களும் இல்லையா? அவ்வளவுக்கு உலகம் என்ன கெட்டுப் போயிற்றா? அல்லது அது சர்வாதிகாரிகளின் காலுக்குக் கீழும் பொய்யர்களின் கைகளிலுமா சிக்கியிருக்கிறது.

அப்படியென்றால் ஜனநாயக வழிப்படி தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைப் பற்றியும் நடத்தப்படும் தேர்தல்களைப் பற்றியும் உங்களின் அபிப்பிராயம் என்ன?

எதற்கும் எப்போதும் மற்றவர்களைக் குறைசொல்வதிலேயே பழக்கப்பட்டு விட்டார்கள் இந்தச் சனங்கள். அப்படிப் பொறுப்பில்லாமல் குறை சொல்வதே பழக்கமாகியும் வேலையாகியும் போய் விட்டது இவர்களுக்கு. இது தவறு. மன்னிக்க முடியாத குற்றம். இதை எந்தக் காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது.

இது அரசாங்கத்தையும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் மக்களுக்காகவே உழைக்கின்ற ஊழியர்களையும் அவமதிக்கின்ற செயல். ஆகையால் இதை எந்தக் காரணம் கொண்டும் மன்னிக்க முடியாது.

**ஜோசப் தயாளன்**

மக்களுக்காகவே இயங்குகின்ற அமைப்புகளிலும் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற சட்டங்களிலும் நம்பிக்கையற்று அவற்றை அவமதிக்கின்ற செயல். எனவே இப்படி அரசாங்கத்தையும் அமைப்புகளையும் சட்டங்களையும் குறைசொல்வோரும் குற்றஞ்சாட்டப்படுவோரும் மன்னிக்கப்பட முடியாதவர்கள்.

'மக்களுக்காக, அவர்களின் நலன்களுக்காக, அவர்களுடைய மேம்பாட்டுக்காக எத்தனை சிறப்புத்திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களைத் தீட்டுவதற்காக எத்தனை இரவுகளும் எத்தனையோ பகலுமாக பல அறிஞர்களும் ஆற்றலாளர்களும் முயற்சித்திருக்கிறார்கள். இதற்காகவே கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.



தீட்டப்பட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கமும் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கடுமையாகப் பாடுபடுகிறார்கள். இதையெல்லாம் ஏன் இந்தச் சனங்கள் புரிந்து கொள்கிறார்கள் இல்லை?

சனங்களைக் குழப்பக் கொண்டிருப்பவர்கள் யார்?

அப்படியென்றால், அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளும் சட்டங்களும் ஏற்பாடுகளும் நலத்திட்டங்களும் பிழை என்று இவர்கள் சொல்கிறார்களா?

இந்த அரசாங்கத்தையும் அரசாங்கத்தின் அமைப்பையும் உருவாக்கிய, இந்த அமைப்புகளில் உறுப்பினர்களாகவும் பணியாளர்களாகவும் இருக்கின்ற, இந்தச் சட்டங்களையெல்லாம் உருவாக்குகின்ற அறிஞர் பெருமக்களாகவுமுள்ள எல்லாவற்றையும் சனங்கள் எவ்வாறு குறை சொல்ல முடியும்?

தங்களுக்காகவே உருவாக்கப்பட்டும் இயங்கியும் வருகின்ற இவையெல்லாவற்றையும் மக்கள் குற்றம் சாட்டுவதாக இருந்தால் அது எப்படி நியாயமாகும்?

அப்படிக் குற்றம் சாட்டினால் அது தங்களைத்தாங்களே குற்றம் சாட்டுவதைப் போல தங்கள் முதுகில் தாமே அடித்துக் கொள்வதாகவே இருக்கும். ஏனெனில் இவற்றை உருவாக்கியவர்களும் தெரிவு செய்தவர்களும் மக்களே.

தாமே எல்லாவற்றையும் உருவாக்கி விட்டுப் பின்னர் அதற்காக மற்றவர்களைக் குறை சொல்வதும் மற்றவர்களைக் குற்றம் சாட்டுவதும் தவறு.

எனவே எப்படிப் பார்த்தாலும் சனங்களில்தான் பெரும்பாலான தவறும் தப்பும் இருக்கிறது. ஏனையவர்களிலும் ஏனையவற்றிலும் அதிக தவறுகளைக் காணமுடியவில்லை. அப்படித் தப்பையோ தவற்றையோ காண்பது அழகானதும் அல்ல. அது நியாயமானதும் அல்ல.

'மரமிருந்தால் சருகு விழத்தான் செய்யும். எந்த இனிய கனியிலும் கழிவுகளுக்கு இடமிருக்கும். ஒளியின் மறுபக்கம் இருள். ஆகவே எதிலும் தவறுகளும் குறைபாடுகளும் இருக்கும். இதை எல்லாம் பொருட்படுத்தலாமா?' - இப்படி ஓர் அரசியல்வாதி தன்னுடைய ஆதரவாளர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அந்த ஆதரவாளர்கள் இந்த அரசியல்வாதியை எண்ணியோ அவருடைய நியாயத்தைக் கண்டோ என்னவோ திகைத்துப் போனார்கள். ஆனால், அவர்களுடைய முகத்தில் மகிழ்ச்சி மட்டும் நிறைந்திருந்தது. தங்களுடைய தலைவன் மிக அறிவாளியாக இருக்கிறான். தாங்கள் சிந்திக்காத, தங்களுக்குத் தெரியாத பல அருமையான அற்புதமான சங்கதிகளை எல்லாம் அவர் தெரிந்து வைத்திருக்கிறாரே.

அடேயப்பா.

இந்த ஆச்சரியங்களால்தான் தங்களுக்கு எப்போதும் துன்பங்கள் நேர்ந்து கொண்டிருக்கின்றன என்று தெரியாத சனங்கள் வாய்கிழியக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

என்னமாதிரி ஒரு சமன்பாட்டை இந்த அரசியல் அறிஞர்கள் காண்கிறார்கள்?

இந்த மாதிரி அரசியலறிஞர்களை வைத்துக் கொண்டாடுகின்றன பல ஊடகங்கள். அதாவது, தொடர்ந்து கொண்டிருக்கும் பொய்களுக்கும் புலம்பல்களுக்கும் கொடுக்கின்ற சில்லறைகளுக்கும் போடுகின்ற பச்சைகளுக்கும் கொடுக்கின்ற இடமும் விளம்பரமும் கொஞ்சமல்ல. அப்படிக் கொடுத்து இவர்களையும் இந்தப் போக்குகளையும் வாழவைக்கின்றன பத்திரிகைகள்.

ஆகவேதான் இந்த அரசியலாளர் இப்பக் கழுதை விடுகிறார் அவர் சனங்களிடம்...

நம்புங்கள் நினைத்ததெல்லாம் நிறைவேறும் நீங்கள் இருந்தால் என்னோடு என்று...

ஆகவே குற்றங்களுக்கு எல்லோரும் தான் எப்போதும் பொறுப்பாக இருக்கிறோம். இதை இன்றே தவிர்ப்போம். ★





# தீர்ப்புக்கு காத்திருக்கும் தீவிரவாதிகள்

''இந்து - முஸ்லிம் ஒற்றுமை என்பது இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலானது மட்டுமல்ல... இந்தியாவைத் தனது வீடாக நினைக்கிற அனைவருக்குமானது. அவர்கள் எந்த நம்பிக்கையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி!'' - மகாத்மா காந்தி

இந்தியா தன் நிம்மதியைத் தொலைத்த நாட்களில் ஒன்று... 1992 டிசம்பர் 6. பாபர் மசூதியை மையம் கொண்டு புதிய கறுப்பு அத்தியாயம் அன்றுதான் ஆரம்பமானது. 18 ஆண்டுகள் கடந்த பிறகும் இந்து என்றும் முஸ்லிம் என்றும் பிரிவினை வாதம் பேசி, சிலர் பகை நெருப்பை மாறிமாறி வளர்க்க அதுவே காரணம் ஆனது. டிசம்பர் 6 ஆம் திகதி நெருங்கி வந்தாலே, எல்லா இடங்களிலும் பெரும் எண்ணிக்கையான பொலிஸாரைக் குவித்தாக வேண்டிய கட்டாயம், வழக்கமும் பழக்கமும் ஆனது!

'அயோத்தியில் ராமர் கோயில் இருந்த இடத்தில் தான் பாபர் மசூதி கட்டப்பட்டது' என்ற ஒற்றை வரிதான் இத்தனைக்கும் காரணம்! சுமார் 60 ஆண்டுகளாக இந்தக் கேள்வியை முன்வைத்து நடந்து வரும் வழக்கில், அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பை 2010 செப்டெம்பர் 24 ஆம் திகதி அளிப்பதாகத் தெரிவித்திருந்த போதும், தற்போது தீர்ப்பு அறிவிப்பது ஒருவார காலத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

1992 டிசம்பர் 6 ஐப் போலவே தீர்ப்பளிக்கும் தினமும் மறக்க முடியாத தினமாக மாறப்போகிறது.


'தீர்ப்பு எப்படி அமைந்தாலும்... அமைதி காக்க வேண்டும்' என்று இந்து, முஸ்லிம் சமூகங்களுக்கு இரு தரப்பு அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்துள்ளன. 'இது இறுதித் தீர்ப்பு அல்ல. இன்னும் நீதியைப் பெற, சட்டரீதியாகப் பல படிநிலைகள் உள்ளன' என்று மக்களுக்கு வலியுறுத்தி, அமைதி காக்கும் வேண்டுகோளை இந்திய மத்திய அரசு விடுத்துள்ளது. உத்தரபிரதேச மாநில அரசாங்கம் ஒரு படிமேலே போய், மாநிலத்தின் பல இடங்க ளில் தற்காலிகச் சிறைகளை அமைக்கும் நடவடிக்கைகளில் இறங்கி உள்ளது. கலவரம் ஏற்படுத்துவோர் எண்ணிக்கை அதிகமானால், அவர்களை அடைக் கச் சிறைகளில் இடம் இருக்காதோ, என்ற கவலை!

பாபர் மசூதி பிரச்சினையின் முன் கதைச் சுருக்கம் என்ன?

1528 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது பாபர் மசூதி. ஆனால், அங்கு விக்ரமாதித்தன் என்ற இந்து மன்னர் ராமர் கோயிலைக் கட்டி இருந்தார் என்பதும், பாபரின் தளபதி மீர்பாகி, அந்தக் கோயிலை இடித்துவிட்டுத்தான் மசூதியை எழுப்பினார் என்பதும் இந்துத்துவ இயக்கங்களின் குற்றச்சாட்டு. அயோத்தியில் ராமர் பிறந்த இடமும் இதுவே என்கிறார்கள்.

ராமஜென்ம பூமி முக்தி யக்ஞ சமிதி என்ற இந்து அமைப்பின் செயலாளரான ஜஸ்டிஸ் தேவகி நந்தன் என்பவர், 'கஸாதி எனப்படும் 84 தூண்களைக் கொண்டதாக ராமர் கோயில் இருந்தது. இப்போது உள்ள மசூதியிலும் அதே மாதிரியான தூண்கள் உள்ளன' என்கிறார். 1853 ஆம் ஆண்டே ராமர் பிறந்த இடம் தொடர்பாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மோதல் நடந்து 75 பேர் கொல்லப் பட்டனர். 1857 ஆம் ஆண்டு இந்து சாமியார் ஒருவர், பாபர் மசூதி வளாகத்தில் ஒரு சிறு பகுதியில் ராமர் கோயில் அமைத்தார். அப்போதைய பிரிட்டிஷ் அரசு, இந்துக்களும் முஸ்லிம்க ளும் தனித்தனியே வழிபாடுநடத்துவதற்கு வசதியாக சுவர் ஒன்றைக் கட்டிக் கொடுத்தது. ஆனாலும், அமைதி இல்லை.

1528 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது பாபர் மசூதி. ஆனால், அங்கு விக்ரமாதித்யன் என்ற இந்து மன்னர் ராமர் கோயிலைக் கட்டி இருந்ததர் என்பதும், பாபரின் தளபதி மீர்பாகி, அந்தக் கோயிலை இடித்துவிட்டுத்தான் மசூதியை எழுப்பினார் என்பதும் இந்துதத்துவ இயக்கங்களின் குற்றச்சாட்டு.



1949 ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று முஸ்லிம்கள் பாபர் மசூதியில் இரவுத் தொழுகையை நிறைவேற்றிவிட்டு வீடுகளுக்குச் சென்றனர். மீண்டும் அதிகாலைத் தொழுகைக்காக வந்தபோது ராமர், சீதை, லட்சுமணர் சிலைகள் வைக்கப்பட்டு இருந்தன. அன்றைய பிரதமர் நேரு பதறிப்போனார்.

''அயோத்தியில் நடந்தவை என்னுடைய அமைதியைக் குலைத்துள்ளன. மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான முன்னுதாரணம் ஒன்று அங்கே ஏற்படுத்தப்பட் டுள்ளது'' - நேரு ஒரு தீர்க்கதரிசிதான் என்பதையும் அவரின் பயம் நியாயம் நிறைந்தது என்பதையும் அடுத்தடுத்த ஆண்டுகளில் நடந்த சம்பவங்கள் நிரூபித்தன.





வெறுமனே மதவாதிகள் மட்டுமே பிரச்சினைகளுக்குக் காரணமாக இருக்கவில்லை. பாபர் மசூதிப் பிரச்சினையைத் தங்கள் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்காக நேருவுக்குப் பின் அமைந்த அரசுகளும் பயன்படுத்திக்கொண்டன என்பதுதான் சோகமானது. 1983 ஆம் ஆண்டு பாபர் மசூதி உள்ள இடத்தில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்ற இயக்கத்தை, விஸ்வ ஹிந்து பரிஷத் தொடங்கியது. இந்துக்களும் சென்று வழிபடுவதற்கு வசதியாக, பாபர் மசூதியின் கதவுக ளைத் திறந்துவிடும்படி, பைஜாபாத் மாவட்ட நீதிபதி கட்டளையிட்டார். பாபர் மசூதி அருகே இந்துக் கோயில் கட்ட ராஜீவ் காந்தியின் அரசாங்கம் அனுமதி அளித்தது. பிறகு, நடந்த கலவரங்களில் சுமார் 500 பேர் இறந்தனர்.

40 ஆண்டுகளுக்குப் பிறகு பாபர் மசூதி அமைந்துள்ள இடத்தில் ராமர் கோயிலைக் கட்டியே தீருவது என்று விஸ்வஹிந்து பரிஷத் அமைப்பு தொடங்கிய முயற்சிகளின் முடிவுதான் கறுப்பு டிசம்பர் 6.

இந்து ஆதரவு அமைப்புகள் இதைக் கையில் எடுத்து, ராமர் சிலையைப் பூஜை செய்து, அதைக் கிராமங்கள் தோறும் ஊர்வலம் நடத்தியதும், இதற்காக ஒவ்வோர் இந்துவும் குறைந்தபட்சம் ரூ 1.25 தர வேண்டும் என்றதும், செங்கல் சேகரிப்பு நடத்தியதும், அத்வானி ரதம் விட்டதும், அதைப் பிரதமர் வி.பி.சிங் தடுத்ததால் அவரது ஆட்சியை பி.ஜே.பி. கவிழ்த்ததும் அனைவரும் அறிந்த விஷயங்கள்.

அத்வானி ரத யாத்திரையை அறிவித்த செப்டெம்பர் முதலாம் திகதிக்கும் நவம்பர் 20 ஆம் திகதிக்கும் இடையிலான காலத்தில், இந்தியா முழுவதுமான 116 வகுப்புக் கலவரங்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 564. அயோத்தி அமைந்திருக்கும் உத்தரப்பிரதேசத்தில் இறந்தவர்கள் மட்டும் 224 என்று சொல்கிறது ஒரு புள்ளிவிவரம்.

கிட்டத்தட்ட ஓர் உள்நாட்டு யுத்தத்துக்கான நெருக்கடியை இந்தியா சந்தித்தது. அதன் உச்ச கட்டம்... அந்த டிசம்பர் 6. அன்றைய தினம் பகல் 12.15 மணிக்கு ராமர் கோயிலைக் கட்டும் பணிகள் தொடங்கும் என்று அறிவித்தார்கள். அதற்காக, விசுவ ஹிந்து பரிஷத், பாரதீய ஜனதா, ஆர்.எஸ்.எஸ். இயக்கங்களைச் சேர்ந்த இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டனர். அருகிலேயே பிரமாண்டமான பொதுக் கூட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

கூட்டத்தில் தலைவர்கள் பேசிக் கொண்டு இருந்தபோது, கூட்டத்தின் ஒரு பகுதியினர் 'ஜெய் ஸ்ரீராம்' என்று முழங்கியபடி, பாபர் மசூதி வளாகத்தை நோக்கிப் பாய்ந்து சென்றனர். பொலிஸாரால் தடுத்து நிறுத்த முடியவில்லை. தடியடி நடத்தி, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினார்கள். அதற்குப் பலன் இல்லை. பிறகு நடந்ததை நாடறியும்.

அன்று இந்தியாவின் மதச்சார்பின்மை இரண்டு மணி நேரத்தில் இடித்துத் தள்ளப்பட்டது!

அயோத்தியில் எரிந்த தீ, அடுத்து மாநிலம் முழுவதும் பல்வேறு இடங்களில் பரவியது. டெல்லி, மும்பை, ஜெய்ப்பூர், ஹைதராபாத் போன்ற நகரங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அன்று ஒரே நாளில், 233 பேர் பலியானார்கள். அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 68 பேர் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் நடந்துகொண்டு இருக்கிறது. மத்திய அரசால் லிபரான் கமிஷன் அமைக்கப்பட்டது. அத்வானி, முரளி மனோகர் ஜோஷி போன்றவர்கள் மீது அந்தக் கமிஷன் குற்றம் சாட்டியது. ஆனால், அதன் மீது இதுவரை இந்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில்தான் அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்பு! பிரச்சினைக்கு உரிய சில ஏக்கர் நிலம் இந்துக்களுக்கு உரியதா, முஸ்லிம்களுக்கு உரியதா என்பதைத் தீர்ப்பு சொல்லட்டும். ஆனால், அன்பும் சகோதரத்துவமும் அமைதியும் நல்லிணக்கமும் இரு தரப்புக்கும் உரியவை என்பதைக் காலம் சொல்லட்டும்!

இந்திய தேசத்தின் உள்நாட்டு அமைதியைக் காக்கும் பொறுப்பு ஒவ்வொரு இந்தியருக்கும் இருக்கிறது ஏனென்றால், இந்தியா, இந்தியர்கள் அனைவரினதும் சந்ததிக்கும் சொந்தமானது!

ரீ.சிவக்குமார்

# கொங்கோவில் உக்கிரமடைந்துவரும் கும்பல் கற்பழிப்புகள்!



> என்னை நெருங்கிய கிளர்ச்சியாளர்களின் தலைவன் என்னிடம் இரு கேள்விகளைக் கேட்டான். என்னை உனது கணவனாக ஏற்றுக்கொள்கிறாயா அல்லது உன்னை நாங்கள் கும்பலாகக் கற்பழிப்பதை விரும்புகிறாயா என்பதே அக்கேள்விகள். நான் எவ்வித தயக்கமும் இன்றி என்னை அவர்கள் கற்பழிக்க சம்மதம் தெரிவித்தேன். காரணம்................?

யுத்தக் காலங்களில் பெண்கள் தனித்தனியாக வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவது வழமையான சம்பவம். எல்லா நாடுகளிலும் இது நடந்து வந்துள்ளது. எனினும், கொங்கோ நாட்டில் அதைவிட ஒருபடி மேலேசென்று கும்பல் கும்பலாக பெண்களும் சிறுமிகளும் கற்பழிக்கப்பட்டு வருவது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. யுத்தமுனையில் பாவிக்கப்பட்டுவரும் இரத்தம் சிந்தாத பலிக் கடாக்களாக இந்த அப்பாவிப் பெண்கள் சிக்கியுள்ளனர்.

''என்னை நெருங்கிய கிளர்ச்சியாளர்களின் தலைவன் என்னிடம் இரு கேள்விகளைக் கேட்டான். என்னை உனது கணவனாக ஏற்றுக்கொள்கிறாயா அல்லது உன்னை நாங்கள் கும்பலாகக் கற்பழிப்பதை விரும்புகிறாயா என்பதே அக் கேள்விகள். நான் எவ்வித தயக்கமும் இன்றி என்னைக் கற்பழிப்பதையே விரும்புகிறேன் என்றேன்.''

காரணம்.... அவனை நான் கணவனாக ஏற்றுக்கொள்ளச் சம்மதம் தெரிவித்திருந்தால் நிச்சயமாக எனது கணவனைக் கொலை செய்திருப்பான். தங்களது தந்தையின் சாவுக்கு தாயே காரணமென எனது எட்டுப் பிள்ளைகளும் காலம் முழுவதும் என்னைச் சபித்துக் கொண்டிருப்பதைவிட அந்தக் கும்பல் என்னைக் கற்பழிக்கும் வேதனை பெரிதாகப் படவில்லை.

கொங்கோ நாட்டில் கும்பல் கற்பழிப்புக்கு தன்னைப் பலிகொடுத்த எட்டுப் பிள்ளைகளின் தாயின் வேதனைமிக்க வாக்குமூலம் இது.

- இவ்வாறு வெளிவராத ஏராளமான அவலங்கள் அந்த நாட்டில் புதைந்து கிடக்கின்றன. பல தசாப்தங்களாக அந்த நாட்டில் அரங்கேறி வரும் இத்தகைய கொடுமைகள் இப்போது உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. கிளர்ச்சியாளர்கள் இதனை ஓர் இரத்தம் சிந்தாத கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

உலக ஊடகங்களுக்குக் கிடைத்துள்ள புதிய செய்திகளின்படி கொங்கோ நாட்டின் வட பகுதியில் 'கும்பல் கற்பழிப்புகள்' உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன. அங்கு சுமார் 240 பெண்கள் கிளர்ச்சியாளர்களின் கும்பல் கற்பழிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பெரும் எண்ணிக்கையான சிறுமிகளும் இவ்வாறு கற்பழிக்கப்பட்டுள்ளனர் என சில ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கிளர்ச்சியாளர்கள் பல நகரங்களை தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டு வந்துள் ளனர். அத்துடன் எவ்வித தங்குதடையு மின்றி தமது அராஜகத்தை தொடர்கின்றனர்.

இந்த மிலேச்சத்தனமான சம்பவங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் மீது பலத்த குற்றச்சாட்டை உருவாக்கியுள்ளன. அதற்குக் காரணம், ஐ.நா. சமாதானக் குழு இப்பிரதேசத்தில் நிலை கொண்டிருப்பதே. கும்பல் கற்பழிப்பு உச்சக்கட்டத்தை அடைந்துள்ள கொங்கோவின் வட பகுதியிலுள்ள கிவ் பிராந்தியத்திலிருந்து வெறும் 19 மைல் தூரத்திலேயே ஐ.நா. அமைதிப் படைகளின் பிரதான முகாம் அமைந்துள் ளது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகள் இந்த மிலேச்சத்தனமான கற்பழிப்புச் சம்பவங்கள் பற்றி ஆக்ரோஷ மாக கண்டனக்குரல்களை எழுப்பும் வரையும் ஐக்கிய நாடுகள் சபைக்கு இச் சம்பவம் பற்றித் தெரியவராதது உலக அதிசயம்.

அரச சார்பற்ற நிறுவனமான IMC (International Medical Corps) நிறுவனத் தின் பேச்சாளர் ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், இச்சம்பவம் பற்றி ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி தங்கள் நாட்டிலுள்ள ஐ.நா. தூதரக அலுவலகத் துக்கு முறைப்பாடு தெரிவித்தபோதும் அம் முறைப்பாடு கிடப்பில் போடப்பட்டு விட்டதாகக் கூறினார். அதன்பின் கொங்கோ நாட்டின் வடபகுதிக்கு நேரடி விஜயம் மேற்கொண்ட IMC அதிகாரிகள் இக் கும்பல் கற்பழிப்புச் சம்பவங்களில் 200 தொடக்கம் 400 கிளர்ச்சியாளர்கள் பங்கேற் றுள்ளனர் என்று கண்டுபிடித்துள்ளனர்.

எனினும், வழக்கம்போல ஐக்கிய நாடுகள் சபை இக் குற்றச்சாட்டை நிராகரித்துள்ளது. அந்த அமைப்பின் பேச்சாளரான விஜினோ மொபோமே குறிப்பிட்ட பிரதேசங்களில் தங்களது அமைதிப் படையின் வழக்கமான ரோந்துப்பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் கிளர்ச்சியாளர்கள் அராஜகம் நடத்தவில்லை எனவும், அப்பிரதேசத்திலுள்ள மக்கள் இது சம்பந்தமாக எவ்வித முறைப்பாடுகளையும் தமக்குத் தெரிவிக்கவில்லை எனவும் கூறுகிறார்.

எவ்வாறாயினும், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டித்து அறிக்கை விடுத்துள்ளார். அத்துடன் கொங்கோவில் உள்ள அமைதிப் படைகளின் பிரதி பிரதம செயலாளரை சம்பவ இடத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். பிரதி பிரதம செயலாளர் அத்துல் காரிம், கற்பழிப்புக்குள் ளான பெண்களைச் சந்தித்து உரையாடும்படி பணிக்கப்பட்டார்.

இதுவரை ஐக்கிய நாடுகள் சபைக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி நான்கு நாட்களில் 16 கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்தக் கும்பல் கற்பழிப்புக்கு 179 பெண்கள் உட்படுத்தப்பட்டுள் ளனர் என்று தெரியவருகிறது.

கொங்கோ குடியரசு 6 கோடியே 60 லட்சம் சனத்தொகையைக் கொண்டது. 1960ஆம் ஆண்டில் அந்நாட்டின் பிரதமராக இருந்த பட்ரிக் லுமும்பா இராணுவ சதிப்புரட்சியில் கொல்லப்பட்டார். அதன் பின் பதவியேற்ற ஜோசப் மொபுட்டு பனிப் போரொன்றின் காரணமாக அமெரிக்காவின் அடிவருடியானார். 1997இல் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கும் போர்வையில் ருவாண்டா படைகள் கொங்கோவுக்குள் நுழைந்தன. அச்சமயம் விரைந்து செயற்பட்ட கிளர்ச்சியாளர்கள் லோரன்ஸ் கபீலாவை ஜனாதிபதியாக நியமித்தனர். எனினும், யுத்தநிறுத்தம் அங்கு ஏற்படவில்லை. தற்போதைய கொங்கோ அரசுக்கு அங்கோலா, சிம்பாப்வே ஆகிய நாடுகளின் ஆதரவு உள்ளது. அண்மையில் நடைபெற்ற தாக்குதலுக்கு ருவாண்டா புரட்சியாளர்களும் பங்களிப்பு வழங்கியதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.



## - சுபிபர் -

அரச சார்பற்ற நிறுவனமொன்றின் அதிகாரியான ஜோசலின் கெலி, கொங்கோ நாட்டைப் பற்றி நீண்ட நாள் ஆராய்வுகளை மேற்கொண்டவர். அவர் சந்தித்த 22 வயதுடைய முன்னாள் பிள்ளைப் பராமரிப்பாளரான இம்மானுவேல் எனும் பெண்ணின் கருத்துப்படி, அரசாங்கத்தால் உதாசீனம் செய்யப்படுவதை ஆட்சேபித்தே கிளர்ச்சியாளர்கள் இத்தகைய கற்பழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்றார். நீண்ட நாட்களாகக் காடுகளில் வாழ்ந்து விரக்தியடைந்த கிளர்ச்சியாளர்கள் தான்தோன்றித்தனமாக இத்தகைய கற்பழிப்புச் சம்பவங்களில் ஈடுபடுவதன் மூலம் தங்களை ஆசுவாசப்படுத்திக் கொள்கின்றனர் எனவும் இம்மானுவேல் கூறியுள்ளார்.

பகிரங்க இடங்களில் மேற்கொள்ளப் படும் இத்தகைய கூட்டுக் கற்பழிப்புகளின்போது துவக்குக் குழாய்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

நீண்ட காலமாக நடைபெற்று வந்த இந்தக் கூட்டுக் கற்பழிப்புச் சம்பவங்களுக்கு முகம்கொடுத்த பெரும் எண்ணிக்கையான பெண்கள் புனர்நிர்மாண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் பெரும்பாலானோர் உளரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்; பால்வினை நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஹோமா நகரிலுள்ள புனர்நிர்மாண முகாமில் இப்போது தங்கியுள்ள 15 வயதுச் சிறுமி தொடர்ந்து ஒரு வருட காலமாக வல்லுறவுக்குட்படுத்தப்பட்டார் எனவும், பத்து கிளர்ச்சியாளர்கள் மாறி மாறி தன்னுடன் உறவுகொண்டு வந்தனர் என்றும் ஜீவனற்ற குரலில் தெரிவித்தார்.

உலகின் பிரமாண்டமான அமைதிப் படை நிலைகொண்டுள்ள கொங்கோ நாட்டில் இத்தகைய மனிதாபிமானமற்ற மிலேச்சத்தனமான சம்பவங்கள் நடைபெறுவது வெட்கக்கேடானது. ஐக்கிய நாடுகள் சபையினது, ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தினதும் கையாலாகத் தனத்தையும் சீரற்ற நிர்வாகத்தையும் இது தெளிவாக விளக்குகின்றது.

2010ஆம் ஆண்டு 'சமாதானமும் வெளிநாட்டுக் கொள்கையும்' பற்றி ஆராயும் நிறுவனமொன்று கொங்கோ நாட்டை உலகின் பாரிய அராஜகங்கள் நடக்கும் நாடுகளின் ஐந்தாவது இடத்தில் கணித்திருப்பது வேதனைக்குரிய விடயமென்பது குறிப்பிடத்தக்கது.

# உயிர் வலிக்கும் கணங்கள்...!!



# இடம்பெயர்ந்து வந்த எமக்கு கிடைத்த பரிசா?



அந்த இறுதி நாட்கள், வன்னிமண் அப்பாவி தமிழ் மக்களின் குருதியை குடித்தது. அதில் ஒருவன்தான் எனது தம்பியும். எங்களின் சொந்த இடம் 17ஆம் கட்டை நெடுங் கேணி. வன்னியில் நடந்த போர் காரணமாக இடம் பெயர்ந்து, இடம் பெயர்ந்து பல இடங்களில் தறப்பாள் கொட்டகைகள் போட்டு இருந்தோம். இரண்டு, மூன்ற நாட்கள் மட்டுமே ஓர் இடத்தில் இருப்போம். ஷெல்கள், ஆட்லறி ஷெல்கள், ரவைகள், கொத்துக் குண்டுகள் என மக்கள் இருந்த இடங்கள் அழிந்துகொண் டிருந்தன. பலர் உயிரிழந்தனர். அவ்விடத்தில் இருக்க முடியாத நிலைமை; மீண்டும் இடம் பெயர்ந்தோம். பாதுகாப்பு வலயம் என்று தேவிபுரத்தையும் மற்றும் சில இடங்களையும் அறிவித்தார்கள். முச்சக்கர வண்டிகளில் உடுப்பு, சமைப்ப தற்கு இரண்டு மூன்று சட்டிகள் ஆகியவற்றை மட்டும் எடுத்துக் கொண்டு தேவிபுரம் ஆச்சிதோட் டம் சென்றோம். அங்கு பதுங்கு குழி அமைப்பதற்கு உகந்த மண் இருக்கவில்லை. சின்னப் பதுங்குகுழி ஒன்று அமைத்து இருந்தோம். பாதுகாப்பு வலய மென சொன்ன இடத்துக்கே ஷெல் வந்து வீழ்ந்து கொண்டி ருந்தது. பதுங்கு குழியை விட்டு வெளியில் வர முடியாது. அகோர மோதல் நடந்துகொண்டு இருந்தது.

06.02.2009 வெள்ளிக்கிழமை காலை 06.35 மணியளவில் ஷெல் ஒன்று எனது கொட்டகையில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் வந்து வீழ்ந்து வெடித்தது. ஒரே அவலக்குரல்கள், ஐயோ... ஐயோ... தறப்பாள்களைத் தூக்கி தென்னை வட்டுக்குள் மேல் போட்டிருந்தது. ஒரே புகை மண்டலம். அழும் குரல்கள், ஒப்பாரிகள். ''அம்மா, அப்பா'' என சின்னஞ் சிறு மழலைகள், பிள்ளைகளின் கதறல்கள். என் மனைவி எங்கே? என் கணவன் எங்கே? என் பிள்ளைகள் எங்கே? என்று அனைவரும் திக்குத் திசை மாறி ஓடினர் பதுங்கு குழிக்கு. அங்கு சிலர் காயப் பட்டும், பலர் இறந்தும் காணப்பட்டனர். காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றுவதற்கு கூட ஒருவரும் வரவில்லை. அவர்கள் பதுங்கு குழிக்கு வெளியில் வந்தால் அவர்களுடைய உயிரையும் ஷெல் குடித்து விடும். 'காப்பாற்றுங்கோ..' 'காப்பாற்றுங்கோ' என்ற சத்தமே என் செவிகளில் ஒலித்தது. உடனே நான் அவ்விடத்துக்கு ஓடிப்போனேன். ஒரே இரத்த வெள்ளம்... கை, கால் துண்டிக் கப்பட்ட நிலையில் பலர் உயிருக்கு போராடிக்கொண்டு இருந்தார்கள். அவ்விடத்துக்கு போனபின்னர்தான் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் இறந்துகிடந்தது தெரிந்தது. ஒருவருக்கு கால் துண்டிக்கப்பட்டு இருந்தது. 'ஐயோ...' 'ஐயோ' என வாய்க்குள் முனங்கியபடியே அவர் கிடந்தார். நான் உடனே அவரை தூக்கி என் மடியில் வைத்து சாரத்தை கிழித்து கட்டுப் போட்டேன். கட்டுப் போட்டுக் கொண்டு இருக்கும் போதே என் மடியில் அவரது உயிர் போனது. 'ஏன் இந்த உலகில் பிறந்தோம். இதுதான் எமது வாழ்க்கையா?' என என்மனதில் நினைத் துக்கொண்டு காயப்பட்டவர்களை ஏற்றிக்கொண்டு இருந்தபோது திடீரென இன்னுமொறு ஷெல் வந்து வீழ்ந்து வெடித்தது. என் வீட்டுக்கு பக்கத்திலே அது வெடித்தது. நான் அவ்விடத்தை நோக்கி வேகமாக ஓடினேன். எனது அம்மா ''மகனே, மகனே'' என்று கத்தினார். நான் என்ன செய்வது. கை,

> **அந்த இறுதி நாட்களில் வன்னியில் நேர்ந்த அவலங்கள்**

கால் எல்லாம் நடுங்கியது. எனது தம்பி (பொன்ராஜ்) பதினைந்து வயது. ஷெல் பீஸ் ஒன்று தம்பியின் தொண்டையை கிழித்துச் சென்றது. உடனே தம்பியின் தொண்டையை துணியால் கட்டிவிட்டு வீதிக்கு கொண்டோடினோம். காயக்காரர்களை ஏற்றி வந்த வாகனத்தில் தம்பியை ஏற்றினோம்.

நானும் எனது நண்பன் மேனனும் மக்களோடு மக்களாய் இடம்பெயர்ந்தோம். மாத்தளன், பொக்கனை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் என வாகனங்க ளிலும் முச்சக்கர வண்டிகளிலும் சென்றபோது வீதியில் நகர இயலாத அளவுக்கு நெரிசல். காயக்காரர்கள் மயக்க நிலையில் கிடந்தார்கள். காயக்காரர்களை ஏற்றிச் சென்ற வாகனம் முச்சக்கர வண்டி நகர்ந்ததை போல நகர்ந்துகொண்டு இருந்தது. வாகனத்திலேயே இரண்டு பேர் இறந்து விட்டனர். தேவிபுரம் வைத்தியசாலைக்கு ஒன்றரை மணி நேரம் கழித்தே வாகனம் போய் நின்றது. அவசர அவசர மாக காயக்காரர் களை இறக்கி னோம். எனது தம்பியை எனது நண்பனின் உதவியுடன் இறக்கினேன். வைத்தியசாலை யில் மருந்து வசதிகள் ஒன்றும் இல்லை. தம்பிக்கு சேலேன் ஏற்றினார்கள். எனக்கு இரத்தத்தைக் கண்டவுடன் மயக்கம்தான் வந்தது. தம்பி உயிருக்கு போராடிக் கொண்டு இருந்தான். நண்பன் மேனனிடம் 'பார்த் துக்கொள்' என சொல்லிவிட்டு போக தம்பி 'அம்மா', 'அம்மா' என கத்தினான். மூன்றாவது சேலைன் ஏறியது. நான் மயங்கி விட்டேன். மயக்கம் தெளிந்த பின்னர் எழும்பித் தம்பியைப் பார்த்தேன். தம்பியை பெட்சீட்டால் மூடி விட்டிருந்தனர்.

என் நண்பன் என்னருகில் வந்து ''டேய் குமார், 6 சேலைன்கள் ஏற்றினார் கள், 'அம்மா' என்ற சத்தத்தோடு எங்கள் எல்லோரையும் விட்டு பிரிந்து போய்விட்டான்.....'' என்றான். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.. என் தம்பியின் உடலை வீட்டுக்குக் கொண்டு போக இயலாத நிலையில் என்ன செய்வது? நிரந்தரமான வீடு இன்றி இடம் பெயர்ந்து வந்த எமக்கு கிடைத்த பரிசா? மனதிலே வேதனை.

தம்பியின் உடலை லான்ட்மாஸ்டர் ஒன்றில் ஏற்றினோம். தேவிபுரம் வீதி நோக்கி அது ஓடியது. இறந்தவர்களை புதைக்கக்கூட ஓர் இடமும் இல்லை. வயல்வெளியிலும் வீட்டுக்கு, அருகாமை யிலும், வீதியோரங்களிலும் பிணங்க ளைப் புதைத்தனர். காட்டு கரையொன் றில் கிடங்கு வெட்டினோம். அப்போதும் அறம்புறமாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்துக்கொண்டிருந்தன. தம்பியைப் புதைப்பதற்கு கிடங்கு வெட்டியபோது மீண்டும் ஷெல்லடி தொடங்க, வெட்டியவர்கள் வெட்டிய கிடங்குக்குள் இறங்கிவிட்டனர். அவசர அவசரமாக தம்பியின் உடலைப் புதைத்து விட்டு பின்பு நாங்கள் அவ்விடத்தை விட்டு பொக்கனைக்கு வந்து சேர்ந்தோம். அங்கும் ஷெல்கள் உயிர்களை பலி எடுத்துக்கொண்டுதான் இருந்தன. அந்த இறுதி நாட்கள் ஒரே சோகமும், துன்பமும், துயரமும். இப்படியே ஒரு மாத காலம் உருண்டு ஓடியது.

அரிசி விலை உச்சம். விறகு இல்லை. காசு இருந்தும் வாங்க இயலாது. எங்கும் போக இயலாது. பதுங்குகுழிக்கு அருகில் இருந்தோம். வணங்காத கடவுள் இல்லை. சில வேலை சாப்பிடுவது கூட இல்லை. இப்படியே நாட்கள் நகர்ந்தன.

20.09.2009 விடிந்தது. அன்று நெருப்புக்குள் எரிந்தது மாத்தளன், பொக்கனை! ரவைகள் நிலத்தை உழுதன. 5இஞ்ச் ஷெல்கள் வந்து மக்களின் உடலைப் பதம் பார்த்தன. இறந்தவர்களை அப்படியே பதுங்குகுழிக்குள் போட்டு மூடினார்கள். சாப்பாடு இன்றி சின்னஞ்சிறுசுகள் பசியால் அழுதன. பால்மா இல்லை. எல்லோரும் கடற்கரையை வந்து சேர்ந்தனர். ஆர்.பி.ஜி. ஷெல் ஒன்று தறப்பாள் மேல் வீழ்ந்து தறப்பாள் ஆகாயத்தில் பட்டமாகப் பறந்தது.

அன்று 20.04.2009. இராணுவத்தினர் அங்குவந்தனர். அவ்விடத்தில் இருந்த மக்களை கொண்டுசென்று வவுனியா செட்டிக்குளம் நலன்புரி நிலையத்தில் விட்டனர். அங்கு கொண்டுவந்து விட்டவுடன் புலிகள் அமைப்பில் இருந்தவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதா கவும், பின்பு பெற்றோர்களிடம் அவர்களை ஒப்படைப்பதாகவும் அறிவித்தனர். நாங்கள் அனைவரும் அவ்விடத்துக்கு சென்றவுடன் எம்மை ஏற்றிக்கொண்டு வந்து புனர்வாழ்வு மையங்களில் விட்டனர்.

நாங்கள் வன்னியில் இருக்கும் போது கூட பெற்றோர்களிடம் ஒன்றாய் இருந்தோம். வன்னியில் அனுபவித்த துன்ப துயரங்களை விட இப்பொழுது புனர்வாழ்வு மையங்களில் நிம்மதியின்றி வாழ்கிறோம். 'விடுதலை' எனும் தீர்ப்பு பொய்யாகிப் போனதால் சுவாசம் கூட சுமையாகி விட்டது.

- ஐயாத்துரை
லசிக்குமார் -

# தமிழ் மக்களுக்கான அரசியல்

இலங்கைத் தமிழர்களின் முன்னாலுள்ள பிரதான சவால்கள் என்ன? இந்தச் சவால்களை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் என்ன? இந்தச் சவால்களை எப்படி, எவ்வளவு காலத்துக்குள் தீர்த்துக்கொள்ளலாம்? இப்படி ஒரு சிறய கேள்விக்கொத்தை முன்வைத்தார் நண்பர் ஒருவர்.

நண்பரின் நோக்கும் ஆதங்கமும் மிகச் சரியானதே. அதேவேளை, குறிப்பாக இப்படி அவர் கேட்டவுடன், இந்தக் கேள்விகளுக்கான பதில்களைச்சொல்ல முடியவில்லை. ஆனாலும் இந்தக் கேள்விகளை நிராகரிக்கவும் முடியாது. அது மட்டுமல்ல, இந்தக் கேள்விகளுக்கான பதில்களில் தான் ஈழத் தமிழர்



களின் எதிர்காலமும் வாழ்க்கையும் தங்கியுள்ளது.

ஆகவே, எப்படியோ இவற்றுக்கான பதிலைக் கண்டே ஆகவேண்டும். சரி, இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் என்ன? இந்தப் பதில்களை யார் காண்பது? எப்படிக் காண்பது?

முதலில், இலங்கைத் தமிழர்களின் முன்னாலுள்ள சவால்களாக இன்று முக்கியமாக இருப்பவை, 1. மீள்குடியேற்றமும் புனர்வாழ்வும், புனரமைப்பும். 2. தமிழர் பிரதேசங்களின் அபிவிருத்தி. 3. இனப்பிரச்சினைக்கான தீர்வு - அரசியல் உரிமைகள்.

இந்த மூன்றும் இன்று இலங்கைத் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள்; ஆதாரப் பிரச்சினைகள்; அவசியப் பிரச்சினைகள். ஆகவே, இந்த மூன்று பிரச்சினைகளுக்கான தீர்வையும் காணவேண்டியது அவசியமாகும். இவற்றுக்கான தீர்வைக் காண்பதே இலங்கைத் தமிழர்களுக்கான அரசியலாகும்.

இதில் முதலாவது விவகாரம், மீள்குடியேற்றமும், புனர்வாழ்வும் புனரமைப்பும். அதாவது மீள் அமைப்பும் மீள் கட்டுமானமுமாகும். இந்த விடயத்தில் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை உட்பட அகதி வாழ்வுச் சிக்கல்கள் வரையில் தீர்க்கப்படுவற்கான வாய்ப்புகளுண்டு. ஆனால், இதுவரையிலான மீள்குடியேற்றம் என்பதும், மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மக்களுக்கான உதவிகள் என்ற வகையிலும் குறிப்பிடத்தக்க, திருப்திகரமான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வளவுக்கும் மீள்குடியேற்றத்துக்கும் புனர்வாழ்வுக்கும் எனத் தனியான அமைச்சே உண்டு. இருந்தபோதிலும், மீள்குடியேற்றப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க முடியவில்லை. குறைந்த பட்சம் ஐம்பது வீதமான குறைபாடுகள் கூடத் தீர்த்துவைக்கப்படவில்லை.

மீள்குடியேற்ற விவகாரத்தில் தமிழ்க் கட்சிகளாலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் தான் எதனையும் சாதிக்க முடியவில்லை. வெறுமனே கைகளைப் பிசைந்துகொண்டு, மனதிற்குள் குமுறிக்கொண்டும் குறைப்பட்டுக் கொண்டும் இருப்பதைத் தவிர இத்தரப்புகளால் வேறு எதனையும் செய்யமுடியவில்லை.

ஆகையால் மீள்குடியேற்றப் பிரச்சினை என்பது இன்று மிகப்பெரியதொரு சவாலாகவே மாறியுள்ளது. அரசின் விருப்பு வெறுப்புக்களுக்கமையவே அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. அரசின் நிகழ்ச்சி நிரல் மட்டுமே இதில் பிரயோகப்படுத்தவும் படுகிறது.

இரண்டாவது விவகாரம், வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசங்களில் அபிவிருத்தி தொடர்பானது. இதுவும் அரசின் நிகழ்ச்சி நிரலுக்கும் விருப்பு - வெறுப்புகளுக்கும் உட்பட்டே நடைபெறுகின்றது.

ஆனால், மீள்குடியேற்றமும் அபிவிருத்தியும் தமிழ் பேசும் மக்களினதும் தமிழ் பேசும் மக்களின் வாழிடங்களினதும் அவசியத் தேவைகள். ஏனெனில், இலங்கைத் தீவில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் பேசும் மக்களும் அவர்களுடைய பிரதேசங்களும் பாதிக்கப்பட்டு வந்துள்ளன. அதிலும் மிகமோசமான அழிவுகளைச் சந்தித்தவை. எனவே, இதை மீள்நிலைப்படுத்துவது இன்று தவிர்க்கமுடியாத அவசியமாகும். ஆனால், இந்த இரண்டு விவகாரங்களிலும் பல்வேறு தரப்பினர் சம்பந்தப்பட்டிருந்தாலும் இவற்றுக்குத் தலைமைப் பொறுப்பு வகிப்பது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே.

இவருடைய பொறுப்பின் கீழேயே இந்த விவகாரங்களை அரசு நடைமுறைப்படுத்துகிறது. அகதி முகாம்களிலிருந்து மக்களை விடுவிப்பது தொடக்கம், மீள்குடியேறிய மக்களுக்கான உதவிகள் வரையில் எதிலும் பஸிலின் கைகள்தான் நீள்கின்றன. அதைப்போலவே வடக்குக் கிழக்கின் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளிலும் பஸில் ராஜபக்ஷவே முன்னிலைப் பாத்திரம் வகிக்கிறார்.

ஆகவேதான் வடக்குக் கிழக்கில் பஸிலின் பிரசன்னம் அதிகமாகக் காணப்படுகிறது. எதையும் தீர்மானிப்பவராகவும், எதையும் அறிவிப்பவராகவும் எதையும் நடைமுறைப்படுத்துபவராகவும் பஸிலே இருக்கிறார். ஆகவேதான் 'பஸிலுடன் இணங்கிப்போதல்' என்ற ஒரு மெல்லிய நிலைப்பாட்டுக்கு தமிழ்க் கூட்டமைப்பும் வந்திருப்பதாகத் தெரிகிறது.

பஸிலைத் தவிர்த்து அல்லது அரசாங்கத்துக்கு அழுத்தத்தைக் கொடுத்து மீள்குடியேற்றம் - புனர்வாழ்வு - புனரமைப்பு - அபிவிருத்தி போன்றவற்றைச் செய்ய முடியாத நிலையிலேயே தமிழர் அரசியல் இன்றுள்ளது.

வேண்டுமானால் அரசுடன் சேர்ந்துகொள்ளல் அல்லது இணங்கிக்கொள்ளல் என்ற வகையிலேயே இந்த விவகாரங்களைக் கையாள முடியும். இதுவே உண்மை. இதுதான் யதார்த்தம். இல்லை என்றால் அரசு நினைப்பதே நடக்கும், கொடுப்பதே கிடைக்கும் என்ற நிலைதான். இப்படியானதொரு நெருக்கடி நிலையை மஹிந்த ராஜபக்ஷ அரசு உருவாக்கியுள்ளது.

எனவே, இந்த இடத்தில் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் (மீள்குடியேற்றம் - அபிவிருத்திக்கு தீர்வு காண்பதற்கு ஒரு பொறிமுறையைக் கண்டுபிடித்து அதை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இதன்படி இப்போது தமிழ்த் தரப்புகள் பின்பற்றும் வழிமுறை பஸிலை மடக்குவது அல்லது கையுக்குள் போடுவது என்பதாகும்.

ஆனால், பஸிலை இலகுவில் மடக்கமுடியாது என்பது இன்னொரு உண்மை. அவர் பெரியதொரு முதலையாகவே கருதப்படுவதால், கரணம் தப்பினால் மரணம் என்பதைப்போல, அவருடைய தேவைகளை நிறைவேற்றினாலே அவர் நமது தேவைகளை நிறைவேற்றுவார். இல்லையென்றால் நம்மை நிராகரிப்பார். இந்த அபிவிருத்தியின் உண்மைத்தன்மை எத்தனை வீதமோ தெரியாது. ஆனால், இப்படியொரு கருத்தும் அச்சமும் பஸில் ராஜபக்ஷவைப் பொறுத்து பரவலாக உண்டு. ஆகவே இப்போது பஸிலைக் கைக்குள் போடுதல் என்ற அளவில் காரியமாற்றுவதற்கு தமிழ்த்தரப்புகள் முனைகின்றன. இதில் ஈ.பி.டி.பியும் அடங்குகின்றது. கூட்டமைப்பும் அடங்குகின்றது - சிறிய வேறுபாடுகளுடன்.

இந்தத் தரப்புகளை அடக்கி அரவணைத்துச் செல்வதில் பஸில் ராஜபக்ஷவும் அதிக முனைப்புக் காட்டுகிறார். எல்லோருக்கும் இனிய நண்பரா அல்லது எல்லோருக்குமான எஜமானரா என்பதில்தான் இருக்கின்றது சிக்கல். அதை எல்லோரும் விளங்கினால் சரி.

எனவே, அரசாங்கத்தைத் தமிழ் மக்களுக்காகச் சிந்திக்க வைக்கவும், செயற்படவைக்கவும் மஹிந்த அரசு வைத்திருக்கும் தெரிவென்பது இணங்கிச் செயற்படுதல் - இணைந்து செயற்படுதல் என்பதாகவே இருக்கிறது.

ஆனால், இப்படிச் செயற்பட்டாலும் அரசு தன்னுடைய நிகழ்ச்சி நிரலை ஒருபோதும் பொதுமைப்படுத்தப்போவதில்லை. அதற்கான மனப்பாங்கு அரசிடம் இல்லவே இல்லை. எனவே, இதுவொரு நீடித்த சிக்கலான பிரச்சினையே.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்களின் இன்னொரு முக்கிய விவகாரமாக இருப்பது இனப்பிரச்சினைக்கான தீர்வு- அரசியல் உரிமைகள் ஆகும். மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீள்குடியேற்றம் - அபிவிருத்தி போன்றவற்றையே அரசு தீர்த்துவைக்காமலிருக்கும்போது - அரசைச் செய்விக்க முடியாமல் திணறும்போது - எவ்வாறு இனப்பிரச்சினைக்கான தீர்வை எதிர்பார்க்க முடியும்?

இனப்பிரச்சினைக்கான தீர்வு மிக நெருக்கடி நிலையிலேயே உள்ளது. வடக்குக் கிழக்கு இணைப்பு, சிங்களக் குடியேற்றங்கள், இராணுவ மயத்தை நீக்குதல், வடக்குக் கிழக்கிலுள்ள இந்திய - சீன மற்றும் அந்நிய முதலீடுகள் பற்றிய சிக்கல்கள் எனப் பல வகையான எதிர்நிலை அம்சங்களே அதிகமாகவுள்ளன.

இந்த நிலையில் தமிழ் பேசும் மக்களின் முன்னேயுள்ள அனைத்துச் சவால்களையும் தீர்ப்பதற்கான ஏது நிலைகளற்ற நிலையே காணப்படுகின்றன. இவற்றை முறியடித்து, வெற்றி கொள்வதற்கான வழிமுறைகள் இப்போதைய நிலையில் யாரிடமும் இல்லை என்பதே உண்மை.

அப்படி இருந்திருக்குமானால் மீள்குடியேற்றம் அர்த்தபூர்வமாக நிறைவேறியிருக்கும். இராணுவக் குறைப்பு நிகழ்ச்சிக்கும், புனர்வாழ்வும் மீள்கட்டுமானமும் குறிப்பிடத்தக்க அளவில் நடைபெற்றிருக்கும், புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பமாகியிருக்கும் அப்படியென்றால்

**- அருள் மனோகரன்**

இவையெல்லாம் நடந்துள்ளனவா?

எவ்வாறாயினும் இவற்றுக்கு என்ன செய்யலாம்? முதலில் தமிழ்க் கட்சிகள் தங்களின் இயலாமையைப் புரிந்துகொள்ள வேண்டும். இயலாமையின் முன்னே அனைவரும் சமமே. எதிர்த்து நின்றாலென்ன; ஆதரித்து நின்றாலென்ன?

ஆகையால், தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒரு பொது உடன்பாட்டில் இணைந்துகொண்டு, ஒரு வலுவான தரப்பாகி, மக்கள் அமைப்புகளை இணைத்துக்கொண்டு அழுத்தத்தரப்பாக மாற்றமடைவது இன்று அவசியமாகிறது. இதற்கு ஓர் அரசியல் உபாயமும் வழிமுறையும், பொறிமுறையும் கூட வகுக்கப்படவேண்டும்.

இது சாத்தியமாக்கப்படக்கூடிய விடயமே; ஆனால், இதற்கு முதலில் இந்தக் கட்சியினர் தமக்குள் தியாகங்களைச் செய்யக்கூடிய பயிற்சிக்கும் தீர்மானத்திற்கும் தயாராக வேண்டும்.



# காதல் உடைந்தாலும் பூட்டைத் திறக்க முடியாது




ஐரோப்பாவின் சில நாடுகளில் காதலர்கள் தமது காதலை பகிரங்கமாக வெளிப்படுத்துவதற்கு



வித்தியாசமான உத்தியொன்றைக் கையாண்டு வருகின்றனர்.

இரும்புப் பூட்டுகளில் தமது பெயர்களைப் பொறித்து அவற்றைப் பகிரங்க இடங்களில் பூட்டி விட்டு சாவியை எறிந்து விடுகின்றனராம்.

தமது காதலை 'உடைக்க முடியாது' என்பதை இதன் மூலம் அவர்கள் வெளிப்படுத்துகிறார்களாம்.

முதன் முதலில் 1980 களில் ஹங்கேரி நாட்டில், இந்த வழக்கம் ஆரம்பமாகியது. தற்போது பிரிட்டன் போன்ற நாடுகளிலும் இது அறிமுகமாகியுள்ளது.

லண்டன் டவர் பாலத்தின் ஒரு பகுதி தற்போது பூட்டுகளால் மறைக்கப்பட்டுள்ளது.


சில காதலர்கள் தமது காதலர்களுக்கான கடிதங்கள் தகவல்களையும் பூட்டுகளில் பொறித்துள்ளனராம்.

ரஷ்யாவின் மொஸ்கோ நகரில் உள்ள மரமொன்று பூட்டுகளால் சுற்றி மூடப்பட்டுள்ளது. பாரிஸ் நகரில் டெஸ் ஆர்ட்ஸ் பாலத்தில் இத்தகைய பூட்டுகள் அதிகமாகத் தொங்கவிடப்பட்டுக் காணப்படுவதால் பாலம் அதிக பாரத்துடன் காணப்படுகிறது.

இதனால் அங்கு பூட்டுகளைத் தொங்கவிடுவதை அதிகாரிகள் தடை செய்துள்ளனர்.

லத்வியாவின் ரிகா மற்றும் ஜேர்மனியின் கொலோன்ஜ் நகரிலும் பாலங்கள் இத்தகைய பூட்டுகளால் நிரம்பியுள்ளன.

காதல் வந்தால் இப்படி பூட்டுகளில் பெயர்களை பொறித்துப்பூட்டிவிட்டு, காதல் முறிந்த பின் அதற்காக வருந்தும் நபர்கள் எத்தனையோ?





தன் உடல் முழுக்க தாராளமாக 13 டாட்டூ (பச்சை குத்துதல்) சித்திரங்கள் குத்தி இருக்கிறார் ஏஞ்சலினா ஜோலி. சமீபத்தில் கம்போடிய மொழி வாசகம் ஒன்றை செம நீளமாக முதுகில் குத்தினாராம். ஷூட்டிங் சமயத்தில் டாட்டூ இல்லாத 'ஜோலி'யைக் காட்ட கூடுதல் மேக்கப், வித்தியாசமான கமெரா அசைவு எனக் கூடுதல் 'ஜோலி'யால் செம கஷ்டமாம்.



ஜெயம் ரவி - ஹன்சிகா நடிக்கும் 'இச்' படத் தலைப்பு தமிழ் இல்லை என்பதால், 'எங்கேயும் காதல்' என மாற்றிவிட்டார் இயக்குநர் பிரபுதேவா. அடுத்து, இந்தியில் அஷய் - கத்ரினா இணைந்து நடிக்கும் படத்தை இயக்க இருக்கிறார் பிரபுதேவா.



"உன் மனைவியை 'கைபேசி' என்று செல்லமாக அழைக்கிறாயே... அவள் செல்போன் பிரியையா?"

"அட நீ வேற.... அவளுக்கு கோபம் வந்தால் அவளின் கைதான் பேசும்!"




இந்தியாவின் சனத்தொகையை விட 6 மடங்கு (240 கோடி) அதிகமாக எலிகள் உள்ளனவாம்.

## திருட முடியாத ஐபோன்

ஒருவருக்கு உரிமையான ஐபோனை அடுத்தவர் பயன்படுத்த முடிந்தால், கண்டறிந்து இயங்காமல் இருக்கக் கூடிய தொழில் நுட்பத்தை ஆப்பிள் நிறுவனம் வடிவமைத்து, அதன் காப்புரிமைக்கு மனுச் செய்துள்ளது.

இந்த தொழில் நுட்பம் ஐ போன் ஒன்றின் உரிமையாளரின் முக அமைப்பு, குரல் மற்றும் இதயத் துடிப்பு ஆகியவற்றை அளந்து அறிந்து கொள்கிறது. இவற்றின் அடிப்படையில் பல செயல்பாடுகளை, ஆப்பிள் நிறுவனம் மேற்கொள்கிறது.

வேறு எவரும் பயன்படுத்த முயற்சிக்கையில் போனின் செயல்பாட்டை முடக்குகிறது. திருட்டுத்தனமாகப் பயன்படுத்துகையில், பயன்படுத்தும் இடத்தை அறிந்து கொண்டு பதிந்து கொள்கிறது.

அனுமதிக்கப்பட்ட கூடுதல் வசதிகளை மட்டுமே பயன்படுத்த வழி தருகிறது. ஐபோனின் வரையறைகளை திருட்டுத்தனமான சாப்ட்வேர் (ஜெயில் பிரேக்கிங்) மூலம் யாராவது மாற்றி இருந்தால் உடனடியாகக் கண்டறிந்து பயன்பாட்டை முடக்குகிறது.

ஆனால் இந்த தொழில் நுட்பம் வாடிக்கையாளர்களின் தனி நபர் உரிமையில் தலையிடுவதாக சிலர் கண்டித்துள்ளனர்.



"தினமும் சரியா 10 மணிக்கு எங்க தோட்டத்துக்கு ஒரு பாம்பு வரும்"

"டைம் பாம்பா இருக்குமோ?!"

## மெதுவாக...

இரவு நேரம்...தூரத்தில் எங்கோ மணி பதினொன்று அடித்து ஓய்ந்தது... கல்யாணமாகி இருபது வருடம் ஆகிவிட்டது!

வியப்புடன் அருகில் படுத்திருந்த மனைவியைப் பார்த்தான். அவள் கண்களை மூடியபடி படுக்கையில் புரண்டு படுத்தாள்.

திடீரென்று அவனுடைய கை அவளுடைய கழுத்தின் பின்புறம் மெதுவாகத் தடவியது.என்ன ஆச்சரியம் அவள் கண்களைத் திறக்கவில்லை! அவனுடைய கை கழுத்திலிருந்து இப்போது அவளுடைய முதுகை நோக்கி மெல்ல நகர்ந்தது. அவளுடைய இதயம் சிலிர்த்தது.இருந்தாலும் கண்ணைத் திறக்கவில்லை. அவனுடைய கையின் பயணம் இன்னும் நிற்கவில்லை. இடுப்பையும் தாண்டி அவளுடைய முழங்கால்களுக்குக் கீழே ஒரு கணம் தயங்கியது. அடுத்த கணம் அவளுடைய பாதங்களுக்கு அடியில் சட்டென்று நகர்ந்தது.

மூடிய இமைகளுக்குள் அவளுடைய கண்கள் படபடத்தன.

அந்த நொடியில் திடீரென்று டி.வி. உயிர் பெற்றது. 'உலகத் தொலைக் காட்சிகளில் முதல் முதலாக....!'

"என்னங்க... என்ன ஆச்சு?" அவள் கேட்டாள்.

"ரிமோட் கிடைச்சிடுச்சி!" என்றான் அவன்.

# பதிவுகள்

சிறுகதை

''ஒக்காருங்க.''

அமர்ந்தாள் அவள்.

''சொல்லுங்க. இந்தக் காம்புக்கு எப்ப வந்தது?''

''எல்லாரும் வந்த நேரம்தான். 18.05.2009''

''சம்பூர்ண நம...?''

''கனகலிங்கம் வசந்தராணி.''

''வென நம்?''

''வசந்தி.''

வரிசையாக வந்த கேள்விகளுக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தாள் வசந்தி.

''என்ன வேலை செய்தது படையணி?''

''கதை, கட்டுரை, கவிதை, நாடகம்''

''ஙா.... ஏ மொணவத... அரசியல் பத்தியா...''

''இல்ல கலை...''

அவன் பேனாவைக் கீழே வைத்துவிட்டு வசந்தராணியின் முகத்தைப் பார்த்தான். புலிக்கு இதேல்லாம் ஏன்?''

''ஜனரஞ்சகம், கலை - கலாசாரத்தை ஊக்குவிக்க. அதனூடாக கொள்கை பரப்ப...''

''அரசாங்கம் பத்தி கூடாம சொல்லி... புலி நல்லம் மாதிரிக் கதைக்கிறது.''

''ஏறக்குறைய அப்படித்தான்.''

''காயம் பட்டதா..?'' ''இல்லை.''

''பரம்பரை நோய் இருக்கா...?'' ''ஆஸ்மா, பிரஷர்.''

''இப்ப உள்ள ஆமிக்கும் முந்திய கால ஆமிக்கும் ஒங்கட என்ன மாதிரி?''

''முந்தி ஆமி ஊருக்க வாறதில்ல. இப்ப ஆமியில்லாத ஊரில்ல...''

''இதிங், நல்லமா... பெழையா?''

''நல்லம்''

''அரசாங்கம் என்ன மாதிரி''

''நல்லம்.''

''ம்.... ம்.... ம்... மென்ன அஸ்ஸங்கறன்ன.''

அவன் காட்டிய இடத்தில் ஒப்பமிட்டாள் வசந்தி. அவளைத் தொடர்ந்து வரிசையில் இருந்தவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பதிந்தனர்.

''இது எத்தனையாவது பதிவு?''

''தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பதாவது.''

''அப்ப இன்னொண்ட நிரப்பினா வீட்ட போயிரலாம்....''

''பேய், ராவில கனவு கண்டாலே பலிக்கிறதில்ல. பகல்ல கனவு காணுறாய்.''

ஓமந்தைக் காப்பரணில் தொட்டு இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை மறந்தே போய்விட்டது. இதே போன்றதொரு பதிவுக்கு வந்த புதிதில் மொழிபெயர்க்கப்போய் பட்ட அனுபவத்தை வசந்தி இப்போதும் நினைத்துச் சிரிப்பதுண்டு.

முதலாவது பதிவு. அதுதான் இதே போன்றதொரு கேள்விக் கொத்துடன் சில சிங்களப் பெண்கள் புதிதாக இராணுவப் பயிற்சி முடித்தவர்களோ, முடிக்காதவர்களோ வந்தனர். தமிழ் தெரியாது. ஆங்கிலமும் தெரியாது. சிங்களத்திலான கேள்விக் கொத்து அதை வாசித்து அவர்களே கேட்க, அதை மொழிபெயர்த்து பிள்ளைகளிடம் கேட்டு பதிலளிக்க சிங்களம் தெரிந்த இரண்டு மூன்று பேர் அவர்களருகே சென்றனர்.

இறுதி யுத்தம் முடிவில் சரணடைந்த விடுதலைப் புலிகளின் பெண்கள் இங்கிருந்தனர். எல்லோரும் இறுதிவரை யுத்தம் செய்தவர்களல்ல. பல வருடங்களுக்கு முன்பே விலகி திருமணமாகி கணவன் பிள்ளை குட்டிகளென குடும்ப வாழ்வில் ஈடுபட்டு அமைதியாக வாழ்ந்தவர்களும், என்றோ ஒரு நாள் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் என்பதால் இங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

வசுமதி சிங்களம் தெரிந்தவள். ஒரு சிப்பாயின் அருகே அமர்ந்தாள். இவள் 1993 லேயே அமைப்பிலிருந்து விலகியவள்.

இன்னொருத்தி மீனா. கூலித் தொழிலாளி. சம்பளம் கருதி துணைப் படையில் இணைந்தவள். மொழிபெயர்க்க முன்வந்தாள்.

மூன்றாவதாக ஒரு மாணவி. ஒரு காலை இழந்தவள்.

விறாந்தை ஒன்றரை அடி உயரமானது. அதன் தரையில் அமர்ந்து எழுத ஆரம்பித்தனர். ஒட்டு மொத்தமாக அறுநூறு பேரையும் ''லையினில் இருங்க'' என்றாள் ஆமிக்காரி. ஒருவருடைய விவரம் எடுக்க பத்து நிமிடம் செலவானதால் மெள்ள மெள்ள கூட்டம் கரைந்து போய்விட்டது. தமது விடுதலைக்கான பத்திரம் இது என்ற கற்பனையில் கவனமாக எல்லோரும் பதிந்தனர். அன்று இப்பதிவு நடந்தாலும், இன்றுவரை இதுபோல் பல பத்திரங்கள் போய்விட்டன என்பதை வசந்தி



எண்ணிப் பார்த்தாள்.

படிப்படியாகப் பலர் விடுதலையடைந்து விட்டனர். பலர் அகப்படாமலே போய்விட்டனர். வசந்தியால் அப்படிப் போக முடியாது. அவள் செய்த பணி அப்பட்டமானது.

''நீங்க வந்திருக்கத் தேவையில்ல.'' நேற்று வைத்தியசாலையில் அவளைக் கண்ட ஒரு ரசிகர் குறிப்பிட்டார். ''எப்படி நான் இயக்கத்தில இருந்தது எல்லோருக்கும் தெரியும். நான் என்ன மறைவில கண்ணியா புதைச்சன். ஒழிஞ்சு வாழ.. பகிரங்கமா பத்திரிகை, வானொலி என்று பணி செய்தன். இல்லாமயா நீங்களெல்லாம் வந்து கதைக்கிறியள்?''

''அம்மாட நாடகமெண்டா பிள்ளையளே கேக்காம நித்திரை கொள்ளாது.''

வசந்தி சிரிந்தாள்.

''நீங்க.... உங்களையெல்லாம் பாப்போமா எண்டு நாங்கள் தவிச்சனாங்கள். உங்கள கண்டது சந்தோசமா இருக்கு.''

தனக்குள் ஒரு பெருமிதம் பரவுவதை அவள் உணர்ந்தாள். இயல்பான நடிப்பாலும், எழுத்தாலும் ஏராளமான ரசிகர்கள் அவளுக்கிருந்தனர்.

''அம்மா.... இவரென்ன கேக்கிறார்...?'' ஒரு பெண் வசந்தியை அருட்டினாள்.

''சேர்...?''

''எயா சேவைய கரன்ன ஸ்தானய குமக்த?''

''பிள்ள, பயிற்சி முடிய... எங்க பணி செய்தீங்க எண்டு கேக்கிறார்.''

''நான் 2007 இல் பயிற்சி எடுத்தனான். ஒண்டரை மாசத்தால ஓடிற்றன். வேலை, சண்டை ஒண்டுமில்ல'' என்றாள் அவள். வசந்தி அதை மொழி பெயர்ந்துக் கூறினாள்.

''ங...'' என்றவன். சேவைக்காலம் என்றிருந்த இடத்தில் ஒன்றரை மாதம் என்று எழுதினான்.

முதன்முதலில் இப்பத்திரம் நிரப்பிய பெண்கள், சேவைக்காலம் என்பதை நிரப்பாமல் கீறிட்டதையும், சரணடைந்த காலம் வரை அமைப்பிலிருந்ததாக எழுதியபோது வசந்தி குறுக்கிட்டு ''அந்தப் பிள்ளை 2002 இல இயக்கத்தால விலத்திட்டுது. நீங்க எழுதிற மாதிரி 2009 வரை இயக்கத்தில இருக்கேல்ல'' என்ற போது அவன், ''அப்பயேன் இஞ்ச வந்தது?'' என்று சிங்களத்தில் கேட்க,

''நீங்கள்தான் ஓமந்தையில, ஒருநாள் இருந்தாலும் பதிஞ்சிட்டு போகோணும் எண்டு சொன்னீங்க... இஞ்ச கொணர்ந்து விட்டிருக்கிறீங்க'' என்றாள் வசந்தி. ஆமிக்காரி நிரப்புவதை நிறுத்திவிட்டு ''எங்கள இப்படித்தான் எழுதச் சொல்லி உத்தரவு'' என்றாள்.

''பரவாயில்ல, என்னை நம்பி விவரம் சொல்லுற பிள்ளையளுக்கு நான் தவறான விவரம் தந்ததாத்தான் முடியும். நான் மொழிபெயர்க்க வரயில்ல'' என்றவாறே வசந்தி எழுந்து போய்விட்டாள்.

விளைவு, அவள் திடீரென வேறு பிரிவுக்கு மாற்றப்பட்டாள். அவர்களைப் பொறுத்தவரை அது ஒரு தண்டனை மாற்றம். வசந்தியைப் பொறுத்தவரை அவளது நெருங்கிய சகாக்களும் ரசிகைகளும் இருந்த இடம் அது. எனவே, அது ஒரு மகிழ்ச்சியான மாற்றம்.

மூன்று மாதத்தில் விட்டுவிடுவார்கள் என்ற கருத்து பொய்த்துப் போக ஒரு வருடத்துக்கு மேலாக இங்கே இருந்துகொண்டிருக்கிறாள் வசந்தி. அவளுடைய வயதில் இங்கு யாரும் இல்லை. என்றாலும், சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு வாழ்ந்தாள். அந்தப் புனர்வாழ்வு மையம் பல இடங்கள் மாறிவிட்டாலும் அவர்களால் மாறவே முடியவில்லை.

வெளியிலிருந்து பலர் வந்தனர்; போயினர். காட்சிப் பொருட்களாக இந்தப் பெண்கள் காட்டப்பட்டனர். இவற்றிலெல்லாம் கூட வசந்திக்கு இடமில்லை. விடுதலைக்காக ஏங்கி விரக்தியுற்றவர்களுக்கு மனநல வகுப்பு, ஆன்மீக வகுப்புகள் என நடந்தன.

அன்று ஆன்மீக பரிசோதனை நிகழ்ச்சி. ''சிறையிருப்பதால் சமுதாயம் உங்களை வித்தியாசமாக நோக்கலாம். இதை எப்படி எதிர்கொள்ள முடியும்?'' என்ற கேள்வி கேட்கப்பட்ட போது வசந்தி வெகுண்டாள்.

சிறையில் இருப்பதன் காரணம் என்ன? நாங்கள் என்ன குற்றம் செய்தோம். உரிமைக்காக போராடிய அமைப்பில் இணைந்தது குற்றமென்றால்... மகாத்மா காந்தி, நேரு, இந்திராகாந்தி, ஏன் சிறிமாவோ கூட சிறையில் இருந்தவர்கள்தானே? அவர்களை உலகம் தவறாகவா பார்த்தது. ஆயுதமேந்தி இரத்தக்கறை படிந்தவர்கள் இன்று நாடாளுமன்றில் இல்லையா? அகப்படாதவன் நீதிமான். அகப்பட்டவன் குற்றவாளியா? நான் இங்கிருப்பதையிட்டு வெட்கப்படவில்லை'' என்று தனது பதிலை எழுதி விட்டுப் பேனாவைத் திருப்பிக் கொடுத்தாள் வசந்தி.

அடுத்த நாள் காலை -

முகாமில் தேசிய கொடி ஏற்றி, தேசிய கீதம் இசைத்த பின், பெண்கள் உறுதியுரை எடுக்கின்றனர். ''இலங்கைப் பிரஜையாகிய நான் அரசாங்கத்தின் சொற்படி சிவில் நிர்வாகத்துக்கெதிராக செயற்படமாட்டேன் எனவும், எல்.ரீ.ரீக்கோ வேறு எந்த அமைப்புகளுக்கோ ஆதரவளிக்க மாட்டேனெனவும், உதவியளிக்க மாட்டேனெனவும் உறுதியெடுத்துக்கொள்கிறேன்.''

வரிசையின் நடுவே வசந்தி எந்தச் சலனமுமின்றி நடந்தாள். ✱

தமிழ்க்கவி

# சுரங்கத் தொழிலாளர்களின் உயிர் ஊசலாடுகிறது

தரைக்குக் கீழ் 2,300 அடி ஆழத்தில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஏரியல் டிக்கோனா என்பவர் எதுவித சலனமும் இன்றி அங்கிருந்தே தனது மனைவிக்குப் பிறந்த குழந்தைக்கு எஸ்பெரன்ஸா எலிசபித் எனப் பெயர் சூட்டினார்.
எஸ்பெரன்ஸா என்ற வார்த்தைக்கு ஸ்பானிய மொழியில் நம்பிக்கை (ஏனிஸினு) என்ற அர்த்தம் உண்டு. காப்பற்றப் படுவோம் என்ற ஒரே நம்பிக்கையில் காலத்தைக் கடத்தும் தொழிலாளர்களின் அவலநிலை ஒரு கண்ணீர்க் காவியமே!

சிலி நாட்டில் ஏழு வாரங்களுக்கு முன்பு நிலத்தின் கீழ் புதையுண்ட 33 சுரங்கத் தொழிலாளர்களையும் மீட்கும் பணியில் உலகம் இதுவரை கண்டிராத தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நாளொன்றுக்கு 24 மணித்தியாலங்கள் மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவர்களை உயிருடன் மீட்க இன்னும் நான்கு மாத காலம் தேவைப்படும் என்று கூறப்படுகிறது.

சுரங்கத் தொழிலாளர்கள் இவ்வாறு சிறைப்படுவது வழக்கமே என்றாலும், சிலியில் சிக்கிக்கொண்டுள்ள தொழிலாளர்களின் நிலைமை வித்தியாசமானது. வழக்கமாக ஓரிரு தினங்கள் அல்லது வாரங்கள் மட்டுமே நீடிக்கும் மீட்புப்பணிகள் தோல்வியடையும்போது சிக்கிக் கொண்டவர்கள் உரிருடன் சமாதியாகிவிட்டனர் என்றே முடிவுசெய்யப்படும். எனினும், உலகின் தலைசிறந்த பொறியியல் தொழில்நுட்பம் மூலமாக தரைமட்டத்திலிருந்து சுமார் 700 மீற்றர் (2,300 அடி) ஆழத்தில் சிக்கிக் கொண்டுள்ள 33 தொழிலாளர்களையும் உயிர்வாழச்செய்து கொண்டே அவர்களை மீட்க முடியுமென்ற நம்பிக்கையுடன் துல்லியமான மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உலகமே வியந்து எதிர்பார்க்கும் இந்த மீட்புப் பணிகளுக்கு இடையில் சுரங்கத்தில் சிக்கிக்கொண்டுள்ள தொழிலாளர்களின் மாதாந்தச் சம்பளப் பணத்தையும், நஷ்ட ஈட்டையும் எதிர்பார்த்து தரை மட்டத்தில் சர்ச்சைகள் இடம்பெறுவது வேதனை அளிக்கிறது.

சிக்கிக்கொண்டுள்ள தொழிலாளர்களின் மாதாந்தச் சம்பளம் அவர்களது வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படுவது வழக்கமாக இருந்தது. மாதாந்தம் 1,600 அமெரிக்க டொலர்கள் (எட்டு இலட்சம் பெசோ) அவர்களுக்கு வங்கி மூலமாக ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது. அவர்கள் பணி முடிந்த பின்பு வங்கிகளுக்கு நேரடியாகச் சென்று இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது தமது சார்பில் எவரையாவது நியமனம் செய்யலாம்.

சுரங்கத் தொழிலாளர்கள் தரைமீது வாழ்க்கை நடத்திவந்த சமயம் சுமுகமாக நடந்து வந்த இந்த வங்கிக் கணக்குகள் இப்போது பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. சட்டபூர்வ மான மனைவிகளுக்கும் வைப்பாட்டிகளுக்கும் இடையில் பணத்துக்காகப் போட்டி நிலவுகின்றது. இதுவரை இரகசியமாக நடந்து வந்த கள்ள உறவுகள் இப்போது விஸ்வரூபம் எடுத்துள்ளன. தங்களுக்கும் பங்கு வேண்டுமென வைப்பாட்டிகளும், முழு வருமானமும் தங்களுக்கே சேரவேண்டுமென சட்டபூர்வ மனைவிகளும் பனிப்போரில் ஈடுபட்டுள்ளனர். எது சரியென முடிவுசெய்யக்கூடிய தொழிலாளிகள் 2,300 அடி ஆழத்தில் கிக்கிக்கொண்டு பரிதாப நிலையில் உள்ளனர். சிக்கிக் கொண்டுள்ள தொழிலாளர்களின் ஓகஸ்ட் மாத ஊதியம் தங்களுக்கே கிடைக்கவேண்டுமென அவர்கள் வாதிடுகின்றனர். உதாரணமாக, 24 வயது தொழிலாளியான கெலண்டியோ சேனிஸ் என்பவரின் சட்டபூர்வ மனைவி கிரிஸ்டினா மேசியஸ் (26), அவரது மாமியார் மாகரீட்டா ஆகியோருக்கும் இடையில் இது பற்றிய முறுகல் நிலை உருவாகியுள்ளது.

கெலண்டியோ சேனிஸ் தனது வங்கிப் பணத்துக்கு வாரிசாக தமது மனைவி கிரிஸ்டினாவையும் பிள்ளைகளையும் நியமித்திருந்தார். எனினும்,




## தரையின் மேலும் கீழும் நடக்கும் போராட்டங்கள்




கெலண்டியோவின் மாமியார் அவரது வருமானத்தில் தனக்கும் பங்குண்டு என போர்க்கொடி தூக்கியுள்ளார்.

சிலி நாட்டின் பிரபல சமூக சேவகியான பேமலா கருத்துத் தெரிவிக்கையில், இத்தகைய கொடுப்பனவுகள் பற்றி முடிவையெடுக்க சுரங்கத்தில் சிக்கியுள்ள தொழிலாளர்கள் உயிருடன் மீண்டு வரவேண்டும் என்றார். அதுவரை தற்போது நடைமுறையிலுள்ள வக்கிக் கணக்குகள் மூலம் நியமனம் பெற்றுள்ள வாரிசுகள் மட்டுமே பணத்தைப் பெறமுடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

சில தொழிலாளர்கள் தமது சட்டபூர்வ விவாகத்துக்கு முன்பு வேறு பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். சிலர் விவாகத்துக்குப் பின்பும் அவ்வாறான சகவாசத்தை வைத்திருந்தனர். அத்தகைய தொடர்புகள் வைத்திருந்தவர்கள் இப்போது குறிப்பிட்ட தொழிலாளியின் ஊதியம் மற்றும் நஷ்டஈடுகளுக்கு உரிமை கோரி வாதாடுகின்றனர்.

யொந்தி பேரின் ரொஜான் எனும் தொழிலாளி இத்தகைய வில்லங்கமொன்றில் சிக்கியுள்ளார். அவரது சட்டபூர்வ மனைவி மார்தா செலினாஸ் தனது கணவரின் புகைப்படம் பொறித்த அட்டையை ஏந்தியவாறு சுரங்க வாயிலில் காணப்படுகிறார். அதேசமயம் அதே புகைப்படத்தைத் தாங்கிக்கொண்டு வேறொரு பெண்ணும் அதே சுரங்க வாயிலில் நின்றுகொண்டிருக்கிறார். அவரது பெயர் சுசானா பெலஸ்சினா. சட்டபூர்வமாக செலினாஸ் என்ற பெண்ணை விவாகம் செய்திருந்த ரொஜான் அவருக்குத் தெரியாமலேயே பெலஸ்சினாவுடன் தொடர்புகொண்டிருந்தார் என்பது இந்தப் புகைப்பட விவகாரத்தின் பின்பே தெரியவந்துள்ளது. இவ்வாறே தொழிலாளியான தாரியோ செகோவியாவுக்கும் தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளது. சுரங்க வாயிலில் தந்தையின் புகைப்படத்தைத் தாங்கியவாறு செகோவியாவின் மூன்று மகள்மார் நின்றுகொண்டிருந்தனர். அதே புகைப்படத்தைத் தாங்கியிருந்த மற்றுமொரு யுவதி தான் செகோவியரின்

**தமிழில்: சுப்பர்**

ஒரே மகள் என அடம்பிடித்தார். அதிர்ஷ்டவசமாக இந்த விவகாரம் பெரிது படுத்தப்படவில்லை. இத் தொழிலாளிகளின் பெரும்பாலானவர் களின் வருமானத்திலேயே அவர்களது பெற்றோர்களும், சகோதர சகோதரிகளும் வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர். எனவே, உயிருடன் சிறைப்பிடிக்கப்பட்டுள்ள தொழிலாளர்கள் மீட்கப்படவேண்டியது இவர்களுக்குக் கட்டாயமானதாகும்.

துரதிஷ்டவசமாக இவ்வாறு சிக்கிக் கொண்டுள்ள தொழிலாளர்கள் மனரீதியாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மீண்டு வந்தபின் அதே சுரங்கத்தொழிலில் அவர்கள் ஈடுபடுவார்களா என்பது கேள்விக்குறி. எனினும், வேறு தொழில்களுக்கு செல்லக்கூடிய அனுபவமோ, திறமையோ அவர்களிடம் கிடையாது. இப்போது சிக்கியவர்களுக்கு முன்னால் பூதாகரமாக நிற்கும் விடயம் அவர்கள் எவ்வாறு மீண்டுவருவார்கள் என்பதே. மிகத் துல்லியமாக திட்டமிடப்பட்டு மேற்கொள்ளும் மீட்புப்பணிகள் வெற்றிகரமாக முடியுமா என்பது கேள்விக்குறியே. அத்தகைய மீட்புப் பணி இம்மியளவு பிசகினாலும் 33 தொழிலாளர்களும் உயிரோடு சமாதியாவது நிச்சயம்.



# தமிழக தேர்தலில் இதுவரை இருந்திராத போட்டா போட்டி

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடக்கவுள்ள தேர்தல் குறித்த அல்லோல கல்லோலம் தமிழகத்தை ஆட்டிப்படைத்து வருகிறது. இதுவரை நடந்துள்ள தேர்தல்களில் 1967 ஆம் ஆண்டு, 1977 ஆம் ஆண்டு தேர்தல்களைப் போல மிகவும் போட்டிநிறைந்த தேர்தலாக இது அமையக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது.

முக்கிய கட்சிகளான ஆளும் திராவிட முன்னேற்ற கழகமும் அதன்



கூட்டணியும், பிரதான எதிர்க் கட்சியான அண்ணாதிராவிட முன்னேற்ற கழகமும் அதன் கூட்டணியும் கிட்டத்தட்ட சமபலம் உள்ள கட்சிகளாக இருப்பதே இதற்கான காரணம். அ.தி.மு.க கூட்டணியின் பிரதான பலம், மக்களிடம் தற்போது பொங்கிப்பிர வகிக்கும் தி.மு.க ஆட்சிக்கு எதிரான உணர்வலையாகும். விலைவாசி உயர்வு, மின்சார வெட்டு, எரிபொருள் விலை உயர்வு என தி.மு.க அரசு மீது மக்களுக்கு வெறுப்பே உள்ளது. இதுவே கோவையில் நடந்த அ.தி.மு.க மாநாட்டுக்கு லட்சக்கணக்கான மக்களை ஈர்த்தது. இதுதவிர ரவுடிகளின் அட்டகாசம் தி.மு.க ஆட்சியில் கொடிகட்டிப் பறப்பதும் அ.தி.மு.க மீது மக்கள் நம்பிக்கை கொள்ளக் காரணமாகும். மக்களின் நாடிபிடித்தறிந்த ஜெயலலிதா இந்த பிரச்சினைகளையே தொடர்ச்சியாக கூட்டம், பேரணி, ஆர்ப்பாட்டம் என நடத்தி எதிரொலித்து வருகிறார். தி.மு.கவுக்கு கூட்டணிபலம், மத்திய அரசு பலம், மாநில அரசு பலம் என்பன கைகொடுக்கும் விடயங்கள் எனலாம். இலவச டிவி, அரிசி என பல சாகசங்கள் தி.மு.க சார்பில் செய்யப்பட்டா லும் தி.மு.க வயிற்றில் புளியைக்கரைக்கும் விதமாக எதிரணியின் செயற்பாடுகள் அமைந்தே உள்ளன. நடந்துமுடிந்த சகல இடைத் தேர்தல்களிலும் தி.மு.க அணி வெற்றிவாகை சூடியது. இதுபோல சட்டசபைத் தேர்தல் முடிவும் அமையும் என தி.மு.க தரப்பு மனப்பால் குடித்துவருகிறது. ஆனால், 2006 இல் நடந்த கடைசி சட்டசபை தேர்தலில் தி.மு.க வென்ற போதும் அதற்குமுன் நடந்த சகல சட்டசபை இடைத் தேர்தல்களிலும் ஆட்சியிலிருந்த அ.தி.மு.கவே வென்றிருந்தது.

எனவே, ஆளும் கட்சி இடைத்தேர்தலில் வெல்வது ஒன்றும் புதிதல்ல. அதே ஆளும்கட்சி அடுத்து வரும் சட்டசபைத் தேர்தலில் தோல்வி கண்டதே வரலாறாகும். இதன்படி பார்த்தால் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தலில் தி.மு.க அரசு தோல்வியடைய வேண்டும். இந்த வரலாற்றை மாற்றி அமைக்க தி.மு.கவால் இயலுமாயின் அது இமாலய சாதனையாகவே இருக்கும். ஏனென்றால், 1991 இலிருந்து 20 ஆண்டுகளாக ஒவ்வொரு 5 ஆண்டுக்குப் பின்பும் ஆட்சி மாறுவதே வழமையாகும்; 1991 இல் அ.தி.மு.க; 1996 இல் தி.மு.க; மீண்டும் 2001 இல் அ.தி.மு.க; 2006 இல் தி.மு.க என மாறிமாறி இருபிரதான கட்சிகளும் ஆட்சிக்கு வந்துள்ளன. அதன்படி இம்முறை அ.தி.மு.கவே வெல்லவேண்டும். இதை மாற்ற தி.மு.கவால் முடியும் என்றே அக்கட்சி நம்புகிறது. அ.தி.மு.க பொதுச் செயலர் ஜெயலலிதா போலன்றி நடப்பு விவகாரங்களை ஊன்றி கவனிக்கும் அடிமட்ட மனிதராகவே கலைஞர் இன்றும் இருந்து வருகிறார். ஜெயலலிதாவோ முதல்வரானதும் ஆகாயத்தில் பறப்பதே வழக்கமாகும். இதுவே



அவர் இரண்டு தடவைகளும் பதவியிழக்க காரணமாகவும் ஆயிற்று. அந்த வகையில் கலைஞர் எவ்வளவோ மேல் என்றாலும் மக்கள் பிரச்சினைக்கு இன்னும் அதிக முக்கியத்துவம் கொடுக்காவிடில் கலைஞராலும் தி.மு.கவை காப்பாற்ற முடியாது போகும்.

அ.தி.மு.கவை பொறுத்தவரை இந்த தேர்தல் ''செய் அல்லது செத்துமடி'' என்றநிலைதான். தோற்றால் தொடர்ந்து 10 ஆண்டுகள் எதிர்க்கட்சியில் இருக்கநேரும். ஜெயலலிதாவின் அரசியல் வாழ்வில் அ.தி.மு.க தலைவராக வந்தபின்பு தொடர்ந்து 10 ஆண்டுகள் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் முதல் சந்தர்ப்பமும் இதுவாகவே இருக்கும். அத்துடன் எஞ்சி இருக்கும் அ.தி.மு.கவினரும் தி.மு.க பக்கம் போகும் ஆபத்தும் உள்ளது. அ.தி.மு.க தலைவர்களை ஒருவர்பின் ஒருவராக இழுத்துவந்த தி.மு.கவின் கைங்கரியத்துக்கு இப்போதைக்கு ஜெயலலிதா முற்றுப்புள்ளி வைத்துள்ளார். கோவை, திருச்சியில் நடந்த அ.தி.மு.க கூட்டங்களுக்கு வந்த மக்கள் தொகையைப் பார்த்து தி.மு.க பக்கம் சார இருந்த அ.தி.மு.கவினர் சற்றே பின்வாங்கியுள்ளனர். எங்கே அ.தி.மு.க தேர்தலில் வென்றுவிடுமோ என்ற தோற்றத்தை இந்த கூட்டங்களின் மூலம் ஜெயலலிதா ஏற்படுத்தியுள்ளார். தி.மு.க முகாமிலும் இதனால் கலக்கம் ஏற்பட்டுள்ளது உண்மையே. தி.மு.கவுக்கு இந்த தேர்தலில் வெல்லாவிடில் அ.தி.மு.க போல் பெரும் கஷ்டம் இல்லை என்றாலும் உட்கட்சி மோதல் குறிப்பாக உட்குடும்ப மோதல் உச்சக்கட்டத்துக்கு செல்ல இது வழிவகுக்கக்கூடும். அழகிரி-ஸ்டாலின் இருவரும் தி.மு.க ஆட்சியில் இருக்கும்வரை குடும்பச்சண்டையில் ஈடுபடாவிடினும் ஆட்சியை இழந்தால் தி.மு.கவில் இதே சகோதர சமரசம் நீடிக்கும் என்பது சொல்லமுடியாது. அதேநேரம் ஸ்டாலின் சாதாரண சட்டமன்ற உறுப்பினராக மட்டும் இருக்க

**- எஸ்.சுரேந்திரஜித் -**

முடியும். அழகிரியோ மத்திய அமைச்சராக பலமாக விளங்குவார். இது எத்தகைய விதத்தில் தி.மு.கவில் எதிரொலிக்கும் என்பதை கூறமுடியாது. சமயம் பார்த்துக் காத்திருக்கும் அழகிரி தி.மு.கவின் தலைமைப்பதவியை கைப்பற்ற முயற்சிக்கவும் கூடும். அதுவும் அழகிரி பொறுப்பிலுள்ள தென்மாவட்டங்களில் இருந்து தி.மு.கவுக்கு அதிகளவு சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவான நிலையில் தி.மு.க ஆட்சியை இழக்க நேரிட்டால் அழகிரி செல்வாக்கு ஓங்குவதை தவிர்க்க முடியாது. ஸ்டாலின் பொறுப்பிலுள்ள வடமாவட்டங்களில் தி.மு.க எம்எல்ஏக்களின் எண்ணிக்கை குறைந்தால் ஸ்டாலின் பின்வரிசைக்கு தள்ளப்பட நேரிடும். இது தி.மு.கவின் உடைவாக பரிணமிக்குமா என்பதும் முக்கிய கேள்வியாகும். ஆகவே, ஜெயலலிதா வென்று முதல்வரானால் அது முதல்வர் கதிரையை மட்டும் தருவதுடன் நில்லாது தி.மு.கவின் பிளவையும் ஏக காலத்தில் தங்கத்தட்டில் வைத்து அவரிடம் கொடுப்பதாக இருக்கும். அதேபோல மறுதலையாக தி.மு.க வென்று மீண்டும் ஆளமுடிந்தால்



அ.தி.மு.க மென்மேலும் பலவீனமடையும். மேலும் பல அ.தி.மு.க தலைவர்கள் தி.மு.கவுக்கு தாவுவதும் தவிர்க்கமுடியாததாகி விடும். எனவே, இருபிரதான கட்சிகளையும் பொறுத்தவரை வாழ்வா, சாவா என்று தீர்மானிப்பது இத்தேர்தலாகும்.

காங்கிரஸ் கட்சி தி.மு.கவுடன் உறவைத் தொடர முடிவெடுத்தாலும் சென்றமுறை போட்டியிட்ட 48 தொகுதிகளுக்கு மேலதிகமாக 40 தொகுதிகளையாவது அக்கட்சி தி.மு.கவிடம் கோரக்கூடும். ஏற்கனவே இளங்கோவன் 109 தொகுதிகள் தரவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். பா.ம.க, காங்கிரஸ் இவை இரண்டிலும் ஒன்றைத்தான் தி.மு.க தனது அணியில் சேர்க்கமுடியும். காங்கிரஸ் இணக்கமாகி நடந்தால் பா.ம.க என்ற தலைவலி வேண்டாம் என தி.மு.க கருதுகிறது. மாறாக காங்கிரஸ் இணங்காவிடில் வேறு வழியின்றி பா.ம.கவை சேர்க்க வேண்டியதாகும். எனவேதான் பா.ம.கவுக்கு எதிரான நடவடிக்கைகளை சற்றே தளர்த்தி நடக்கிறது தி.மு.க என்று கூறப்படுகிறது. எவ்வாறாயினும் போட்டி என்பது அடுத்த ஆண்டு தேர்தலில் சாதாரணமாக இருக்கப் போவதில்லை என்பது தெளிவு. ✱

# சுடர் ஒளி

**03, ஒக்டோபர் - 09, ஒக்டோபர், 2010**

*85, ஜெயந்தமல் விமாரான்சி மாவத்தை, கொழும்பு-14 டெலிபோன்: 0115738005*

*பாக்ஸ்: 0114734404*

E-mail: editorial@sudaroli.com


## தீர்வு சாத்தியப்படுமா?

இலங்கையில் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாமல் இருப்பதற்கு கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசுகளால் இரு காரணங்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

அவற்றில் ஒன்று விடுதலைப் புலிகள் பலமாக இருக்கும் மட்டும் அவர்கள் எந்த அரசியல் தீர்வுக்கும் இணங்கி வரமாட்டார்கள். அவர்களைப் பலமிழக்கச் செய்தாலேயே அரசியல் தீர்வு சாத்தியம் என்பது.

மற்றது, தற்போதைய அரசமைப்புக்குள் தீர்வு காண முடியாது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் நாடாளுமன்றத்தில் இருந்தால் மட்டுமே அரசமைப்பில் திருத்தம் செய்து தீர்வு யோசனைகளை அமுல் செய்ய லாம் என்பது.

இவை இரண்டுமே தற்போது நிஜமாகிவிட்டன. புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர். இறுதிப் போர் நடந்து தற்போது ஒரு வருடமும் நான்கு மாதங்களும் ஆகிவிட்டன. புலிகள் இருப்பதற்கான அசமாத்தம் எதுவுமே இல்லை. அதே போன்று மஹிந்தவின் அரசு எதிர்பாராத விதமாக நாடாளுமன்றத்தில் தற்பொழுது மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இருக்கிறது.

எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தற்போது உள்ள வாய்ப்பு போன்று இனி ஒரு போதுமே ஏற்படப் போவதில்லை. ஆனால் அரசாங்கம் இதனைப் பயன்படுத்தும் நிலையில் இல்லை. சிங்கள மக்களை அரவணைத்துச் செல்வதிலேயே நாட்டம் காட்டி வருகிறது. அரசமைப்பின் 18 ஆவது திருத்தத்தில் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான எந்த யோசனையும் தெரிவிக்கப்படவில்லை. ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி பேசும் போதும் தமிழ் மக்கள் சமாதானமாக வாழும் நிலைமையை ஏற்படுத்துவோம் என்று மட்டும் கூறி இருக்கிறார். எந்த உருப்படியான யோசனையும் அவர் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையில் தான் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பி.பி.ஸி. சந்தேஷ்ய சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில், புலிகள் அழிக்கப்பட்டு விட்டதால் உடனடியாக அரசியல் தீர்வு தேவை இல்லை என்று கூறியிருக்கிறார். ஒஸ்லோவில் இணக்கம் காணப்பட்ட சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வுக்கு ஐ.தே.க. ஆதரவளிக்க மாட்டாது என்று ரணில் ஏற்கனவே தெரிவித்திருந்தார். திஸ்ஸ அத்தநாயக்க தற்போது அளித்த பேட்டியில் இதனை மீண்டும் வலியுறுத்தி இருக்கிறார்.

ஆகவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயார் இல்லை என்பதே இவரது பேச்சு மூலம் தெரிய வருகிறது.

கடந்த காலங்களில் பதவியில் இருக்கும் அரசுகள் இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக எடுத்து வந்த நடவடிக்கைகளை எதிர்க் கட்சித் தரப்பு எதிர்த்து வந்தது. பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தமும், சந்திரிக்கா குமாரதுங்க கொண்டு வந்த தீர்வு யோசனைகளும், ரணில் - பிரபாகரன் இணக்கப்பாடு காரணமாக ஏற்பட்ட சமாதான முயற்சிகளும் தோற்றுப் போனது இதனால் தான்.

ஆனால் இலங்கை அரசியலில் தற்போது புதிய அபாயகரமான ஒரு சூழ்நிலை உருவாகி வருவதை காண முடிகிறது. ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு இரண்டுமே தமிழ் மக்களுக்கு உரிமை வழங்கக் கூடாது என்பதில் முனைப்பாக இருந்து வருகின்றன. இரண்டு தரப்புக்களுமே தீர்வுக்கு பின்னடிக்கின்றன.

18 ஆம் அரசமைப்புத் திருத்தத்தில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் இல்லாததும், திஸ்ஸ அத்தநாயக்கவின் பி.பி.ஸி. செவ்வியும் இதனை நிரூபித்துள்ளன. ஆகவே தமிழர் பிரச்சினை மிகவும் நெருக்கடியான கால கட்டம் ஒன்றுக்குள் செல்கிறது.

# இலங்கையில் என்ன நடக்கிறது?



உச்சக்கட்ட நெருக்கடிகள் குறைந்திருக்கும் இந்த நேரத்தில் தன் சொந்த ஊரான இலங்கைக்குச் சென்று வந்திருக்கிறார் தமிழ் நாட்டைச் சேர்ந்த ஆவணப்பட இயக்குநர் சோமீதரன். எரியும் நினைவுகள், முல்லைத் தீவு போன்ற தன் படங்களின் மூலம் ஈழ மக்களின் கண்ணீரை உலக அரங்கில் காட்சிப்படுத்தியவர் இவர்.

நெருக்கடியான நிலையில் இவரின் செயற்பாட்டைக் கண்காணித்து வந்த இலங்கை அரசு இவரை நாட்டிற்குள் அனுமதிக்குமா என்ற சந்தேகம் இருந்தது. அதை மீறிச் சென்ற சோமீதரனின் அனுபவம் எப்படி இருந்தது? அதனை அவரே தெரிவிக்கிறார்.

வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் என்று நிறைய இடங்களுக்குப் போனேன். கிழக்கு மாகாணம் முழுக்க என்னால் எந்தவித அச்சமும் இன்றி புகுந்து வர முடிந்தது. இதோடு மஹிந்தவின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி போன்ற சிங்களப் பகுதிகளையும் முழுமையாகச் சுற்றிப் பார்த்தேன். நான் பிறந்ததிலிருந்துபோக முடியாமல் இருந்த பகுதிகளுக்குக்கூட இம்முறைப் பயணத்தில் போக முடிந்தது. கெடுபிடிகள் இல்லாமல் சுற்றவும் முடிந்தது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்கள் மிகுந்த சோர்வுக்குள்ளாகி இருக்கிறார்கள். இப்போது அவர்களால் அரசியல் பேச முடியவில்லை. அடுத்த வேளை சாப்பாட்டிற்குக் கஷ்டப்படும் அவர்களால் எதையும் வெளிப்படையாகப் பேச தயக்கம் இருக்கிறது. அது நியாயமும் கூட.

நிறைய தமிழ் மக்கள் புலிகள் மீது கோபத்தில் இருக்கிறார்கள். வன்னிப் பகுதியிலும் அதே நிலைமை தான். ஒரு சிலர் பிரபாகரன் இறந்ததை உண்மை என்றும் பெரும் பகுதி வன்னி மக்கள் பிரபாகரன் சாகவில்லை என்றும் இப்போதும் நம்புகிறார்கள்.

ஓர் ஈழப் போராளியை நான் சந்தித்தேன். அவரிடம், திரும்ப ஆயுதப் போராட்டம் சாத்தியமா? என்றேன். அதற்கு அவர், ''நாங்கள் இப்போது நோஞ்சான்களாக இருக்கிறோம். எங்கள் உடலுக்கு முதலில் சக்தி தேவைப்படுகிறது, அதுவே கிடைக்காதபோது ஆயுதம் ஏந்துவது நடக்கின்ற காரியமா? எங்களுக்கு கிளிநொச்சி வீழ்ந்தபோதே தெரியும், நாங்கள் தோல்வியைச் சந்தித்து, அழிவைக்காண நேரிடும் என்று. இனி ஆயுதப் போராட்டம் தழைக்கலாம். இல்லாமலும் போகலாம். அதற்குப் பதில் சொல்ல இன்னும் ஐந்து பத்து ஆண்டுகள் பிடிக்கும்'' - என்றார். இவரது மனநிலைதான் பெரும்பாலான தமிழ் மக்களின் இன்றைய மனநிலையாக உள்ளது.

பெரும்பாலான தமிழ் மக்கள் விவசாயிகள் அல்லது மீனவர்கள். இப்போது நிலம் முழுக்க இராணுவத்தின் பிடியில் இருக்கிறது. மீன் பிடித்துப் பிழைப்பு நடத்துவது கூட ஆகாத காரியமாக இருக்கிறது. அவர்களுக்கு இப்போது ஒரு தொழில் தேவை, பிழைக்க சாப்பாடு தேவை. சிலர் வாங் விட்டு ஒரு ரொட்டித்துண்டு வாங்கித்தர முடியுமா என்று கேட்கும் பரிதாப நிலையில் இருக்கிறார்கள்'' - என்றார்.

சீனாவின் மீன் பணிகள், அபிவிருத்திப் பணிகள் குறித்து அவர் தெரிவிக்கையில்,

''இலங்கையில் பெரும் பகுதிகளில் சீனாவின் அபிவிருத்தித் திட்டங்கள் தான் வேகமாக நடந்து வருகின்றன. பார்க்கும் இடமெல்லாம் சீனாவின் கொடிகள் பறக்கின்றன. பிரபாகரன் இறந்து கிடந்ததாகத் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட நந்திக்கடலை முழுமையாக சீனாவிடம் ஒப்படைத்துவிட்டது இலங்கை அரசு. மீன் உற்பத்தியை பெருக்கும் ஆய்வை இங்குதான் சீனா செய்துகொண்டிருக்கிறது. உயர்பாதுகாப்பு வலையம் இடப்பட்ட பகுதியாக அது உள்ளது.

முன்பெல்லாம் 500மீற்றருக்கு ஒரு இராணுவ முகாம் இருந்தது. இப்போது அவை 5 கிலோ மீற்றருக்கு ஒன்றாக மாற்றம் அடைந்திருக்கின்றன. ஏற்கெனவே இராணுவ முகாமாக இருந்த இடங்களில் இப்போது புத்தர் கோயில்களும் முளைத்துள்ளன.

சாதாரண மக்கள் எங்கேயும் நடமாடலாம். முள்வேலிக்குள் இருந்து வெளியேற விரும்புகின்றவர்கள் வெளியேறலாம். ஆனால், மஹிந்தவுக்கு எதிராக ஒரு வார்த்தைகூடப் பேச முடியாது. இதுதான் இப்போதைய இலங்கையின் நிலைமையாக இருக்கிறது. பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க. தலைவர் ரணில் கூட வாயைத் திறந்து பேசமுடியாது. எல்லாம் பாதுகாப்பு மட்டத்துக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டன. ஒரு மனிதனைப் பற்றிய அத்தனை விவரங்களையும் ஆவணப்படுத்திவிட்டது மஹிந்த அரசு'' - இப்படி அவர் கூறுகிறார்.

மனித உரிமை மீறல், ஜனநாயகப் படுகொலை என்று எவ்வளவுதான் குரலை உயர்த்தினாலும் மஹிந்த ராஜபக்ஷவின் மணிக்கட்டுக்குள் இருக்கிறது இன்றைய இலங்கை?!


## காணி விற்பனைக்கு

யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் 5 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.



மேலதிக விபரங்களுக்கு :- 0049 203 4103458.

## பணிப்பெண்கள் உடன் தேவை
## மலேசியா நாட்டிற்கு

தமிழ் வீட்டிற்கு தமிழ் பேசும் பணிப்பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 650 |
| இலங்கைப் பெறுமதிக்கு | Rs. 21,700 |

பாஸ்போட் உள்ளவர்கள் மற்றும் பாஸ்போட் இல்லாதவர்கள் (உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்)

- ★ மெடிக்கல் (Medical) -இலவசம்
- ★ இன்சூரன்ஸ் (Insurance) -இலவசம்
- ★ விமான டிக்கட் (Air Ticket) -இலவசம்
- ★ தங்குமிடவசதி (Accomodation)-இலவசம்
- ★ உணவு (Food) -இலவசம்

(சி/571228)

Labour Licence No.2422

**Amal Sulthan Travels & Recruitment**

540, 1/1,1/2 (1st Floor), Maradana Road, Maradana, Colombo-10

Tel:011-2691344, 077-3179592

# செயல்திறனும் மனப்பான்மையும்

வெற்றிகரமாக முரண்பாடுகளைச் சமாளித்தல் என்பது பிரச்சினை தீர்க்கும் ஒரு பயிற்சியாகும். ஆனால், இதனை ஒரு புலமை சார்ந்த பிரச்சினையாக எடுக்க முடியாது. ஏனெனில், இது தனிப்பட்ட உதவிகள், எதிர்பார்ப்புகள், பயங்கள் முதலியவற்றில் தங்கியுள்ளது. தன்னம்பிக்கையும் பரஸ்பர நம்பிக்கையும் இதன் அடிப்படைத் தேவைகளாகும்.

இதற்கு அவசியமாகும் அடிப்படைச் செயல்திறன்களும் மனப்பாங்குகளும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம்.

முதலாவதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செய்தி. அடுத்ததாகத் தொடர்பு கொள்ளல். மூன்றாவதாக ஒத்துழைப்பு.

கடலில் மிதக்கும் பனிக்கட்டியின் முனையைப்போல 'பிரச்சினையைத் தீர்த்தல்' நீர்மட்டத்திற்கு மேலாகத் தெரியும் ஒரு சிறு பகுதியாக மாத்திரம் இருக்கும். முக்கியமான பகுதிகள் நீரினுள் ஆழ்ந்திருக்கின்றன. ஒத்துழைப்பின்றி பிரச்சினையைத் தீர்க்க முடியாது. ஒத்துழைப்பு, சுமுகமான தொடர்பு கொள்ளலைப் பொறுத்திருக்கின்றது. ஒருவருடன் ஒருவர் கொண்டுள்ள தொடர்பு பயனுடையதாக இருக்க வேண்டுமானால், தம்மையும் மற்றவர்களையும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக நினைக்க வேண்டும்.

- ஏ.எச்.ஏ.ஹுஸைன் -

**வன்முறை அல்லாத மனித உறவுகள்:**

பரந்த அடிப்படையில் புதுமை காணும் அல்லது ஆக்கபூர்வமான (CREATIVE) ஆற்றலுடைய, பரஸ்பர அக்கறை கொண்ட (CARING) புரிந்துணர்வுள்ள இறுக்கமான உறவுகளே வன்முறை அல்லாத மனித உறவுகள்.

இத்தகைய உறவுகளின் முரண்பாட்டோடு சம்பந்தப்பட்ட மற்றவர்கள் இந்த முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு அவசியம் என்பதையும், முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வன்முறையற்ற வழி முறைகளே அடிப்படையாக இருக்க வேண்டும் என்பதையும் கருதுபவர்களாவர்.

இத்தகைய இயற்பண்பு, சுய அதிகாரம் (EMPOWERED) உடையவர்களிடையே இயல்பாகக் காணக்கூடியதாக இருக்கும்.




சுய அதிகாரம் தங்கள் வாழ்க்கையின் மேல் பெருமளவு கட்டுப்பாடு உடையவர்களிடையே இருக்கும். இது முழுமனிதனின் சுக வாழ்வின் ஒரு முக்கிய அம்சமாம். இது ''நமக்குள்ளே'' இருக்கும் சக்தியே அன்றி, வழக்கமாக நாம் காணும், மற்றவர்களின் மேல் செலுத்தும் அதிகாரம் அல்ல. எப்படியாயினும், இடங்கொடுத்தால் மாத்திரமே நாம் மற்றவர்கள் மீது அதிகாரத்தைச் செலுத்த முடியும்.

எங்கள் வாழ்க்கையின் நோக்கங்களையும் இலக்குகளையும் மனதில் கொண்டு அதற்காகச் செயல்பட வேண்டும். அந்தச் சந்தர்ப்பங்களில் எம்மைப் பாதிக்கக்கூடிய முடிவுகளும் நடைமுறைகளும் எடுக்கப்படும்போது அவற்றுடன் ஒத்துழைப்பதா, இல்லையா என்று முடிவெடுக்க முடியும்.

சில சமயங்களில் நாம் அதிகாரத்துடன் ஒத்துழைக்காமல் விட்டால் வெறுக்கத்தக்க விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் கூட ஒத்துழையாமையானது எமது கொள்கைகளுக்கும் இலக்குகளுக்கும் சார்பான முடிவாக இருக்கும்.

இந்தப் பொதுக்கருத்தை ''சுய கட்டுப்பாடு அற்ற''வர்களிடையே நடைமுறைப்படுத்துவது சிரமமாக இருக்கும். இவர்களுக்கு, தமக்கென நோக்கங்களையும் இலக்குகளையும் உருவாக்கி அவற்றை நோக்கிச் செயற்படச் சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை.

இத்தகையதொரு நிலைமைக்கு இனம், வகுப்பு, பால், வயது முதலியவை காரணமாக இருக்கலாம்.

இந்த நிலையைத் தனிநபரிடம் மாத்திரமன்றி வீடுகள், நிறுவனங்கள், சங்கங்கள் என்பவற்றிலும், பொதுவாக சமூகத்திலும் காணலாம்.

இந்த நிலையைக் குழந்தைகளிடமும் சிறுபிள்ளைகளிடமும் காணக்கூடியதாக இருக்கும். அவர்கள் அதிகாரமற்றவர்கள் எனக் கருதப்படுகிறார்கள். பெற்றோர், ஆசிரியர், முதியவர்களால் இவர்கள் என்ன செய்ய வேண்டும் எனப் பணிக்கப்படுகிறார்கள். அப்படியே நடக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் தங்கள் அதிகாரத்தை ஆக்கபூர்வமான வழியிலன்றி, ஒத்துழைப்பின்மை மூலம் காட்டுகிறார்கள்.

பிள்ளைகள், தங்கள் வாழ்க்கையின் மேல் பொறுப்புள்ள வகையில் அதிகாரம் செலுத்த முடியும். இந்தப் பொறுப்பு தங்களுடன் வாழ்பவர்களையும், தங்களுடன் பயில்பவர்களையும் வேலை செய்பவர்களையும் சமூகத்தையும் கூட உள்ளடக்கும்.

இத்தகைய ''சுய அதிகாரம்'' பயனுள்ள சுயபிம்பம் (SELF IMAGE), தொடர்புகொள்ளும் ஆற்றல், மற்றவர்களுடன் ஒத்துழைக்கும் தன்மை, முரண்பாடுகளைத் தீர்க்கும் ஆற்றல் முதலியவற்றில் தங்கியிருக்கிறது. ✱

உங்களது
அந்தரங்க பிரச்சினைகள் மற்றும்
குடும்பப் பிரச்சினைகள்,
சந்தேகங்கள் தொடர்பான
கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்
உளநல ஆலோசகர்

**ஏ.எச்.ஏ.ஹுஸைன்.**

கேள்விகள் வந்துசேரவேண்டிய முகவரி:
" A.H.A. HUSSEIN
KAYAR ROAD,
ERAVUR .
ஈமெயில்:
abdulhussein525@gmail.com

# தொலைபேசியால் வாழ்க்கையை தொலைத்தவள்

கேள்வி:

எனது வயது 18. நான் ஒரு பெண். நான் ஒருவரை கடந்த 4 மாதகாலமாகக் காதலிக்கிறேன். ஆனால், இருவரும் நேரில் சந்தித்ததில்லை. இருவரும் பரஸ்பரம் இன்னாரென்றும் தெரியாது. என் பிரச்சினை என்னவென்றால், நான் அவரைப் பற்றி விசாரித்துப் பார்த்ததில் அவர் திருமணம் முடித்தவர் என்று கேள்விப்பட்டேன். ஆனால், அவரோ இல்லை என்கிறார். எப்படியிருந்தாலும், என்னால் அவரை வேறு யாருக்கும் விட்டுக்கொடுக்க முடியாமலுள்ளது. இதனால் மனமுடைந்து போயுள்ளேன். தயவுசெய்து எனக்கு ஓர் ஆலோசனை வழங்கவும்.

பதில்:

உங்களுக்கு அவஸ்தையையும், அவசரத்தையும், அவதியையும் ஏற்படுத்தியிருக்கும் நிலைமைக்கு முக்கிய காரணம் உங்கள் வயது. ''டீன் ஏஜ்'' எனப்படும் 'பால்ய' வயதுக் கோளாறுக் கட்டத்தில் நீங்கள் நிற்கிறீர்கள். பரபரப்பையும் பதற்றத்தையும் உண்டாக்கும் பொறுமையற்ற வயதுக் கட்டம்தான் இது.



இத்தகையதொரு கட்டத்தில், சற்றுப் பொறுமையாக இருந்து, நிதானித்து, ஆற அமர யோசித்து முடிவெடுக்கத் தவறினால், இளமையில் எமது வாழ்க்கையைச் சரியான இலக்கு நோக்கி வழிநடத்திச் செல்லாமைக்கான பின்விளைவுகளைப் பின்னாட்களில் காலமெல்லாம் நினைத்து வருந்த வேண்டியிருக்கும். இப்படி அநேகம் பேர் வருந்திக்கொண்டிருப்பதை நாம் காண்கிறோம்.

முன்பின் தெரியாத ஒருவரை, அதுவும் ஏற்கனவே திருமணம் முடித்து மனைவியோடு வாழ்வதாக அறியப்படும் ஒருவரை வெறும் தொலைபேசி மூலம் கிடைத்த நட்பினால் மனதிற்குள் இருத்தி, அதனையே நினைத்து உருகி வாடுவது மடமைத்தனம். அதிலும் இன்னொருத்திக்கு கணவனான ஒருவரை எப்படியும் விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று அடம்பிடிப்பது அடி முட்டாள்தனம்.



பேசாமல் இந்தத் தொடர்பை இத்தோடு நிறுத்திக் கொண்டு உண்மை பேசக்கூடிய, நேர்மையான நல்லதொரு நட்புறவைக் கண்டுபிடியுங்கள். வயதுக்கோளாறுக்கு இடமளிக்காமல் நல்லதொரு வாழ்க்கைக்கு வழிகோலுங்கள். உங்களுக்கு இன்னும் வயதிருக்கிறது. கல்வியைத் தொடருங்கள். அது உங்களுக்கு நின்று நிதானிக்கவும் நிறைவான வாழ்க்கையைத் தேடித்தரவும் வழி காட்டும்.

கேள்வி:

நான் ஒரு பெண். பல்கலைக்கழக மாணவி. எனது பிரச்சினை என்னவென்றால், நான் சிறுவயதிலிருந்தே ஒருவர் சொன்னதை மற்றவரிடமும், மற்றவர் சொன்னதை இன்னுமொருவரிடமும் சொல்வதிலே மகிழ்ச்சி அடையும் பழக்கமுள்ளவள். இதே பழக்கவழக்கம் எனக்கு பல்கலைக்கழகம் வரை வந்துவிட்டது.

இந்த நடத்தையினால் நான் எனது பல்கலைக்கழக நண்பிகளிடத்தில் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வந்துவிட்டது. அதாவது, பல்கலைக் கழகத்திலும் எனது சக மாணவிகள் மத்தியில் எனது இந்த நடத்தை குழப்பத்தை உண்டுபண்ணி, அது பெற்றோர் மட்டத்திற்கும், பின்னர் பல்கலைக்கழக நிர்வாக மட்டத்திற்கும் சென்றுவிட்டது. இது எனக்கு 'கறுப்பு அடையாளத்தைத்' தேடித் தந்துவிட்டது. எனது கேள்வி என்னவெனில், எனது இத்தகைய நடத்தை சரியானதா, தவறானதா?

பதில்:

இவ்வளவு காரியங்கள் நடந்தபின்பும் உங்களது நடத்தை சரியானதா, தவறானதா என்று கேட்கிறீர்கள்! சந்தேகத்திற்கு இடமின்றி, உங்களது இத்தகைய தொடர்பாடல் வழிமுறை, அதாவது ஒருவர் சொல்வதை இன்னொருவரிடம் போய் அப்படியே ஒப்புவிக்கும் நடத்தை மிகத் தவறானது, அவசியமற்றது, அர்த்தமற்றது அத்தோடு ஆபத்து நிறைந்ததும் கூட.

இத்தகைய நடத்தையும் ஒருவகையான ஆளுமைக் குறைபாட்டால்தான் ஏற்படும். இரண்டு விடயங்கள் இதில் உள்ளன. ஒன்று மற்றையவர்களின் விடயங்களைத் தேடிப்பிடித்துக் காவிக்கொண்டு வந்து இன்னொருவரிடமோ, பலரிடமோ சேர்ப்பிப்பது. இதனால் மற்றவர்களால் முடியாத ஒரு காரியத்தை நீங்கள் சாதித்துவிட்டதாக உங்களுக்குள் நீங்கள் அடையும் திருப்தி.

மற்றையது, நீங்கள் காவிக்கொண்டுபோய்ச் சேர்க்கும் விடயங்களால் உண்டாகும் பதில் விளைவுகளால் நீங்கள் அடையும் மகிழ்ச்சி.

ஒட்டு மொத்தத்தில் நோக்கினால் இத்தகைய நடத்தைகள் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், குடும்ப வாழ்க்கைக்கும், சமூக நலன்களுக்கும் கெடுதலானவைதான்.

சமூக நலன்நாடி நல்ல விடயங்களைப் பரிமாறிக் கொள்ளலாம். அதில் கெடுதிகள் விளைய வாய்ப்பில்லை.

உங்கள் தகவல் பரிமாற்ற நடவடிக்கை அவதூறு மற்றும் புறங்கூறுதலோடு சம்பந்தப்பட்டது. அதாவது, ஒருவரைப் பற்றி இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் கூறுவது அவதூறாகும். சம்பந்தப்பட்ட நபர் இல்லாதபோது அவர்சார்ந்த விடயங்களைக் கதைப்பது புறங்கூறுதலாகும். ★

# ஈழப்போராட்டம் காஷ்மீர் போகிறது

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் ஏராளமான அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவங்கள் இந்தியாவில் தமிழகத்தைத் தவிர எந்த மாநிலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை. இது ஈழ ஆதரவாளர்களிடையே வேதனையான விஷயமாக இருந்து வந்தது.

இந்நிலையில் ஈழப் போராட்ட வரலாற்றை காஷ்மீர் மக்களிடம் கொண்டு செல்ல முயற்சி செய்யப் போவதாக சொல்லியிருக்கிறார் பேராசிரியர் கிலானி.



'மே 17 இயக்கம்' சார்பில் ஈழப் போராளி திலீபன் நினைவு நாள் தமிழ்நாடு நெல்லையில் அனுசரிக்கப்பட்டது. இதில் காஷ்மீர் விடுதலைக்காக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வரும் மனித உரிமைப் போராளி கிலானி கலந்து கொண்டார். யார் இந்த கிலானி? டெல்லி பல்கலைக்கழகத்தின் உருதுப் பேராசிரியரான கிலானி நாடாளுமன்றத் தாக்குதலின் போது கைது செய்யப்பட்டவர். தாக்குதலுக்கு இவர்தான் மூளையாகச் செயல்பட்டார் என்று கூறி தூக்குதண்டனை வரை கொண்டுபோய் நிறுத்தியது பொலிஸ். விசாரணையில் நிரபராதி என்று நிரூபிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

சிறையிலிருந்து வெளியே வந்த சில நாட்களில் துப்பாக்கித் தாக்குதலுக்கு ஆளானார். உயிர் பிழைத்துக் கொண்டாலும் இன்னமும் அவர் உடலில் நான்கு ரவைகள் இருக்கின்றனவாம். துப்பாக்கிச் சூடு நடத்தியது யார் எனத் தெரியவில்லை என பொலீஸ் சொன்னாலும் 'றோ'வின் வேலைதான் என்கிறார்கள் கிலானி ஆதரவாளர்கள். திலீபனின் நினைவுநாள் நிகழ்வில் கிலானி பேசும் போது,

''காஷ்மீர் என்பது ஒரு தனி நாடு. 1850களில் அங்கு செல்ல வேண்டுமென்றால் விசா அவசியம். விசா இல்லாமல் சென்ற ஜனசங் தலைவரையே கைது செய்து சிறையிலடைத்தது காஷ்மீர் அரசு. இந்தியா - பாகிஸ்தான் சண்டையின் போது ஐ.நா.தலையிட்டு போர் நிறுத்தம் செய்ததோடு இராணுவம் நிற்கும் இடத்தில் லைன் ஆப் கண்ட்ரோலை உருவாக்கியது. அந்த லைன் ஆப் கண்ட்ரோல் என்பது ஒரு கற்பனைக் கோடு. நிலத்தில் கோடு எதுவும் வரையவில்லை. ஆனால், இந்தியாவும் பாகிஸ்தானும் லைன் ஆப் கண்ட்ரோல் வரை உள்ள பகுதி தங்களுக்கே சொந்தம் என்று கூறி வருவதுதான் பிரச்சினையின் ஊற்றுக்கண்.

1950 ஆம் ஆண்டு நேருவும், ஷேக் அப்துல்லாவும் கலந்து கொண்ட கூட்டத்தில் காஷ்மீர் மக்கள் விரும்பும் வரைதான் இந்திய இராணுவம் காஷ்மீரில் இருக்கும் என்றார் நேரு. ஆனால் 1994 இல் காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இன்றைக்கு உலகிலேயே அதிக இராணுவம் குவிக்கப்பட்டிருக்கும் நாடு காஷ்மீர்தான். 450 தீவிரவாதிகள் இருப்பதாய்ச் சொல்லி அவர்களைப் பிடிக்க 7லட்சம் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டிருக்கிறது.

ஒரு 70 வயது பிச்சைக்காரரைக் கொன்று விட்டு, அவரை முன்னாள் லக்ஷர் இதொய்பா தளபதி என்கிறார்கள். எட்டு வயதுச் சிறுவன் கூட இராணுவத் தால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறான். பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் காணாமல் போயிருக்கிறார்கள்.

சமீபத்தில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் அங்கு சென்ற போது காஷ்மீர் மக்கள் எழுப்பிய கோஷம் எங்களுக்கு விடுதலை வேண்டும் என்பதுதான்'' - இப்படி காஷ்மீர் விடுதலையின் அவசியத்தைத் தெளிவாக கூறி விட்டு கிலானி அமர்ந்தார்.




தமிழகத்தில் திலீபன் நினைவு நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் ஈழப்பிரச்சினை பற்றி ஒரு வார்த்தை கூட பேசாதது நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்களை குழப்பத்துக்குள்ளாக்கியது.

அடுத்துப் பேசவந்த கவிஞர் காசி ஆனந்தன், ''காஷ்மீரிலாவது இரண்டு தடவைகள் ஐ.நா. தலையிட்டது. ஆனால், ஈழத்தில் இனப்படுகொலை நடந்த போது யாருமே கண்டு கொள்ள வில்லை. இன்றைக்கும் முள்வேலிக்குள் ஆயிரக்கணக்கான தமிழர்கள் அடைபட்டுக் கிடக்கிறார்கள். பெண்கள் பாலியல் ரீதியாய் துன்புறுத் தப்படுகிறார்கள். சுமார் நாற்பதாயிரம் புலிகளை அழித்து விட்டோம் என்று குதூகலிக்கிறார்கள். அந்தப் புலிகளுக்கு நெருங்கிய இரத்த உறவினர்கள் இரண்டு லட்சம் பேரின் இதயத்திலாவது தீ கனன்று கொண்டிருக்கும். அது தனி ஈழம் அமையும் வரை ஓயாது'' என்றவர், பேராசிரியர் கிலானியைப் பார்த்து, ''காஷ்மீர் மக்களின் துயரங்களைப் பகிர்ந்து கொள்ள தமிழ் நாட்டில் தமிழர்கள் மேடை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் நீங்கள் காஷ்மீரில் எங்களுக்கு மேடை அமைத்துத் தாருங்கள்'' என்றார்.

மறுநாள் தான் தங்கியிருந்த ஹோட்டலில் காசி ஆனந்தன் உள்ளிட்ட ஈழ ஆதரவாளர்களிடம் ஈழப் பிரச்சினை குறித்து வெகுநேரம் உரையாடியிருக்கிறார் கிலானி. இதில் விடுதலைப்புலிகள், பிரபாகரன், ஈழ வரலாறு குறித்து கிலானிக்கு தெளிவாக விளக்கியிருக்கிறார் காசி ஆனந்தன். அதனை கவனமாகக் கேட்ட கிலானி, காஷ்மீரில் ஈழ ஆதரவுக் களம் அமைக்க ஒப்புக் கொண்டார்.

இதுபற்றி மே 17 இயக்கத்தின் நெல்லை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் லேனா குமாரிடம் கிலானி கூறும்போது, ''ஈழ மக்களின் துயரம் கேட்டு அதிர்ந்து போனேன். காஷ்மீர் மக்களும், ஈழ மக்களும் படும் துன்பங்கள் ஒரே மாதிரியானவைதான். இந்திய இராணுவத்தால் இரண்டு பேரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே காஷ்மீரில் ஈழ மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிப் பேசினால் அந்த மக்கள் எளிதாகப் புரிந்து கொள்வார்கள்'' என்றார்.

''அது சம்பந்தமான ஓடியோ, வீடியோக்களை எனக்கு அனுப்ப வையுங்கள். காஷ்மீரில் உள்ள பத்திரிகைகளில் அதை பிரசுரம் செய்வோம். அப்போதுதான் காஷ்மீர் மக்கள் பிரச்சினையைப் புரிந்து கொண்டு ஈழ விடுதலைக்கு ஆதரவு தருவார்கள்'' - என்று கிலானி கூறினார். லேனா குமார் கூறும்போது, ''முள்ளிவாய்க்காலில் அவ்வளவு பெரிய துயரம் நடைபெற்றிருக்கிறது. தமிழ்நாட்டைத் தவிர வேறு மாநிலங்களில் எந்த எதிரொலியும் இல்லை. எனவேதான் தனி ஈழப் போராட்ட வரலாற்றை இந்தியா முழுக்க கொண்டு செல்லப் போகிறது மே 17 இயக்கம். அதன் முதல் கட்டமாக பேராசிரியர் கிலானியைப் பேச வைத்திருக்கிறோம். அடுத்த கட்டமாக தெலுங்கானாவைச் சேர்ந்த கவிஞர் வரவரராவ், பஞ்சாப் பத்திரிகையாளர் ஜக்மோகன்சிங், காஷ்மீர் ஹூரியத் தலைவர் கிலானி ஆகியோரையும் அழைத்து வந்து பேச வைக்கப் போகிறோம். இதன் மூலம் இந்தியா முழுக்க ஈழக் கோரிக்கைக்கு வலு சேர்ப்பது தான் எங்கள் திட்டம்'' என்றார்.

ஈழ மக்களின் நல்வாழ்வு இந்தியாவைத் தவிர்த்து சாத்தியமில்லை என ஈழ ஆதரவாளர்களே ஒப்புக் கொள்ளும் நிலையில், மே 17 இயக்கத்தினரின் இந்த முயற்சி வெற்றி அளிக்குமா? ★

நன்றி : இணையம்

# அறிஞர் அண்ணாவின் சமயோசித பேச்சு

1962. தமிழ்நாட்டுல் 'ஹிந்தி எதிர்ப்புப் போராட்டம்' கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. டெல்லியில் இருந்தவர்கள் தமிழ்நாட்டில் இருக்கும் சூழ்நிலை புரியாமல், கண்டபடிக்கு பேட்டி கொடுத்துக்கொண்டு இருந்தார்கள்.

அந்த காலத்தில் தமிழ்நாட்டில் 'அண்ணா' என்று சொன்னால்போதும், சின்னவர்கள் தொடக்கம் பல்லுப் போன கிழவன்மார் வரைக்கும் அப்படியொரு வேகம் தொத்திக்கும். அண்ணா மேடைப் பேச்சுப் பேசுகிறார் என்றால் அந்த இடமே ஒரு குதூகலமாக இருக்கும். அவரின் பேச்சு கேட்கிறவர் எல்லோரையும் அப்படியே கட்டிப்போடும். அந்த அளவுக்கு அறிஞர் அண்ணாவின் தமிழ் தித்திக்கும். தான் சொல்ல வந்த விஷயத்தை எல்லோரது மனதிலும் நன்கு பதிவாகிற மாதிரி பேசுவதில் அண்ணாவுக்கு நிகர் அண்ணா தான்.

டெல்லி நாடாளுமன்றத்தில் ஹிந்தி மொழியை தேசிய மொழியாக்குவது பற்றித் தீர்மானம் எடுப்பதற்காக கூட்டம் கூடியிருந்தது. ஆளுங்கட்சியை சேர்ந்தவர்களில் ஒருவர் எழுந்தார். ''ஹிந்தியை தேசிய மொழியாக அங்கீகரிக்க ஏன் எதிர்க்கிறீர்கள் என்று புரியவில்லை'' என்று கேட்டார். ''சிம்பிள் லோஜிக். சின்னக் குழந்தைக்கு கூட இது புரியும். இந்தியாவில் அதிகமான மக்கள் பேசுகிற மொழி ஹிந்தி. அதனால் ஹிந்தி மொழியை தானே தேசிய மொழி ஆக்க முடியும்..!'' என்று அவர் சொல்லி முடித்தார்.

அண்ணா எழுந்தார். ''அதிகமான மக்கள் பேசுகிற மொழி தான் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்று சொல்கிறீர்கள்.. அப்படி பார்த்தால், எங்கள் நாட்டில் அதிகமாக இருக்கிற பறவை காக்கா தான். பிறகு ஏன் மயில் தேசியப் பறவையாக இருக்கு...? நாட்டில் எலி இல்லாத மாநிலமே இல்லை. அதனால் இனிமேல் புலிக்கு பதிலாக எலியை தேசிய விலங்காக அறிவித்துவிடலாமா..?'' என்றார். நாடாளுமன்றமே அதிரும் அளவுக்கு அங்கு இருந்தவர்கள் கைதட்டினார்கள்.

அந்த ஆளும் கட்சித் தரப்பைச் சேர்ந்தவர் மீண்டும் கேட்டார். ''சரி.. அப்படியானால் இந்தியர்கள் ஒருத்தொருக்கொருத்தர் பேச, இணைப்பு மொழியாக எது இருக்கும்..?''



''ஏன்.. இப்ப தான் பள்ளி கூடத்திலேயே ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கிறோமே..'' என்றார் அண்ணா.

''ஆங்கிலம் சொல்லித் தருவது உலகத்தோடு தொடர்பு கொள்ள. இந்தியர்களுக்குள் தொடர்பு கொள்ள ஒரு மொழி வேண்டும். இந்தியாவில் நிறைய பேருக்கு தெரிந்த மொழி ஹிந்தி.. அதனால் கொஞ்சம் பேர் மட்டும் ஹிந்தி கற்றுக் கொண்டால் போதும். அதுக்கு தான் ஹிந்தியை தேசிய மொழியாக்க வேண்டும் என்று சொல்றோம்..'' என்றார் அந்த ஆளும் கட்சித் தரப்பு நபர்.

''வெளிநாட்டுக்காரங்களோடு பேச பயன்படுகிற அதே ஆங்கிலத்தை, இந்தியாவில் இருக்கிறவர்களுடனும் பேச பயன்படுத்தலாம். எதுக்காக இன்னொரு மொழி கற்றுக்கொள்ள வேண்டும்? உங்க வீட்டில் இரண்டு நாய்கள் இருக்கு என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒன்று பெரியது. மற்றது சின்னது. பெரிய நாய்க்காக ஒரு கதவும், சின்ன நாய்க்காக ஒரு கதவும் வைப்பீர்களா? பெரிய நாய் வந்து போகிற கதவையே சின்ன நாயும் பயன்படுத்திக்கொள்ளும் தானே..?'' என்று கேட்டார் அண்ணா.

அறிஞர் அண்ணாவினது டைமிங் சென்ஸ், டெல்லிக்காரங்களையே வாயடைக்க வைத்துவிட்டது!

மேற்கண்ட உரையாடல் ஆங்கிலத்தில் தான் நடந்தது. அண்ணா இவ்வளவு தெளிவாக ஆங்கிலம் பேசுவார் என்று அங்கே இருந்தவர்கள் ஒருவரும் எதிர்பார்க்கவில்லை. அண்ணா சொன்னார் :
"I rarely speak English; But my English is not rare..!".

# செலவழிப்பதில் நீங்கள் எப்படி?



பணம் செலவழிக்கும் விஷயத்தில் நீங்கள் எப்படி? சிக்கனப் பேர்வழியா, இல்லை 'ஓட்டைக்கை'க்காரரா? இதோ, இப்போது விடை தெரிந்துவிடும். கீழ்க் கண்ட சூழ்நிலைகளில் நீங்கள் எப்படிச் செயல்படுவீர்கள் என்று 'அ' அல்லது 'ஆ'வை தேர்ந்தெடுங்கள் பார்க்கலாம்...

1. மாதக் கடைசி. அப்போது நீங்கள் ஒரு முக்கியமான நிகழ்ச்சிக்கு புதிய ஆடை வாங்க வேண்டும் என்றால்...

அ. உங்களின் 'வங்கிப் பண இருப்பு' பலவீனமாக இருக்கிறது. மாதம் முழுவதும் அப்படி என்னதான் செலவு செய்தோம் என்று குழம்புகிறீர்கள்.

ஆ. விலை உயர்ந்த ஆடை வாங்குவதற்குத் தேவையான பணம் உங்கள் கணக்கில் இருக்கிறது. வேண்டுமென்றால், தரமான காலணிகளையும் கூட நீங்கள் வாங்கிக்கொள்ளலாம்.

2. ஒரு முதலீட்டுத் திட்டம் பற்றி உங்களுக்குத் தெரிய வருகிறது. அப்போது...

அ. 'பணத்தை வங்கியில் வைத்திருந்தால் போதும், முதலீடு எல்லாம் வீண் வேலை' என்று உங்கள் தந்தை கூறுவதை நீங்கள் உடனே ஏற்றுக்கொள்கிறீர்கள்.

ஆ. நிதி ஆலோசகர்களின் ஆலோசனையைப் பெற்று அதன்படி நடக்கிறீர்கள்.

3. உங்களுக்கு வந்திருக்கும் 'கிரெடிட் கார்ட் ஸ்டேட்மென்ட்' பயமுறுத்துகிறது. ஆனால் பெரிய காலணிக் கடையின் கண்ணாடியில் கண்ட அழகான செருப்பு உங்களின் மனதில் ஓடிக்கொண்டே இருக்கிறது. அந்த நேரத்தில்...

அ. கூடுதலாக ஒரே ஒரு செலவு செய்வதால் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. அடுத்த மாதத்தில் இருந்து செலவை இறுக்கிப் பிடித்துக்கொள்ளலாம் - உறுதியாக!

ஆ. கொஞ்சம் பணம் சேர்த்துக்கொள்ளும் வரை செருப்பு வாங்குவதைத் தள்ளிப் போடலாம் அல்லது குறைந்த பட்சம் அடுத்த மாதம் வரை யிலாவது.

4. நீங்கள் பணிபுரிவது தனியார் நிறுவனத்தில். ஓய்வுக் காலத்தில் உங்களுக்கு எந்த ஓய்வூதியமும் கிடைக்காது...

அ. அதனாலென்ன... கையில் பணம் தாராளமாகக் கிடைக்கும்போது சேமித்துக் கொள்வேன். இது ஜாலியாக பணத்தைச் செலவழிப்பதற்கான நேரம்.

ஆ. ஓய்வு காலம் குறித்து நீங்கள் சிந்தித்திருக்கிறீர்கள். புத்திசாலித்தனமாக பல்வேறு முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்திருக்கிறீர்கள்.

5. உங்களின் நண்பர்கள் பலர் உங்களிடம் இருந்து பணம் கடன் வாங்கியிருக்கிறார்கள். அதனால் பரவாயில்லை. காரணம்...

அ. அவர்கள் உங்களின் நண்பர்கள். எனவே பணத்தைத் திருப்பிக் கொடுக்காவிட்டாலும் பிரச்சினையில்லை.

ஆ. நண்பர்களுக்கு கடன் கொடுப்பதை முற்றிலுமாக நிறுத்த முடியாது. ஆனால் உங்களிடம் யார், எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறார்கள், அதை எப்போது திருப்பக் கொடுப்பார்கள் என்பதில் தெளிவாக இருக்கிறீர்கள். கடன், நட்பைக் காவு வாங்கிவிடக் கூடாது என்று நினைக்கிறீர்கள்.

நீங்கள் அதிகமாக 'அ'வை தேர்ந்தெடுத்திருந்தால்...

நீங்கள் உங்களின் பொருளாதார நிலையை ஒழுங்குபடுத்த வேண்டிய நேரம் இது. நீங்கள் பணத்தைச் சேமிப்பதிலும், சரியான முதலீடுகளை மேற்கொள்வதிலும் உடனே கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் பணம் உங்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும்போது தடுமாறாமல் இருக்க முடியும்.

அதிகமாக 'ஆ'வை தேர்ந்தெடுத்திருந்தால்...

பண விஷயத்தில் நீங்கள் மிகவும் கெட்டி. உங்களின் சேமிப்புகள், முதலீடுகள் காரணமாக நீங்கள் எந்தக் காலத்திலும் எவரிடமும் கையேந்த வேண்டி வராது. *



★ எப்போதும் வீட்டில் பால் பவுடர் இருந்தால் அவசரத் தேவைக்கு கை கொடுக்கும். தண்ணீரில் கரைத்து கோப்பி, தேநீர் போடலாம். பவுடரைக் கரைத்து, கொதிக்க வைத்து தயிராகத் தோய்க்கலாம். பாயாசம், மில்க் ஷேக், ஐஸ்கிரீம் சுலபமாகத் தயாரிக்கலாம்.

★ படுக்கை அறையின் விதானத்தில் நட்சத்திரம், கோள்கள் என்று இரவில்

## டிப்ஸ்...

ஒளிரும் ஸ்டிக்கர்களை ஒட்டுவது தற்போது பரவி வருகிறது. இந்த ஸ்டிக்கர்களை வேறுவிதமாகவும் பயன்படுத்தலாம். அதாவது, ஸ்விட்ச் போர்ட், மெழுகுவர்த்தி மற்றும் தீப் பெட்டி வைக்கும் இடம், டோர்ச் லைட் உள்ள அலுமாரி என்று ஒட்டி வைத்தால், திடீரென கரன்ட் கட் ஆகும் சமயங்களில் கைகொடுக்கும்.

★ சமையல் செய்யும்போது, பாக்கெட் வைத்த ஏப்ரன் அணிந்து கொள்வது மிகவும் சௌகரியம். கை துடைத்துக் கொள்ள ஒரு கைக்குட்டை, மறந்த விஷயங்கள் நினைவுக்கு வரும்போது எழுத பேப்பர்-பென்சில், மொபைல் போன் இவற்றையெல்லாம் கண்ட இடத்தில் வைத்துவிட்டு தேடாமலிருக்கலாம்!

## முருங்கை வடை

**தேவையானவைகள்:**

ஆய்ந்த முருங்கை இலை - 1/2 கப்
பச்சரிசி மா - 3/4 கப்
உளுந்து மா - 1 மேஜைக்கரண்டி
மிளகாய்த் தூள் - 1/4 தேக்கரண்டி
மிளகுத் தூள் - 1/2 தேக்கரண்டி
உப்பு - ருசிக்கேற்ப
எண்ணெய் - சுட்டு எடுக்க

**செய்முறை**

ஈர்க்கு இல்லாமல் ஆய்ந்த இலைகளைச் சிறிது தண்ணீர் விட்டு மைய அரைக்கவும். ஒரு பாத்திரத்தில் பச்சரிசி மா, உளுந்து மா, மிளகாய் மற்றும் மிளகுத் தூள், உப்பு ஆகியவற்றை இட்டு அரைத்த விழுதையும் சேர்த்து திட்டமான தண்ணீர் சேர்த்து மிளகு வடை பதத்தில் தட்டி சூடான எண்ணெயில் பொரித்து எடுக்கவும். இந்தகைய முருங்கை வடை சளியைக் கரைக்கும். வயிற்றுப் புழுக்களை அகற்றும். நரம்புகளுக்கு டொனிக் போன்று வலுவூட்டுவது. வயிற்றைச் சுத்தம் செய்து, சீராக நீர் பிரிய வைக்கும் ஆற்றல் உள்ளது.

## காதலின் நிறம் சிவப்பு

பெண்களுக்கு கறுப்பின் மீது ஓர் ஈர்ப்பு உண்டு என்று பலரும் சொல்வார்கள். புதிய ஆய்வு இதை மறுக்கிறது. சிவப்பு தான் பெண்களை ஈர்க்கும் நிறம் என்கிறது, புதிய ஆய்வு.

அமெரிக்காவைச் சேர்ந்த உளவியல் அமைப்பு ஒன்று இது தொடர்பாக 7 வித சோதனைகளை நடத்தியது. ஏராளமான பெண்களிடம் பல்வேறு ஆண்களின் படங்கள் கொடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டது. அப்போது சிவப்பு உடை அணிந்த ஆண்களின் படத்தையும், சிவப்பு பின்னணி நிறத்திற்கு முன்பு ஆண்களை நிற்க வைத்து எடுக்கப்பட்ட படங்களையும் தமக்கு நன்றாகப் பிடித்திருப்பதாக அதிகம் பெண்கள் கூறினார்கள்.

மற்ற நிறங்களைவிட சிவப்பு நிறம், ஆற்றல் மிக்கதாகவும், அதிக கவர்ச்சி உடையதாகவும் இருப்பது தெரியவந்தது. அதிகமாக பாலுணர்வைத் தூண்டவும், காதல் உணர்வைப் பெருக்கவும் செய்கிறதாம். அத்துடன் மதிப்பு மிக்கதாகவும் சிவப்பை கருதுகிறார்கள்.

சிவப்பு மறுப்பின் அடையாளம் என்று நேற்றுவரை நினைத்திருந்தால் அதை மாற்றிக் கொள்ளுங்கள். காதல் சொல்லப் போனாலும் சிவப்பு உடை அணியலாம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

## ஜீன்ஸ்

இளைய தலைமுறையினரின் விருப்பு உடையாகிவிட்டன ஜீன்ஸ் பேண்ட்டுகள். இளம் பெண்கள் ஜீன்ஸ் அணிந்து நாகரிக மங்கைகளாக நடமாடுகிறார்கள். கல்லூரி மாணவ - மாணவிகள் தங்களுக்குப் பிடித்த உடையாக இதைத்தான் குறிப்பிடுகிறார்கள்.

ஜீன்ஸை விரும்புபவர்களுக்கு உபயோகமான டிப்ஸ்:

★ ஜீன்ஸ் துணிகளுக்கு மட்டுமான பிரத்தியேகக் கடைகளுக்குச் சென்று ஜீன்ஸ் வாங்குங்கள்.

★ பெரிய கடைகளில் விதவிதமான டிசைன்களில் ஏராளமான துணிகள் கிடைக்கும். பிடித்த மாடல், விரும்பும் நிறம் என உங்கள் ஆசையை நிறைவேற்றும் துணியைத் தேர்வு செய்ய முடியும். அத்துடன் பிடித்த துணியை அணிந்து பார்த்து பொருத்தமாக இருக்கிறதா? என்று தெரிந்து கொள்ளவும் வசதி இருக்கும்.

★ எந்த வகை பேண்ட் எடுக்கப் போகிறோம் என்பதை முதலில் தீர்மானித்துவிடுங்கள். 'லோவெஸ்ட் லெக், ஸ்ட்ரெய்ட் லெக், புட்கட், எக்ஸ்ட்ரா லோங்' என பல மொடல்களில் பேண்ட்டுகள் கிடைக்கின்றன. 'என்னிடம் ஏற்கனவே இந்த மொடல் இருக்கிறது, இந்த முறை வேறு மொடல் எடுக்கலாம்' என்று எண்ணி உங்களுக்குப் பொருந்தாத மொடலைத் தேர்வு செய்துவிடாதீர்கள். உங்கள் உடல் வாகிற்கு எந்த மொடல் பேண்ட் நன்றாக இருக்கும் என்பதை அறிந்து அதற்கேற்ப தேர்வு செய்யுங்கள்.

★ முன்பெல்லாம் ஜீன்ஸ் பேண்ட்டுகள் தடிப்பாக இருந்தன. இப்போது மென்மையான துணிகளிலும் தயாராகின்றன. எனவே அடர் நிறம், கோடு போட்ட, பலமான துணியிலான ஜீன்ஸ்களை தேர்வு செய்யுங்கள். அவை நீண்ட காலம் உழைக்கும்.

★ பெரும்பாலும் ஜீன்ஸ் பேண்ட்டுகள் ரெடிமேடாகத்தான் கிடைக்கின்றன. அவை உங்கள் உடலுக்கு நன்றாகப் பொருந்துகின்றனவா என்று பாருங்கள். இல்லாவிட்டால் உங்கள் அளவுக்கேற்ப தைத்து வாங்கினால், அது உடலோடு நன்றாகப் பொருந்துவதாகவும், அழகை மெருகேற்றுவதாகவும் அமையும்.

★ உங்கள் பட்ஜெட்டை முடிவு செய்துவிட்டு ஜீன்ஸ் எடுக்கச் செல்லுங்கள். குறைந்த விலையில் எடுக்க விரும்பினால் வீதியோரக் கடைகளில் தள்ளுபடிக் காலங்களில் வாங்கலாம்.



# மலையாள எழுத்தாளர் வைக்கம் முகம்மது பஷீர்

மலையாள இலக்கிய உலகில் பலராலும் பேசப்படும் ஓர் அமைதியான மக்கள் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர் வைக்கம் முகம்மது பஷீர் ஆவார். தாம் கண்டு கதைக்கும், அருகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மானிடக் கதாபத்திரங்களை முன்னிறுத்தித் தமது கதைகளைப் படைத்துள்ளார். அதுமட்டுமன்றி உயிருடன் உலாவரும் உயிரினங்களையும் கதைகளில் சேர்த்துக்கொள்ளத் தவற மாட்டார்.

''நம் காலகட்டத்தின் ஆகச்சிறந்த கதைசொல்லி பஷீரே! அவருடைய சிறுகதைகள், நாவல்கள், கட்டுரை போன்ற அவரது படைப்புகள் எங்கும் கதை சொல்வதன் உச்சபட்ச சாதனைகள் நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட பஷீரின் கதைகள் ஆங்கிலத்தில் வெளியாகி மூன்றுமுறை நோபல்பரிசுக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கின்றன. யுனெஸ்கோ கதைத்தொகுப்பிலும் இவரது கதை இடம்பெற்றுள்ளது. இன்றுவரை நோபல்பரிசு பெற்றுள்ள எந்த எழுத்தாளருக்கும் நிகரானது பஷீரின் படைப்புகள்.'' என்று எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

அவரது எழுத்தில் துக்கம்தான் பரிகாசமாகிறது. எங்கெல்லாம் நாம் சிரிக்கிறோமோ அங்கெல்லாம் மறைக்கப்பட்ட வலியொன்று ஒளிந்திருக்கிறது. எளிய மனிதர்களின் மீதான பஷீரின் அக்கறை மிகவும் முக்கியமானது. விலைமாதர்கள், பிச்சைக்காரர்கள், மனநிலைகுன்றியவர்கள் ஆகியோர்மீது அவரது எழுத்து, காட்டும் முக்கியத்துவம் தனித்துவமானது. தெருநாய்கள், பூனைகள், யானைகள், சிலந்தி, பாம்பு, தவளை என்ற இயற்கையின் பிரிக்கப்பட முடியாத அத்தனை உயிர்களும் இணைந்த மனித்வாழ்வின் நுட்பம் அவருடைய கதைகளில் வெகு நேர்த்தியாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

'பாத்துமாவுடைய ஆடு', 'பால்யகால சகி' (குறுநாவல்) ஆகிய கதைகள் மக்களால் பெரிதும் விரும்பி வாசிக்கப்பட்ட கதைகள் என அறிய முடிகிறது. காதல் கதைகளில் 'பால்யகால சகி' மிகவும் உயர்ந்த கதை என்று சொல்லுவார்கள். பால்யகால சகியின் தனிச்சிறப்பு அதன் எளிமையும் நேரடியான கதை சொல்லலும் கதையோடு பிரிக்க முடியாதபடி இழையோடும் மெல்லிய கேலியும் வாசித்து முடிக்கையில் ஏற்படும் துக்கமுமேயாகும். ''யாரோ மிக நெருக்கமான ஒருவரின் துயரத்தைப் பகிர்ந்துகொண்டது போல மனது நடுங்கிக்கொண்டிருந்தது'' என்று ஒரு வாசகன் கூறிய கூற்று அக்கதையின் முக்கியத்துவத்தை இயம்பிநிற்கின்றது. 1944 இல் வெளியான 'பால்யகால சகி' இப்பொழுது வாசிக்கும்போதும் புத்தம் புதிதாக இருப்பதை உணரமுடிகிறது என்கிறார் ஒரு வாசகர்.

'பாத்துமாவுடைய ஆடு' என்னும் குறுநாவல் ஒரு புதுவிதமான அனுபவத்தைத் தந்து நிற்கின்றது. வீட்டில் உள்ள ஒவ்வொருவரும் பணம், பணம் என்று பிடுங்கும்போது தன்னிடமிருந்த பணத்தை ஆடு தின்பதற்காகக் கொடுப்பதும், ஆடு அதை மெதுவாக அசைபோடத் தொடங்குவதுதாக ஒரு நிகழ்ச்சி இடம்பெறும். அக்கதையை வாசிக்கையில் குடும்ப இடர்பாடுகள் எந்த அளவு ஒரு மனிதனை நெருக்கடிக்கு உள்ளாக்கக்கூடியன என்பதைப் பகிடியோடு புரிந்துகொள்ளவைக்கிறது.

குழந்தையின் மனதை ஒத்த நிலையில் இருந்துகொண்டு அவர்களுக்கான படைப்புகளை உருவாக்கினார். அவரது படைப்புலகில் மட்டுமே குழந்தைகள் தங்களின் வற்றாத கற்பனையோடும் உண்மையை மறைக்கத் தெரியாத வெளிப்படையான மொழியோடும் வலியைத்தாங்கிக்கொள்ளும் பக்குவத்துடன் வெளிப்பட்டார்கள் என்று அறியக்கூடியதாக உள்ளது. பஷீரின் ஒவ்வொரு சொல்லும் ஈரமானதும் களிமண்ணைப் போலப் பிசுபிசுப்போடு மனதில் ஒட்டிக்கொள்ளக்கூடியதுமாகும்.

'பாத்துமாவுடைய ஆடு', 'எங்கள் தாத்தாவுக்கு ஒரு யானை இருந்தது', 'உலகப்பிரசித்தி பெற்ற ஒரு மூக்கு', 'ஜென்மதினம்', 'பூவன் பழம்', 'பால்யகால சகி' ஆகிய இவருடைய கதைகள் யாவும் தனித்துவமுடையன. பஷீர் சென்னையில் இருந்த சிலகாலம் 'ஜெயகேரளம்' என்னும் இதழில் கடமையாற்றியுமுள்ளார்.

தமது வீட்டுக்குத் தன்னைக்காண வருபவர்களை ஊரில் உள்ள சிலர் பாதையில் வழிமறித்து புதினம் கேட்பதை வழக்கமாகக் கொண்டிருப்பதை அறிந்து அதைக் கௌரவமற்ற செயலென எண்ணி பஷீர் பின்வருமாறு தமது உள்ளக்கிடைக்கையை வெளிப்படுத்துகின்றார். ''ஒவ்வொரு ஊரிலுள்ள தெருநாய்களுக்கும் தனித்தனியான சுபாவங்கள் இருக்கின்றன. அதன் அலட்சியம் மிகமுக்கியமானது. பெரும்பாலும் தெருநாய்கள் தங்களை நாய் என்று மறந்துவிடக்கூடியவைசில ரௌடிகளைப்போல. அவர்களுக்குத் தாங்கள் ரௌடி என்பது யாராவது சொன்னால்தான் தெரியும். எனக்குத் தெரிந்த ஒரு ரௌடி அப்படியிருந்தான். அவனிடம் யாராவது நீ ரௌடிதானே என்று நினைவூட்டும் நாட்களில் மட்டுமே கூச்சலிட்டு அடிக்கடி சண்டைபோடுவான். மற்றநேரங்களில் கள்ளுக்கடை, தூக்கம் என்றுதான் பொழுதுபோகும்'' என்கிறார். இக்கூற்றானது, தமது ஊரில் உள்ள சில மனிதர்களைப்பற்றிக் கூறியதாகவே கொள்ளமுடிந்துள்ளது. எதையும் வெளிப்படையாகவே சொல்லும் அவரது பண்பு வரவேற்கக்கூடியதே. இப்படியான யதார்த்தப் போக்கு அவர்களின் கதைகளிலும் பதிந்துள்ளது.




அவர் கதை சொல்லும் பாங்கு அலாதியானது. அவருடையவீட்டில் அவர் கதை சொல்வதைக்கேட்கப் பலர் வந்து கூடுவது வழக்கம். ரௌடிகளைப் பற்றிச் சொல்லும்போது, ''எல்லா ரௌடிகளுக்கும் ஏதாவது ஒரு பலவீனம் இருக்கும். அத்தோடு ரௌடிகள் அதிகம் பேசவும் மாட்டார்கள். அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அவர்கள் பேசத் தொடங்கினால் சில நிமிடங்களில் அவன் ஒரு முட்டாள் என்று நமக்குத் தெரிந்துபோய்விடும். பிறகு அவனைப் பார்த்து பயப்படமாட்டார்கள். சென்னையில் ஒரு 'பொம்பிளை ரௌடி'யைப் பார்த்திருக்கிறேன். அவள் சூளைமேட்டில் இருந்தாள். நிறையப் பன்றி வளர்க்கக் கூடியவள். ஒருநாள் அவள் தொடைதெரியச் சேலையைத் தூக்கிக் கட்டியபடியே ஒரு ஆம்பிளையோடு தெருவில் கட்டிப்புரண்டு சண்டை போட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். பயமாக இருந்தது. ஆனால், எந்த ஆம்பிளையோடு அவள் தெருவில் சண்டை போட்டாளோ அதே ஆளோடு நாலைந்து நாட்களுக்குப் பிறகு ரிக்ஷாவில் ஒன்றாகப் போய்க்கொண்டிருந்தாள்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

# சங்கீதம் பழக்கப்போன கழுதையின் கதை

**பாரதியார் கதை**

(சென்றவாரத் தொடர்ச்சி)

அவள் - ''இப்போது இந்தத் தேசத்தில் உமக்கு அனுகூலமாக எத்தனை பிரபுக்கள் இருக்கிறார்கள்?'' என்று கேட்டாள். அப்போது உத்தண்டி - "என் நாட்டிலுள்ள பிரபுக்கள் அத்தனை பேரும் எனக்கு வேண்டியவர்களே. எதிர்க்கட்சி யாருமே கிடையாது!'' என்றான்.

''நாளைப் பொழுதுவிடிந்தது ஒரு ஜாமத்துக்கு முன்பு வேலப்பனையும், பொன்னம்பலத்தையும் சுட்டுக்கொன்றுவிடவேண்டும். அதைச் செய்தால், மேலே ஜயத்துக்குரிய உபாயங்களை நான் சொல்லுகிறேன்'' என்று காமாக்ஷி சொன்னாள்.

''நான் ஒருபோதும் அதற்கிணங்கமாட்டேன்'' என்றான் உத்தண்டி.

அப்போது உத்தண்டி என்ற சிங்க ராஜனிடம் பத்தினியாகிய சிங்கச்சி காமாக்ஷி சொல்லுகிறது -

"ஸ்திரீகளை அவமதிப்புச் செய்வோன் ஆண்மக்களுக்குள்ளே முதல் வீரனாக விளங்கமாட்டான். பெண்ணைத் தாழ்வாக நினைப்பது அநாகரிக ஜாதியாருடைய முதல் லக்ஷணம். நீ என் வார்த்தையைத் தட்டுகிறாய்; உனக்குச் சண்டை ஜயிக்காது. நீ என்னை எப்போதும் அலட்சியம் பண்ணுகிறாய். எனது பிதா உனக்குத் துணைப் படைகள் என்னையறியாமல் அனுப்பும்படி செய்ய முடியுமென்று நினைத்தது உன் ஆலோசனைக் குறைவைக் காட்டுகிறது. உன்னை அழியவிடுவதில் எனக்கு சம்மதமில்லை. நீயோ மதிக் குறைவினாலும், மூட மந்திரிகளின் உபதேசத்தாலும், மஹா வீரனாகிய வீரவர்மனைப் பகைத்துக்கொண்டாய். என்னிடத்தில் மந்திராலோசனை கேட்கமாட்டாய்; நரிச்சி நல்லதங்கையிடம் கேட்பாய்! அந்த கூனற்கிழவிக்கு மாலையிட சம்மதப்படவில்லையே! நீ அந்த மட்டில் புத்திசாலிதான்! அவளுக்குப் பாதியரசு கொடுப்பதாகச் சொல்லிவிட்டாய்? உன்னுடைய புத்திக் கூர்மையை என்னென்று சொல்வேன்?'' என்றது. இதுகேட்டு உத்தண்டி சொல்லுகிறான் -

''ஆஹா! நான் நரிச்சி நல்லதங்கையிடம் ரஹஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்ததை உனக்கு யார் சொன்னார்கள்? உன்னுடைய தூண்டுதலின் மேலேதான் அவள் என்னிடம் அப்படிக் கேட்டாளோ?''

காமாக்ஷி - ''இல்லை, நீயன்றோ அவளைக் கூப்பிட்டனுப்பி வார்த்தை சொன்னாய்! நீ இப்படி அழைப்பித்துக் கேட்பாய் என்ற விசயம் எனக்கு முன்னமே தெரிந்திருந்தாலன்றோ நான் தூண்டிவிட்டிருக்கக்கூடுமென்று சொல்லலாம்!''

உத்தண்டி - ''பின்னே, உனக்கெப்படித் தெரிந்தது? நான் முந்தியே முதல் நினைத்தேன்; என்னுடைய ஒற்றர்களையெல்லாம் நீ வசப்படுத்தி வைத்திருக்கிறாய். எனக்குத் தெரியாமல் நீ வேறு தனியாகப் பல ஒற்றர்களை வைத்திருந்தாய். என் மந்திரிகளிலும் சேனாதிபதிகளிலும் பெரும்பாலோர் எனக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அதிகமாக உனக்கு அஞ்சி நடக்கிறார்கள். எனக்குத் தெரியாத ஒரு ரஹஸ்ய சங்கத்துக்கு நீ தலைவியென்று தோன்றுகிறது! உன்னை வஞ்சனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. ஆனால், என்னுடைய ராஜ்யத்தில் என் வார்த்தைக்கு யாதொரு மதிப்பில்லாமலும், எல்லாக் காரியங்களுக்கும் உன் இஷ்டப்படியாகவும் இருப்பது எனக்கு சம்மதமில்லை'' என்றான். அப்போது சிங்கச்சி காமாக்ஷி சொல்லுகிறாள் -

''ஓஹோ! என்னிடத்தில் இவ்வளவு பயத்தை மனதில் வைத்துக்கொண்டு, என்னை லக்ஷ்யம் பண்ணாமல் நீ இருப்பது ஆச்சர்யந்தான்; எனக்கு விரோதிகளான வேலப்பனையும், பொன்னம்பலத்தையும் சேனாதிபதிகளாக நியமித்தாய். எனக்கு வேண்டிய சேனாதிபதிகளை விலக்கினாய்; போர் தோற்றது; இன்னமும் என்னை அவமதிக்கிறாய். என்னுடைய யோசனை கேட்டபடியால் உனக்கு இந்த ராஜ்யம் கிடைத்தது. பட்டங்கட்டின மறுநாளே நீ நன்றி கெட்டவன் என்பதை நான் கண்டுகொண்டேன்'' என்றாள்.

உத்தண்டி - ''உன்னை நான் அவமதிக்கவில்லையே'' என்றான்.

''அரை நாழிகைக்கு முன்பு என்னைத் துரும்புக்கு சமானமாக எண்ணி நடத்தினையன்றோ?'' என்றாள் சிங்கச்சி.

''என்ன செய்தேன்!'' என்று சொல்லி உத்தண்டி கர்ஜனை புரிந்தான்.

''நான் ஒரு கதை சொல்லத் தொடங்கினேன், உனக்கு நல்லறிவு புகட்டும் பொருட்டாக அதைக் கேட்கக்கூட உனக்குப் பொறுமையில்லை. என்னைச் செள்ளென்று விழுந்தாய். என்னைக் கண்டால் உனக்கு முகத்தில் கடுகு வெடிக்கிறது. என் வார்த்தை கேட்டால் உனக்குக் காதில் நாராசம் காய்ச்சி விட்டது போல ஆய்விடுகிறது'' என்றாள் சிங்கச்சி.

''அது என்னவோ கதை என்கிறாயே! பெயர் மறந்து போச்சு! ஹாம்! ஹாம்! பிராமணப்பிள்ளை, நாலு சாஸ்திரம் படித்த கதை! அதை சொல்லு, கேட்கிறேன்'' என்றான் உத்தண்டி. அப்போது சிங்கச்சி சொல்லுகிறது.

**பிராமணப்பிள்ளை நாலுசாஸ்திரம் படித்துக் கொண்டு வந்தகதை**

சிங்கச்சி காமாக்ஷி சொல்லுகிறாள் -

''கேளாய் ராஜனே, புருஷனுக்கு ஸ்திரீ உடம்பில் பாதி. நீ என்னை வெறுத்தபோதிலும் எனக்கு உன்னைத் தவிர வேறு புகழ் கிடையாது. நீ என்னிடம் வைத்திருந்த அன்பையெல்லாம் மறந்துவிட்டாலும் என் நெஞ்சு உன்மீதுள்ள அன்பை மறக்கவில்லை. இன்னொரு சிங்கி என்றால் நீ செய்து வரும் அவகார்யத்துக்கு உன்னை முகங்கொண்டு பார்க்கமாட்டாள். நான் ஐயோ பாவமென்று உன்னை க்ஷமிக்கிறேன். ஆயினும், நான் இப்போது கதை சொல்ல ஆரம்பித்தால் நீ பொறுமையுடன் கேட்கமாட்டாய் என்ற சந்தேகம் எனக்குண்டாகிற படியால், இப்போது சொல்ல வேண்டாமென்று யோசிக்கிறேன்'' என்றான். உத்தண்டி. "பொறுமையுடன் கேட்கிறேன்'' என்று சத்யம் பண்ணினான். பிறகு சிங்கச்சி பின்வரும் கதையை உரைக்கலாயிற்று.


ஓர் ஊரிலே ஒரு பிராமணப் பாட்டியிருந்தாள். அவளுக்கொரு பிள்ளையுண்டு. அந்தப்பிள்ளை, வீட்டில் யாதொரு வேலையும் செய்யாமல் மூன்று வேளையும் தண்டச்சோறு தின்பதும் ஊர் சுற்றுவதுமாக இருந்தான். அந்தப் பாட்டி, தோசை, இட்டலி, முறுக்கு, கடலைச் சுண்டல் வியாபாரம் பண்ணி அதில்வரும் லாபத்தால் குடும்ப ஸம்ரக்ஷணை செய்துகொண்டிருந்தாள். அவன் நாளுக்குநாள் அதிகச் சோம்பேறியாய் நேரத்தை நாசம் பண்ணிக்கொண்டிருந்தான். அப்போது பாட்டி ஒருநாள் அவனைக் கூப்பிட்டு - ''அடா மகனே, ஒரு தொழிலும் செய்யாமல் சும்மா தின்று கொழுத்துக்கொண்டு எத்தனை நாள் இப்படி என் கழுத்தை அறுக்கலாமென்று யோசனை பண்ணுகிறாய்? நான் உயிரோடிருக்கும் வரை எப்படியாவது பாடுபட்டு உன்வயிற்றை நிரப்புவேன். எனக்குப் பிற்காலம் நீ எப்படி ஜீவிப்பாய்?''

(தொடரும்)

# உபாயவர்ஜன் என்ற நரியின் திறமைகள்

# பிடிவாதமான காதலால் பலியான 2 உயிர்கள்!





"என்னை விரட்டாதே; உன்னை மறந்துவிட்டேன். என்னை விட்டு விடு" - காதலியின் கெஞ்சல். "உன்னை மறக்க முடியவில்லை. சாவில் என்றாலும் உன்னுடன் இணைவேன்" - காதலனின் சங்கற்பம்.

பட்டப்பகலில் பாடசாலைக்குள் நுழைந்த இளைஞன் தனது காதலியைச் சுட்டுக்கொன்றுவிட்டு அதே வளவில் தன்னையும் சுட்டுக்கொண்டு மரணமான சம்பவம் சியம்பலாண்டுவப் பகுதியை உலுக்கியுள்ளது.

ஆங்கிலப் படங்களில் நடப்பது போன்ற அதிர்ச்சிகரமான இச் சம்பவத்தால் சியம்பலாண்டுவ பிரதேசம் முழுவதும் துயரத்தில் மூழ்கியுள்ளது.

லக்ஷிதா தமயந்தி சியம்பலாண்டுவ நவோதயா வித்தியாலயத்தின் ஆசிரியையாகப் பணி புரிந்துகொண்டிருந்த 26 வயதான அழகிய இளம்பெண்.

பதுளையில் லக்ஷிதா தமயந்தி ஆசிரியப் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த சமயம் சாரங்கவை சந்திக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அழகிய இளைஞனான சாரங்க லக்ஷிதாவின் இதயத்தைக் கவர்ந்தான். காதல் தொடர்பு நீடித்தது. எனினும், சாரங்க ஏற்கனவே மணம் முடித்து இரு பிள்ளைகளுக்குத் தந்தை என்ற விவகாரம் இந்த அப்பாவிப் பெண்ணுக்கு அப்போது தெரியவில்லை. காதல் தொடர்ந்தது.

ஆசிரியப் பயிற்சி முடிவடைந்த பின் சியம்பலாண்டுவ நவோதயா வித்தியாலயத்தில் லக்ஷிதாவுக்கு நியமனம் கிடைத்தது. அதுவரை சாரங்கவை இதயபூர்வமாக நேசித்துவந்த லக்ஷிதாவுக்கு பேரிடி விழுந்தது. சாரங்க ஏற்கனவே மணமாகி இரு பிள்ளைகளுக்கு தந்தை என்ற விவரம் அப்போதுதான் அவருக்குத் தெரியவந்தது. தான் நன்றாக ஏமாற்றப்பட்ட விடயம் தெரியவந்ததும் லக்ஷிதாவின் இதயம் சுக்குநூறாகிப் போனது. அதன்பின் சாரங்கவுடனான தொடர்பை முற்றாகத் துண்டித்துக்கொண்டு தனது ஆசிரியப் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளார்.

தனது ஒருதலைப்பட்சக் காதலை விட்டுக்கொடுக்காத சாரங்க தொடர்ந்தும் லக்ஷிதாவின் கையடக்கத் தொலைபேசியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு வந்தான். ஒரு கட்டத்தில் சாரங்க ஏற்கனவே திருமணமாகி இரு பிள்ளைகளுக்குத் தந்தை என்ற விவரம் லக்ஷிதாவுக்குத் தெரியவந்தது. அவனை விட்டு விலகத் தீர்மானித்துள்ளதாக லக்ஷிதா அவனிடம் கூறியுள்ளார். அதற்குப் பதிலளித்த சாரங்க தனக்குத் திருமணமானது உண்மையெனவும், தனது மனைவியின் போக்குப் பிடிக்காமையால் அவனை விவாகரத்துச் செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளான்.

சாரங்கவின் தொடர்ச்சியான தொலைபேசி அழைப்புகளுக்கு முகம்கொடுக்க முடியாத லக்ஷிதா தனது தொலைபேசி இலக்கத்தை இரத்துச்செய்து புதிய இலக்கத்தைப் பெற்றுக்கொண்டார். வழக்கம்போல காதலியின் பழைய இலக்கத்துடன் தொடர்புகொள்ள முயன்ற சாரங்கவின் முயற்சிகள் தோல்விகளை தழுவியதால் சாரங்க மனமுடைந்து காணப்பட்டான். தனது முயற்சியை சற்றும் தளரவிடாத நிலையில் சம்பவ தினம் சாரங்க சியம்பலாண்டுவ பாடசாலைக்கு சென்றான். இரண்டிலொரு முடிவை எடுக்கவேண்டுமென்ற வைராக்கியம் அவனது மனதில் நிலைகொண்டிருந்தது.

துப்பாக்கியொன்றை காற்சட்டைப் பையில் மறைத்து வைத்துக்கொண்டு பாடசாலை வளவுக்குள் புகுந்த சாரங்க பாடசாலை அதிபரிடம் அவசர வேலை நிமித்தமாக தனது சகோதரி லக்ஷிதாவைச் சந்திக்கவேண்டுமெனத் தெரிவித்துள்ளான். அதனையடுத்து லக்ஷிதா வகுப்பறையைவிட்டு வெளியேறி பாடசாலை முன்வாயில் அருகே சாரங்கவைச் சந்தித்துள்ளார்.

''என்னை நோக்கித் துப்பாக்கியை நீட்டிய சாரங்க அதன் விசையை இழுத்தான். அவனது துரதிஷ்டமோ, எனது அதிஷ்டமோ துப்பாக்கி வெடிக்கவில்லை. என்னைக் கொலை செய்யப்போகிறான் என்ற பீதியில் நான் தப்பியோடினேன். இரண்டாவது முறையும் அவனது துப்பாக்கி இயங்கவில்லை. அதன்பின் மூன்றாவது முயற்சியில் தன்னைத் தானே சுட்டுக்கொண்டான். நிலைகுலைந்து கீழே விழுந்த அவனைக் காப்பாற்ற நான் விரைந்து வந்தபோது குற்றுயிராகக் கிடந்த சாரங்க தனது இறுதி வேட்டை என் மார்பில் தீர்த்துவிட்டு மயங்கிச் சரிந்தான். இவை லக்ஷிதாவின் இறுதி வார்த்தைகள்.

துப்பாக்கி வேட்டுக்கு இலக்கான லக்ஷிதாவைக் காப்பாற்ற பகீரதப் பிரயத்தனங்களை மருத்துவர்கள் மேற்கொண்டபோதும் அது பலனளிக்கவில்லை. உயிர் பிரியும் முன் சாரங்க தடுமாற்றத்துடன் கூறியவை நெஞ்சை உலுக்குவதாக அமைந்துள்ளன.

''நான் திருமணமாகி இரு பிள்ளைகளுக்குத் தந்தையானவன் என்பதை உன்னிடம் மறைத்தது தவறு. அதற்குக் காரணம், உன்னை எனது காதலியாக மட்டுமன்றி மனைவியாகவும் நான் ஆரம்பம் முதலே வரித்துக்கொண்டேன். எனது சட்டபூர்வமான மனைவி எனக்கு செலுத்தாத அன்பும் கருணையும் உன்னிடமிருந்து எனக்குக் கிடைத்தன. எந்தவித எதிர்பார்ப்பும்

**மணி**

இன்றி என்னை ஆத்மார்த்தமாக நேசித்த உன்னை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்த ஜென்மத்தில் உன்னைவிட்டுப் பிரிந்தாலும் அடுத்த ஜென்மம் என்று ஒன்று இருக்குமாயின் நாம் சேர்ந்து வாழ்வோம்'' - உயிர் பிரியும் தறுவாயில் சாரங்க குழறிக் குழறிச் சொன்ன வார்த்தைகள் இவை.

''காதலுக்குக் கண்ணில்லை'' என்பது பழமொழி. இதய[illegible] காதலுக்கு இரக்கமும் இ[illegible] என்பது புதுமொழி.

## அவலங்களைப் பகிர்ந்து கொள்வோம்

வன்னியில் நடந்த இறுதிக்கட்ட யுத்தத்தின் போது அங்கிருந்த எமது மக்கள் அனுபவித்த அவலங்கள் சொல்லில் அடக்கமுடியாதவை. அந்தப் பேரவலங்களை எதிர் கொண்டு இப்போது அகதி முகாம்களில் வாடும் எமது உறவுகள், தமது அந்த அனுபவங்களையும் அதனால் ஏற்பட்ட உணர்வுகளையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான களத்தைத் திறந்து விடுகிறது உங்கள் 'சுடர் ஒளி '.

எழுதுங்கள்!
உங்கள் அவலங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்!!

உங்கள் ஆக்கங்களை அனுப்பவேண்டிய முகவரி:
'உயிர் வலிக்கும் கணங்கள்'
சுடர்ஒளி வாரமலர்,
இல. 85, ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## மலையாள எழுத்தாளர்....

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அப்போதுதான் அவள் பெண் என்று எனக்குத் தெரிந்தது'' என்று சமுதாயத்தின்கண் தனக்குள்ள அவதானிப்பை எடுத்துக் காட்டியுள்ளார்.

பஷீரிடம் எழுதித் தீராத கதைகள் இருந்தன. அவர் தன்னைச் சுற்றிய வாழ்க்கையை முற்றிலும் உள்வாங்கியிருக்கிறார். அத்தோடு அடித்தட்டு மக்களோடு சேர்ந்து வாழ்ந்த சூழல் எண்ணிக்கையற்ற கதாபத்திரங்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்திருக்கிறது.

''உலகில் பைத்தியக்காரர்கள் மட்டுமே மிக சந்தோசமாகவும், உண்மைக்கு நெருக்கமாகவும் இருக்கிறார்கள். சில மனநலமற்றவர்களைக் காணும்போது அவர்கள் கண்களை நம்மால் தொடர்ந்து பார்க்க முடியாது. காரணம், அவர்களின் கண்கள் எதையோ சொல்லக் கூடியன'' என்று தெரிவித்த பஷீரிடம் ஒரு பேராசிரியர், ''எது உங்களை எழுதவைத்தது?'' என்று கேட்டார். பஷீர் சற்றும் யோசிக்காமல் 'பசி' என்று சொன்னார். ''பசித்த பொழுதுகளில் என்னால் வேறு எதையும் செய்ய இயலாது. அத்தோடு பசியைப்பற்றிய கவலையின்றி உலகம் இயங்கிக்கொண்டிருக்கிறது என்ற ஆதங்கமும் பசியைப் பகிர்ந்துகொள்ள முடியாத சூழலின் மீதான ஆத்திரமும் எழுதவைத்தது'' - என்றபடியே, ''பசியைக் கடந்து செல்வது எளிதானதில்லை. எனது பெரும்பான்மைக் கதைகள பசியோடு இருந்த நாட்களில் எழுதப்பட்டவை'' என்று சொல்லியுள்ளார்.

எளிமையான ஓர் இஸ்லாமியக் குடும்பத்தில் பிறந்து குடும்பவறுமையின் காரணமாகக் கஷ்டப்பட்டு முறையான பள்ளிக்கல்வியின்றி சிறுசிறு வேலைகள் செய்து நாடோடி போல இந்தியா எங்கும் சுற்றியலைந்து, சுதந்திரப் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறை சென்று பின்பு விடுதலையாகி வந்து ஓர் எழுத்தாளராகி, அதன் பின்பும் நிலைகொள்ள முடியாத வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்குண்டபோதும் அவரது எழுத்தின் அன்பும் கருணையும் வற்றிப்போகவேயில்லை.

பஷீரின் கதைகள் எளிய மனிதர்களின் வாழ்வை விவரிக்கக்கூடியவை. எளிமையான எழுத்தின் மூலம் அவரது உலகம் மனித அவலங்களை எடுத்துக்கூறி அவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது. ஏழை, எளிய, இடர்பட்ட மக்களின் குரலாக ஒலித்த எழுத்தாளர் பஷீர் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஐந்தாம் திகதி இயற்கையெய்தினார். துயர்பட்ட மக்களின் உள்ளங்களுக்கு ஒத்தணம் கொடுத்த மக்கள் எழுத்தாளரின் நாமம் என்றும் நிலைத்து நிற்கும். *

## கிறீன் காட் வீசா

அமெரிக்கா கிறீன் காட் லொத்தர் வீசா விண்ணப்பப்படிவங்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ள Rs. 15/= முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதிய கடித உறையை அனுப்பவேண்டிய முகவரி:

"INTERNET"
**Bristol Cyber Cafe**
No. 8/3/4, Bristol Street, Colombo - 01. Tel: 2393919, 0774276579

பதிவு இல : 44843



# குறிஞ்சிக் கோவில்கள்

- கவிஞர் ஷி.எஸ். காந்தி -

## தலவாக்கொலை நகர ஸ்ரீ கதிரேசப்பெருமான்

தலவாக்கொலை ஒருகாலம் தமிழர்கொலை நகரம்
தண்ணீரில் மாயவனின் சவம்மீட்பு துயரம்
சலசலப்பு இன்றில்லை; கலகலப்பு உண்டு
சமாதானம் நிலவுமிங்கு சமரசநல் தொண்டு
பலவினத்தார் வாழுமிங்கு ஆலயங்கள் பள்ளி
பாங்குநதி நகர்தழுவி விரைந்தேகும் துள்ளி
மலர்ச்சியினை சூழவுள்ளத் தோட்டங்கள் கொடுக்கும்
மார்கழியில் அடிக்குங்குளிர் யாக்கையினை நடுக்கும்!

கலையழகு பொலியுமொரு பெருங்கோயில் காட்சி
கருணைபொலி முகங்களாறு முருகனரு ளாட்சி
அலைமோதும் பெருவிழாவில் எங்குமிறை நேசம்
அணிவிழாவும் திருவுலாவும் நிகழுந்தைப் பூசம்
தலைசிறந்த கோபுரமும் மண்டபமு முண்டு
தலையெடுக்க இரண்டுமன்று இராப்பகலாய்த் தொண்டு
மலைப்பூட்டும் திருப்பணியால் தலவாக்கொலை நகரின்
மாகோட்டம் பெருஞ்சிறப்பு; புதுக்கடைகள் திறப்பு!

(தொடரும்)

# உகந்த வழி...




வன்னி வன்னி எனச் சொல்லி
வயிறு வளர்க்கும் கும்பல்களே
நொந்தவரின் உதிரத்திலே
நீங்கள் காய்தல் முறைதானோ?

ஓட்டை விட்ட சித்திரமாய்
உடைந்து தொங்கும் உள்ளங்களை
கூட்டுச் சேர்த்து பீடுகொள்ள
காட்டும் வழியை யார் கண்டீர்?

மனங்கலங்கி ஏதிலராய்
மண்ணிலுழல் அகதிகளின்
மனங் குளிர மருந்திடநீர்
யாது வழி கண்டீரோ?

அல்லலுறும் மக்களுக்கு
அளித்து வசதி இவ்வாழ்வில்
உழைக்கும் வழி காட்டுதலே
உண்மையிலே உகந்தவழி.



**வன்னிமகள்**
**எஸ்.கே.சஞ்சிகா.**

# அழகு நிலாப் பவனி

போட்டு வைத்துப் பூ முடித்து
பொன் சரிகைச் சேலைகட்டி
கிட்ட வரும் காரிகையை
கிடைப்பாளா என ஏங்கும்
மட்ட ரக மனநிலையில்
மதியழகன் தவித்திருந்தான்


தோட்ட தெல்லாம் துலங்குமென
தோட்ட வளை அணைப்பதற்கு
வட்ட மிட்டு வரும் தேனீயாய்
வந்து சுற்றித் திரிந்த போதும்
எட்ட வில்லை வாய்ப் பென்று
ஏங்கியவன் சோர்வடைந்தான்



ஊரிழந்து ஓடி வந்தும்
உறவிழந்து வாடி நின்றும்
பேரிழந்து போவதற்கா அவன்
பெரும்பாடு பட்டு நொந்தான்
யாரிவனைத் தேற்றி வைப்பார்?
யாருமில்லை அவள் இணைப்பே!

மண்மீது பவனி வருமந்த
மதியழகுப் பெண் அணங்கை
கண்நோக்கித் திரிவதற்கு
கடன்பட்ட இளையவனை
அண்ணாக்கள் சேர்த்து வைக்கும்
அந்நாளே பொன் நாளாம்

**-கவிஞர். செ.ஞானராசா-**
**திருகோணமலை**



# காணாமல் போகும் தனித்துவங்கள்

நாரென்றிருந்த நம்ஊரை
நாமென்றாக்கி கலையோங்கி
கூடிகுலாவி மகிழ்ந்திடவே
பாடுபட்டார் அண்ணாவி!

ஊர்சீர் கோவில் முற்றத்து
நிலவொளியில் அன்னாரின்
கூத்தும் கும்மியும் ஈர்க்கும்
பண்ணிசைத்து தமிழ்காத்து
மகிழ்ந்த தன்று நம்ஊரே;

கரையை மேவி வந்த அலை
அண்ணாவி குலத்துடனே
ஊரழித்து சென்றதெங்கோ
ஊரின் கீர்த்தி நேர்த்தியை
கூடியின்று தேடுகிறோம்..!

-ம.வதனன்-



எளிய தமிழ் நடையினிலே யரும்பொருளைப் பொதிந்துவைத்து
இன் கவிதை இயற்றி வைத்தான்
அழியுமுயிர் பேணுதற்கு அடிவருடும் பேடிகளை
அவனியிலே இகழ்ந்துரைத்தான்
விழியினுயர் சுதந்திரத்தின் பெருமையினைப் பாடியிங்கு
வீரத்தை வளர்த்து விட்டான்
தெளிவு பெறும் சிந்தனையை மக்களிடை வளர்த்ததனால்
புரட்சியினை வெடிக்க வைத்தான்

கைகட்டி வாய்பொத்தி ஊழியங்கள் புரிந்தவரை
கண்திறந்து பார்க்க வைத்தான்
மெய்தட்டி நிமிர்ந்தெழுந்து விலங்குடைக்கப் போராடும்
உணர்ச்சியினைப் பெருக்கிவிட்டான்
பொய்யுரைத்துப் புகழ்மொழியால் உயிர்வாழ முயன்றவரை
எச்சரித்துத் திகைக்க வைத்தான்
வெய்யதுய ருற்ற போது வீறுபொங்கக் கவிபுனைந்து
எதிரிகளை வீழவைத்தான்.

வறுமையிலும் கலங்காத மனவுறுதியோடுநின்று
தமிழர்நிலை யுயர்த்தி வைத்தான்
உறுபடையின் மிரட்டலுக்கு எதிர்த்து நிற்கும் துணிவினோடு
தொண்டர்களைத் திரளவைத்தான்
மறையுரைத்து இறைவணங்கி ஞானநெறி அறிவுறுத்தி
விஞ்ஞானம் சோரவைத்தான்
நிறைவுதரு தொழிற்றிறமை ஆளுமையு முயர்ந்துதமிழ்
நாடுலகில் மலரவைத்தான்

பெண்ணடிமை கொள்வதனைச் சாடியதை நீக்கியுயர்
சமத்துவத்தைப் பேணிவைத்தான்
தண்ணளியில் விஞ்சுமுள்ளங் கொண்டவரைத் தாழ்த்துகின்ற
கொடுமைதனைத் தகர்த்தெறிந்தான்
பண்டைய மகளிர்பல பட்டமெல்லாம் கற்றெடுத்து
பாரினையே ஆளவைத்தான்
எண்ணமதிற் புரட்சியிடை மண்விடியக் கருத்துரைத்து
விண்ணுயரக் காட்சிதந்தான்

**"ஞானம்"**






## சொற்சிலம்பம் போட்டி இல. 437

சொற்சிலம்பம் 437 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய கடைசித்தினம் 2010 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஒக்டோபர் 24 ஆம் திகதி சுடர் ஒளியில் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல. 435 இற்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன. தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி' 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14.

### சொற்சிலம்பம் போட்டி இல. 437



### சொற்சிலம்பம் போட்டி இல. 437

**இடமிருந்து வலம்**
1. தபாற்கந்தோர்த் தலைவர் 6. செயல்
7. விரோதம் 8. நிலைகெடுதல், வழிதவறுதல்
10. தோன்று (சூரியன்) 13. 30 நாட்கள் கொண்டது
15. சிறகடித்துச் செல் 16. கிராம தேவதை
18. ஒடிதல் 19. திற என்னும் ஏவல்
20. திரட்சி, கூட்டம் (குழம்பியுள்ளது)
21. சேதம் உண்டுபண்ணும் காற்று

**மேலிருந்து கீழ்**
1. செய்யக்கூடாத 2. உலகம் 3. தோட்டத்தொழிலாளர்கள் வாழும் வீட்டு வரிசை 4. பூட்டானின் தலைநகரம்
5. ஆபரணம் 9. தினுசு, வகை
10. மேலதிகம் 11. திறப்பு 12. சுணங்கு
13. அம்மாவின் சகோதரன்
14. உறைந்தபால் 17. பாற்பசு
18. முன்னர்

### சொற்சிலம்பம் போட்டி இல.435

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ச | 2 ம | ர் | ■ | 3 சி | ர | 4 ம | ம் |
| 5 ப | கு | ■ | 6 த | ரி | ■ | தி | ■ |
| 7 த | டி | 8 ய | ன் | ■ | 9 து | ப் | பு |
| ம் | ■ | ன் | ■ | 10 யா | ப் | பு | ■ |
| ■ | 11 ச | ன | ம் | ■ | பா | ■ | 12 ச |
| 13 ஏ | ர | ல் | ■ | 14 அ | க் | கி | னி |
| 15 த | ம் | ■ | 16 வ | ங் | கி | ■ | ய |
| ம் | ■ | 17 வ | ர | கு | ■ | 18 தி | ன் |

### பரிசு பெறுவோர்

1. **கே.எம்.எஸ். ஆப்தீன்,**
36, போல்ஸ் வீதி,
யூ.ஸீ. குவாட்டர்ஸ், புத்தளம்.
2. திருமதி விஜயகுமாரி அமரசிங்கம்,
89, பயணியர் வீதி,
மட்டக்களப்பு.
3. **கோ. சஞ்சய்,**
241, பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு - 01.

### பாராட்டுப் பெறுவோர்

- ஆர். குழந்தைவேலு, கோண்டாவில்.
- எம்.பி. மொஹிதீன், பெரிய நீலாவணை.
- எஸ். றியாஸ் முஹம்மத், ஏறாவூர் - 03.
- எம்.ஜே. பெர்னாண்டோ, கொழும்பு - 13.
- ஞானப்பிரகாசம், யாழ்ப்பாணம்.
- சி. பாலசுந்தரம், சண்டிலிப்பாய்.
- வை. முஹமட் றமீஸ், அட்டாளைச்சேனை.
- ஆர். வியாகரன், வவுனியா.
- இந்துமதி வடிவேல், செங்கலடி.
- ஏ.எம். முஸ்தபா, ஏறாவூர்.
- பொ. பாலசுப்பிரமணியம், தம்பிலுவில் - 01.





**முருகன்,**
**இணுவில்.**

**கேள்வி:** லங்காசையர் என்ற சொல்லுக்கு முன்னால் இகரம் சேர்த்து இலங்காசையர் என்று எழுதலாமா?

**பதில்:** அப்படி எழுதினால் இலங்கையையும் லங்காசையரையும் பிரித்தறிவதில் சிக்கல்கள் ஏற்படலாம். இவ்வாறான சொற்களுக்கு முன்னால் இகரம் சேர்த்து எழுதலாகாது. அதே போன்று லண்டன் என்பதையும் இலண்டன் என்று எழுதக்கூடாது. பண்டுதொட்டு வழங்கப்பட்டு வரும் இராமன், இராமாயணம் போன்றவற்றை அப்படியே எழுதுவதுதான் சிறந்தது.

**ரவீந்திரன்,**
**கண்டி.**

**கேள்வி:** இப்போதைக்கு முதுகெலும்புள்ள கட்சி எது என்று கருதுகிறீர்கள்?




**பதில்:** இன்று அப்படியான கட்சி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால் தான் அவற்றின் முதுகுகளில் அவற்றின் அங்கத்தவர்களே ஓங்கிக் குத்துகிறார்கள்.

**பரந்தாமன்,**
**மன்னார்.**

**கேள்வி:** ஓர் அரசியல்வாதி எப்போது பயப்படுகிறான்?

**பதில்:** தர்மம், நீதி, நேர்மை, மனச்சாட்சி என்பவற்றைத் தன்னைப் போலவே துறந்த இன்னோர் அரசியல்வாதியைக் காணும்போது.

**சலீம்,**
**அட்டாளைச்சேனை.**

**கேள்வி:** தாங்கள் கொள்கைவாதியா குழப்பவாதியா?

**பதில்:** கொள்கையில் குழப்பமில்லாதவன்.

**எஸ். ஜெறோம்,**
**கொழும்பு.**

**கேள்வி:** ஐ.தே.கட்சியினர் சிந்தித்துச் செயற்படுகிறார்களா?

**பதில்:** சந்தித்துச் செயற்படுகிறார்கள்.

**சரவணன்,**
**வவுனியா.**

**கேள்வி:** மக்கள் படும் கஷ்டத்தைப் பற்றி அலட்சியமாக இருக்கும் அரசியல்வாதியைப் பற்றி?

**பதில்:** அவன் எதிர்காலத்துக்காகச் சேமித்து வைப்பவன். வட்டியும் முதலுமாகப் பெற்றுக் கொள்வான்.

**தவரூபன்,**
**வெள்ளவத்தை.**

**கேள்வி:** பணத்தாலும் அரசியல் செல்வாக்காலும் எதையும் சாதித்துவிடலாமா?

**பதில்:** நீதியின் கண்களைக்கூட கட்டலாம் என்பது சமீபத்திய அனுபவம்.

**செந்தூரன்,**
**கம்பளை.**

**கேள்வி:** சினிமாவில் நடிகர் நடிகைகளின் காதல் எப்படிப்பட்டது பித்தரே?

**பதில்:** அது அடிக்கடி மலரும், வாடும். புதிதாக மீண்டும் தொடரும்...முறியும்....

**கணேஷ்வரன்,**
**வத்தளை.**

**கேள்வி:** எதிர்காலத்தில் கொடிகட்டிப் பறக்கக் கூடிய தொழில்கள் எவை?

**பதில்:** இன்போமேஷன் டெக்னோலோஜி என்பதற்கும் என்டர்டைன்மன்ட் என்பதற்கும் தான் எதிர்காலம் உண்டு என்று சமீபத்திய ஆய்வு முடிவொன்று தெரிவிக்கிறது.

**ஆர். தர்சினி,**
**கொழும்பு.**

**கேள்வி:** பசியினால் ஒருவன் மாண்டு போனால் அக்குற்றம் யாரைச் சேரும்?

**பதில்:** அவன் வாழும் சமூகத்தைச் சேரும்.

**எஸ். யோகேஸ்வரி,**
**வெள்ளவத்தை.**

**கேள்வி:** எனக்கு மூக்கு நுனியில் கோபம் வரும். இதனால் நான் பலமுறை அவமானம் அடைந்துள்ளேன். கோபத்தைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம்?

**பதில்:** இதற்கு மனப்பயிற்சி அவசியம். நான் கோபப்பட மாட்டேன், எனக்குக் கோபமே வராது என்பதை ஒரு ஜெபம் போல திரும்பத் திரும்ப உங்கள் மனதிற்குள்ளேயே சொல்லிக்கொள்ளுங்கள். உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை இருந்தால், இறைவா, கோபத்தை என்னிடமிருந்து அகற்று எனப் பிரார்த்தனை செய்யுங்கள். இந்த மனப்பான்மை காலப்போக்கில் உங்கள் கோபத்தை இல்லாமற் செய்துவிடும்.

**செந்தில் வேல்,**
**யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** வடிவேலு கொமடியின் விசேட இயல்புகள் என்ன பித்தரே?

**பதில்:** உரக்கப் பேசும் இயல்பு, அடிக்கடி மாறும் முகபாவங்கள், உடம்பை வளைத்து நெளித்து சிரிக்க வைக்கும் சிறப்பு, இத்யாதி.

**தமிழ்,**
**கிளிநொச்சி.**

**கேள்வி:** 2009 ஆம் ஆண்டில் நம் இனத்தின் மேல் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகளையும் இரத்த ஆறு பாய்ந்த அந்தக் கொடுமையான சம்பவங்களையும் மறக்க நினைக்கிறேன்: முடியவில்லை. அன்றிலிருந்து இன்று வரை என்னால் ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. இதற்கு என்ன தீர்வு?

**பதில்:** நமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட, நம்மால் தவிர்க்க முடியாத எத்தனையோ சம்பவங்கள் நமது வாழ்க்கையில், நமது கண் முன்னால் நடக்கத்தான் செய்கின்றன. அவற்றையெல்லாம் நாம் சகித்துக்கொள்ளத்தான் வேண்டும். அலட்டிக்கொண்டால் பைத்தியக்காரர்களாகித்தான் போய்விடுவோம்.

**தமிழ்ச்செல்வி,**
**கிளிநொச்சி.**

**கேள்வி:** தமிழர்களால் கட்டிவளர்க்கப்பட்ட கலாசாரம் கெட்டுக் கிடக்கின்றது. டக்கென ஒரு புத்திசொல்லும் பித்தரே?

**பதில்:** நான் புத்திசொல்லியா கேட்கப் போகிறார்கள். பொறுங்கள், இன்னுமொரு ஆறுமுகநாவலராவது அப்பாக்குட்டியாவது வரட்டும். ஆனால், காலம் என்பது அனைவற்றையும் மாற்றிக்கொண்டே இருக்கிறது.

**எம். எம். நிசார்,**
**கல்முனை.**

**கேள்வி:** இவ்வுலகில் நிலையானது எது பித்தரே?

**பதில்:** இடையறாமல் மாறிக் கொண்டிருக்கும் ''மாற்றம்'' என்பது தான் வானத்துக்குக் கீழ் நிரந்தரமான ஒன்றேயொன்று.

**தமிழ்ச்செல்வன்,**
**நுவரெலியா.**

**கேள்வி:** அரசாங்கம் அமைத்துள்ள தேசிய நல்லிணக்க ஆணைக் குழுவினால் ஏதாவது நன்மைகள் விளையும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

**பதில்:** விஷயத்தை ஆறப்போடுதல் என்பதற்கு மற்றொரு பெயர்தான் ஆணைக்குழுக்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

# ராசி-பலன்

**03.10.2010 - 09.10.2010**





### அஸ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

கம்பீரமான குரலுக்கு சொந்தக்காரராக திகழும் மேஷ ராசி அன்பர்களே!

எதிர்பார்த்த விடயங்கள் தள்ளிப்போகலாம். முக்கிய முடிவு எடுப்பதில் சிறு தடுமாற்றம் தோன்றும். நண்பர்கள் தக்க சமயங்களில் உதவிக்கரம் நீட்டுவார்கள். செலவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் கூடும். எதிர்பார்த்த கடன் உதவி கிடைக்க சில நாட்கள் ஆகலாம். சுயதொழில் செய்பவர்களுக்கு அதிக வேலைகள் இருந்தாலும் வருமானம் வருவதில் தாமதம் ஏற்படலாம். அவசரப்பணிகளால் காலநேரம் பார்க்காமல் உழைக்க நேரலாம். கூட்டு வியாபாரத்தில் போட்டிகளால் மனச்சஞ்சலம் வரலாம். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்பட்டாலும், சிறு சிறு தொல்லைகளும் வந்து போகும். பெண்கள் கவனமாக இல்லாவிட்டால் சிறு மனக்கசப்புகளைச் சந்திக்க நேரிடும். ஆரோக்கியக்குறைபாடு ஏற்படும். சேமிப்புகள் செலவழியும். நிதானப்போக்கு அவசியம்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,5,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




### கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

சாமர்த்தியமாக பேசும் திறன் பெற்ற ரிஷப ராசி அன்பர்களே!

எடுக்கும் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். நண்பர்களும், உறவினர்களும் உங்களுக்கு உதவக் காத்திருப்பார்கள். திட்டமிட்டபடி பணவரவுகள் வந்துசேரும். ஆனால், செலவுகள் அதிகமாகலாம். உத்தியோகஸ்தர்கள், உயரதிகாரிகளின் பாராட்டுப் பெறுவார்கள். சிலருக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த பணம் வந்துசேரும். சுயதொழில் செய்பவர்களுக்கு பணம் வந்துசேரும். மூலதனங்கள் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். எதிர்பாராத பணவரவுகள் மகிழ்ச்சியை உண்டாக்கும். மங்கல நிகழ்ச்சிகள் குடும்பத்தில் நடைபெறும். பங்குச்சந்தை வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிடைக்கும். முதலீடுகள் லாபகரமாக அமையும்.

அதிர்ஷ்ட எண்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம் பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




### மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

கற்பனை வளம் அதிகம் கொண்டு செயல்படும் மிதுன ராசி அன்பர்களே!

கடின முயற்சிக்குப் பிறகே எதிலும் வெற்றி கிடைக்கும். வீடு, மனை, வாகன வகைகளில் விரும்பிய மாற்றங்களைச் செய்வீர்கள். பணவரவுகள் தாமதமாகும். முக்கிய தகவல் மூலம் பயணம் உருவாகும். உத்தியோகஸ்தர்கள் உயர் அதிகாரிகளின் கோபப் பார்வையில் சிக்காமல் இருக்க, தங்கள் கடமைகளில் கவனமாக இருப்பது அவசியம். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் போதும், பணபரிமாற்றங்கள் செய்யும் போதும் கவனமாக இருப்பது அவசியம். பணப்பொறுப்பில் உள்ளவர்கள் கவனமாக இல்லாவிட்டால், பிரச்சினைகள் வரலாம். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரும். சகோதரவழி உறவுகளின் இல்லங்களுக்கு சென்று பெண்களுக்கு வீண்பேச்சுகளால் மனக்கசப்பு ஏற்படக்கூடும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 2,3,6. அதிர்ஷ்ட நிறம்: வெண்மை. அதிர்ஷ்டக்கிழமை: திங்கள்.




### புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயில்யம்

தர்மம் செய்வதில் ஈடுபாடும், தயாள சிந்தையும் கொண்ட கடக ராசி அன்பர்களே!

எதிர்பார்த்த நல்ல பலன்களை பெற கடினமாக உழைப்பீர்கள். முக்கிய நபர்கள் மூலம் காரிய வெற்றி கிடைக்கும். பணவரவு இருந்தாலும் எதிர்பாராத செலவுகளால் மனச்சஞ்சலம் ஏற்படலாம். கொடுக்கல், வாங்கலில் சக்திக்கு மீறி செயல்படுவது பாதிப்பை ஏற்படுத்தும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பணிகளில் குறைபாடு வராமல், கவனமாக நடந்துகொள்வது அவசியம். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்குப் பணவரவு அதிகமாகலாம். குடும்பத்தில் கணவன், மனைவி அன்பு சீராக இருக்கும். பெண்கள், தங்கள் பணிகளில் கவனமாக இருப்பது நல்லது. புதிய நண்பர்களின் வருகையால் சில பிரச்சினைகளை சமாளிப்பீர்கள். பங்குச்சந்தை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனையின் மூலம் அதிக லாபம் பெறுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: ஞாயிறு.





### மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

எந்த செயலையும் அழகாக செய்து பாராட்டு பெறும் சிம்ம ராசி அன்பர்களே!

எடுத்த காரியங்களை முடிப்பதற்கு அதிக முயற்சிகள் தேவைப்படும். பண வரவுகள் தாமதமாகும். ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தவிர்க்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு புதிய பதவி கிடைக்கும். தடைபட்ட உயர்பதவியோ அல்லது பணஉதவியோ தக்க நேரத்தில் தேடி வரும். சுயதொழில் செய்பவர்கள் உதவியாளர்களின் ஒத்துழைப்பு திருப்தி தரும். கூட்டுத்தொழில் செய்பவர்கள் புதிய வாய்ப்புகளை பயன்படுத்தி முன்னேறுவீர்கள். குடும்பத்தில் செலவுகள் எதிர்பார்த்ததை விட அதிகமாகும். உயர்பதவியில் உள்ள பெண்கள் சக பணியாளர்களிடம் சுமூகமாகப் பழகுவது நல்லது. கடுமையான பேச்சால் மனக்கசப்பு உண்டாகும் வாய்ப்பு உருவாகும். பங்குச்சந்தை வியாபாரம் சுமாராக நடைபெறும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை. அதிர்ஷ்டக்கிழமை: புதன்.




### உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

நேர்மையுடன் பழகும் குணம் கொண்ட கன்னி ராசி அன்பர்களே!

நண்பர்கள் வருகையால் செலவுகள் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டாகும். பணசம்பந்தமான விடயங்களில் கவனமாக இருப்பது அவசியம். சிறு பயணங்களைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலர், அதிக ஆதாயமுள்ள புதிய வேலைக்குச் செல்லக்கூடும். குடும்பத்தில் அமைதியான போக்கு காணப்பட்டாலும், சிறு சிறு சிரமங்களும் இருக்கக்கூடும். பெண்களுக்கு விரும்பியபடி பணி உயர்வு மற்றும் இடமாற்றம் ஏற்படக்கூடும். வீட்டில் சுபகாரியங்கள் செய்ய முயற்சிகளை மேற்கொள்ளலாம். பங்குச்சந்தை வியாபாரம் முன்னேற்றமாக காணப்படும். முதலீடுகள் லாபகரமாக இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,8. அதிர்ஷ்ட நிறம்: நீலம். அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

வேலை வாங்குவதில் சாமர்த்தியத்துடன் செயல்படும் துலாம் ராசி அன்பர்களே!

அனைத்து முயற்சிகளிலும் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். பணபரிமாற்றங்களைத் தள்ளிவைப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள், உயரதிகாரிகளின் பாராட்டு பெறுவார்கள். தடைபட்ட சிறிய பதவி உயர்வோ பண சம்பந்தமான அனுகூலமோ உங்களைத் தேடி வரும். ஓய்வு நேரம் குறைவதால் உடம்பில் ஆரோக்கியம் குறைபடும். கூட்டுத்தொழிலில் வியாபார வளர்ச்சிக்குரிய முயற்சியை செய்வீர்கள். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் செலவுகள் உண்டு. பெண்களுக்கு ஆரோக்கியக்குறை ஏற்படலாம். சிலர் வயதானவர்களின் மருத்துவ செலவுக்காக சேமிப்பை செலவழிக்க நேரிடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 5,6,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: வெள்ளி.




### விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்ட விருச்சிக ராசி அன்பர்களே!

எடுத்த முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். வரவை விட செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு விருப்ப ஓய்வு கிடைக்கலாம். பதற்றத்தால் பேசும் பேச்சுகள் மனக்கசப்பை உண்டாக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். முதலீடுகளை அதிகரிக்க வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் சிலருக்கு வசிக்கும் வீட்டை மாற்ற வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். பெண்கள் தாய்வீடு சென்று மங்கலப் பொருள்களுடன் திரும்புவர். பிரிந்த உறவுகள் சேர வாய்ப்பு உண்டாகும். பங்குச்சந்தை வியாபாரத்தில் லாபம் சுமாராகவே இருக்கும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

முன்னெச்சரிக்கை குணத்துடன் செயல்படும் தனுசு ராசி அன்பர்களே!

இந்த வாரம் எப்பாடு பட்டாவது வெற்றிபெற வேண்டும் என்று கடினமாக உழைப்பீர்கள். பணம் வரும் முன்பே செலவுகள் காத்திருக்கும். பூர்வீக சொத்து பராமரிப்பில் கவனம் அவசியம். குலதெய்வ வழிபாடு நன்மை தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றங்கள் வரலாம். சேமிப்பு பெருக வாய்ப்புண்டு. சுயதொழில் செய்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு அதிக லாபம் வரும். குடும்பத்தில் குதூகலம் காணப்படும். சிறு சிறு தொல்லைகள் இருந்தாலும் பாதிப்பு வராது. பெண்கள் சகோதரவழி உறவுகள் இல்ல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்கள். புதிய பங்குகள் வாங்கும் முன்பு உரிய ஆலோசனைகள் பெறுவது நல்லது.

அதிர்ஷ்ட எண்கள்: 3,8,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




### உத்திராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

எந்த செயலிலும் அதிக உழைப்பை வெளிப்படுத்தும் மகர ராசி அன்பர்களே!

செய்யும் செயல்களில் தீவிர முயற்சியோடு ஈடுபடுவீர்கள். எதிர்பார்த்தபடி பணம் வந்தாலும் செலவுகள் அதிகமாகும். சிறு பொருட்கள் தொலைவதால் சங்கடங்கள் உண்டாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களில் சிலருக்கு கடின முயற்சிகள் மூலம் எதிர்பார்க்கும் காரியம் வெற்றி அளிக்கும். சுயதொழில் செய்பவர்களுக்குப் புதிய நபர்களின் அறிமுகத்தால் தொழில் முன்னேற்றம் ஏற்படக்கூடும். கூட்டுத்தொழில் வியாபாரம் முன்னேற்றமாக நடைபெறும். லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் விருந்தினர்களின் வருகையால் செலவுகள் அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகளில் பெண்கள் கலந்துகொள்வார்கள். உணவுக் கட்டுப்பாட்டில் கவனமின்றி ஆரோக்கியக் குறைபாட்டை சந்திக்க நேரலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,8. அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம். அதிர்ஷ்டக்கிழமை: சனி.




### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

கவலைகளை வெளிக்காட்டாத முகம் கொண்ட கும்ப ராசி அன்பர்களே!

இந்த வாரம் அதிக முயற்சியோடு செயல்பட்டு வெற்றிகளை குவிப்பீர்கள். தக்க சமயத்தில் தனவரவு வந்தாலும், காத்திருக்கும் செலவுகள் சிந்தனைக்கு வேலை தரும். புதிய வேலை தேடி வரும். கடிதம் மூலம் வரும் தகவலால் பயணம் ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் உயர்அதிகாரிகளின் எண்ணப்படி செயல்பட வேண்டிய நிலைமை வரும். பணிச்சுமைப்புகள் அகலும். சுயதொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்ததைவிட அதிக வருமானம் கிடைக்கலாம். குடும்பம் சீராக நடைபெற்றாலும் சிறு சிறு பிரச்சினைகள் வந்து போகும். வேலைக்குப் போகும் பெண்களுக்குப் பதவி உயர்வு வர வாய்ப்பு உண்டு. சேமிப்புகள் தக்க நேரத்தில் கைகொடுக்கும். சகோதர வழி உறவில் நல்ல செய்தி தேடிவரும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,6,9. அதிர்ஷ்ட நிறம்: வெளிர் மஞ்சள். அதிர்ஷ்டக்கிழமை: வியாழன்.




### பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

செய்யும் செயல்களில் உற்சாகமாக ஈடுபடும் மீன ராசி அன்பர்களே!

நண்பர்களின் ஆதரவு பெருகும். உறவினர்களின் திடீர் வரவு மனமகிழ்ச்சியை தரும். ஒப்புக்கொண்ட சில செயல்களில் தளர்வடைந்தாலும் தக்க நபர்களின் துணையுடன் வெற்றி காண்பீர்கள். எதிரிகளை வெற்றி கொள்ளும் மனத்துணிவு ஏற்படும். உத்தியோகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். சுயதொழில் செய்பவர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்பும் பணவரவும் உண்டாகும். விருந்தினர்கள் வருகையால் பெண்களுக்கு வேலைகள் அதிகமாகலாம். சேமிப்பு செலவழிந்தாலும் நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம். பங்குச்சந்தை வியாபாரம் சிறப்பாக நடைபெற்று அதிக லாபம் ஏற்படலாம்.

அதிர்ஷ்ட எண்கள்: 1,3,9. அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு. அதிர்ஷ்டக்கிழமை: செவ்வாய்.

யுத்தம் நடைபெற்ற நாட்களில் வன்னியில் எவ்வளவோ சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தாங்கள் எதிர்கொண்ட அவலங்களை, தங்களுக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை பலர் 'உயிர் வலிக்கும் கணங்கள்' என்ற பகுதியில் எழுதி வருகிறார்கள். அதே போன்று வன்னியில் இடம்பெற்ற சம்பவங்களைப் பலர் கதை வடிவிலும் எழுதி வருகிறார்கள். இந்தத் தொடரில் நிரோஷா தியாகராசா எழுதிய 'தாயொருத்தி வருவாளா?' என்ற உண்மைக்கதை வெளிவருகிறது.

# தாயொருத்தி வருவாளா?

## நிரோஷா தியாகராசா

அது இராமநாதன் நலன்புரி நிலையம். அங்கே ஒதுக்குப்புறமாய் அந்த மருத்துவமனை அமைந்திருந்தது. அடிப்படை வசதிகள் அங்கே தொலைந்திருந்தது. அதிகாலை நான்கு மணிக்கே, இலக்கத்துண்டும், வரிசையுமாக மக்கள் அலைமோதத் தொடங்கி விடுவார்கள். எப்படியும் பத்து, பத்தரை மணிக்குப் பின்பே மருத்துவமனை திறக்கப்படும். ஏற்கனவே நோயின் கடுமையால் துவண்டு போயிருக்கும் மக்கள், சிங்கள மருத்துவர்களோடும், மொழிபெயர்ப்பாளர்களோடும் கடுமையாய் போராட வேண்டியிருக்கும்.

வரிசையில் காத்திருந்த வசந்தனால் தொடர்ந்தும் நிற்க முடியவில்லை. வட்டுவாகலில் தொடராக கொலைப்பட்டினி கிடந்ததன் விளைவுதான் இந்த மயக்கம். கண்கள் இருட்டடிக்க தன் பிள்ளைகள் இருந்த இடத்தை நோக்கி நடந்தான். அவனது நான்கு வயது மகன் சதீஷ் வாடிப்போய் அமர்ந்திருந்தான். அவனது பிஞ்சு மடியில் ஒருவயது நிரம்பாத பெண் குழந்தை ஒட்டிப் போன வயிற்றுடன் படுத்திருந்தது. தந்தையைக் கண்ட பிள்ளைகள் அவனுடன் ஒண்டிக் கொண்டார்கள்.



பெண் குழந்தை பால் தேடி வசந்தனின் மார்பைத் தடவியது. வசந்தன் ஒருகணம் துடித்துப் போனான். அவன் இதயத்தை யாரோ சம்மட்டியால் அடிப்பது போல உணர்ந்தான். பிள்ளைகளைத் தழுவிக் கொண்டான். அவன் எண்ணங்கள் கடந்த நாட்களின் கண்ணீர்ப் பொழுதுகளை நோக்கி விரைந்தன.

வசந்தனும் லதாவும் நெடுங்கேணிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். திருமணப் பந்தத்தில் இணைந்து சுமார் நான்கு வருடங்கள் ஆகின்றன. இவர்கள் விவசாயக் குடும்பம் என்பதால் அதிகமாகவே வயல், தோட்டங்கள் செய்வார்கள். அதனால் வளமாய்த் தான் வாழ்ந்தார்கள். அவர்கள் இனிய இல்லறத்தின் சின்னமாய் முதலில் உதித்தவன்தான் சதீஷ். அப்போது தான் போர் தன் முகத்தை மெதுவாகக் காட்ட ஆரம்பித்திருந்தது. 2008 மே மாதத்தின் தொடக்க காலமது. மருதோடை ஊடாக நெடுங்கேணி செல்லும் பிரதான வீதியில் கிளைமோர்கள் வெடிக்கும் அந்த இடங்களைச் சூழ எறிகணைகள் வீழும். பல உயிர்களும் போகும். இது வழக்கமாக இருந்ததால் மக்களுக்கும் பழகிப் போயிற்று.

ஒரு கட்டத்தில் நெருக்கடி அதிகரித்துவிடவே கையில் அகப்பட்ட பொருட்களோடு இடம் பெயர்ந்தார்கள். அவர்களில் வசந்தன் குடும்பமும் இணைந்து கொண்டது. வயல், தோட்டங்கள் பூத்துக்குலுங்கும் பசுமையான பருவம் அது. எல்லாவற்றையும் விட்டு ஓடினார்கள். ஒருவாறு ஒட்டுசுட்டானை அண்டிய பகுதிகளில் ஆறுமாதம் வரை வசித்துக் கொண்டிருந்தார்கள். வன்பறிப்பு விரைவுபடுத்தப்படவே, 2009 ஆரம்பப் பகுதியில் தேவிபுரம் நோக்கி நகர்ந்தார்கள்.

தாம் அழியப் போவதை அறியாத அப்பாவி மக்கள், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம். பல ஊர்களில் தஞ்சம் புகுந்தார்கள். அப்போது லதா ஒரு பெண் குழந்தையைப் பிரசவித்திருந்த காலம். சுதந்திர வலயமாய் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த பகுதிகளெல்லாம் சுடுகாடாய் மாறிக் கொண்டிருந்தது. வசந்தனும் கைக்குழந்தையை ஏந்திய மனைவியுடன் மகனையும் அழைத்துக் கொண்டு முள்ளிவாய்க்காலை நோக்கி ஓடினான். அப்போது அவர்களிடம் உயிரைத் தவிர வேறெந்த உடைமைகளும் இல்லை.

வசந்தன் பக்கத்தில் இருந்த ஒருவரிடம் மண்வெட்டியைப் பெற்று பதுங்குகுழி அமைத்துக் கொண்டிருந்தான். அவன் அடிக்கடி வயிற்றை தடவிக் கொண்டிருந்தான். பெண்குழந்தை தாயின் பால்முலைகளை உறிஞ்சி உறிஞ்சி தோற்றுப் போய் அழுது கொண்டிருந்தது. லதாவின் மனது வெம்பி வெடித்தது. சதீஷும் ''அம்மா பசிக்குது'' என பாடம் பண்ணிக் கொண்டிருந்தான். ஒரு கிழிந்த சேலையை நிலத்தில் விரித்து பிள்ளைகளை வளர்த்திவிட்ட லதா, பதுங்குகுழி அமைத்துக்கொண்டிருந்த கணவனை நெருங்கினாள்.

''இஞ்சாரப்பா நீங்கள் பங்கரை வெட்டுங்கோ உந்த எதிர்வீட்டுப் பிள்ளைகள், கஞ்சி வேண்டப் போகுதுகளாம். பாவமப்பா சதீஷ் பசியால துடிக்கிறான். சின்னனுக்கு அழுதழுது தொண்டை கட்டிப் போட்டுது'' எனக் கூறிக்கொண்டே தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். ''ல...லதா நீ போகாத; சரியான மாதிரி ஷெல் அடிக்கிறாங்கள். வேலையை முடிச்சுப் போட்டு நான் போறன்'' என்றவனை, ''இல்லையப்பா பிள்ளைகள் வாடிப்போட்டுதுகள். நான் கவனமாய் போறன்'' அவன் பதிலை எதிர்பார்க்காமலே ஒரு பொலித்தீன் பையுடன் விரைந்தாள். வசந்தன் மனைவியையே பார்த்துக் கொண்டிருந்தான். கை-கால்கள் சோர்ந்து போகவே மண்வெட்டியைப் போட்டு விட்டு அமர்ந்துகொண்டான்.

லதா சென்று ஒரு மணித்தியாலம் கடந்திருக்கும். அவள் சென்ற திசையிலே சரமாரியாக எறிகணைகள் வீழவே, பதைப்புடன் எழுந்த வசந்தன் அந்தத் திசை நோக்கி ஓடினான். லதாவுடன் சென்ற எதிர்வீட்டுப் பிள்ளை மூச்சிரைக்க ஓடிவந்தாள். அவள் கையில் பால்மாபைக்கற்றுகளும் இன்னும் ஏதேதோ சாமான்களும் இருந்தன. அவற்றையெல்லாம் கவனிக்க வசந்தன் தயாராக இல்லை. லதா எங்கே என்ற கேள்வியோடு நோக்கவே, ''ல... லதாக்...கா லதாக்கா...'' என்றவளை ''எ...என்ர ல...லதாம்மாவுக்கு எ...என்ன நடந்தது?'' பெரிதாக அலறினான் வசந்தன்.

''அண்ணா, கஞ்சி வேண்டப் போனம் அது முடிஞ்சுது. பக்கத்தில இரத்தம் குடுத்தால் பால்மா பைக்கெற், சாப்பாட்டுச்சாமான் எல்லாம் தாறதா ஒரு அறிவிப்பு கேட்டுது. அக்கா சரியா சந்தோசப்பட்டா. 'என்ர பிள்ளைகளும், மனுசனும் இண்டைக்குச் சரி சாப்பிடட்டும்' என்று சொல்லிக் கொண்டே ரெத்தம் குடுத்தா. பால்மா பைக்கற்றைக் கொண்டு வந்து காட்டி சந்தோசப் பட்டா; தலைசுத்துது என்டு சொல்லிக் கொண்டே ஒரு மரத்தடியில் இருந்தா. ஒரு ஷெல் வந்து விழுந்தது. அக்காட உடம்பில காயப்படாத இடமே இல்ல. உடனே சீவன் போட்டுது.

வசந்தன் துடித்துக் கொண்டே லதாவிடம் ஓடினான். அழுதான்; அரற்றினான். என்னதான் செய்தாலும் லதா வரவா போகிறாள். அன்று தன் இரத்தத்தைப் பாலாக்கி பிள்ளைகளுக்கு ஊட்டினாள். இன்று பால் வேண்டுவதற்காய் இரத்தம் கொடுத்து மடிந்தாள். 'டொக்டர் வாறார்' என்ற சத்தம் கேட்டு வசந்தன் சிந்தனையிலிருந்து கலைந்தான்.

ஆமாம், எம் வன்னியில் இப்படி எத்தனை குழந்தைகள் தவிக்கிறார்கள் தாயின்றி. இவர்களுக்குத் தாலாட்டுப் பாட தாயொருத்தி வருவாளா?

# பட்மின்டன் வீராங்கனை சயானா




சாய்னா நெஹ்வால்... உலகப் பெண்கள் பட்மிட்டன் தர வரிசையில், எந்த நேரமும் முதல் இடத்தை முத்தமிடும் பக்கத்தில் இருப்பவர். சர்வதேச விளையாட்டு அரங்கில் இந்தியக் கொடிக்குக் கௌரவம் தேடித் தரும் மிகச் சிலரில் ஒருவர். 25 வயதைக்கூட எட்டாத சாதனைப் பெண்ணைப்பற்றிய சில குறிப்புகள் இங்கே...

✱ சாய்னா, 1990 மார்ச் 17 இல் ஹரியானாவில் பிறந்தவர். ஆனாலும், விளையாடி வளர்ந்தது எல்லாமே ஹைதராபாத்தில். சாய்னாவின் முன்மாதிரி, அவரின் அப்பா டாக்டர் ஹர்விர் சிங். சாய்னாவின் அப்பா - அம்மா இருவருமே பட்மிட்டன் சாம்பியன்கள்!

✱ சாய்னாவின் அக்கா சந்திரான்சு பார்மசி பட்டதாரி. வலைப்பந்து வீராங்கனை. ஆனால், தங்கை அளவுக்கு விளையாட்டில் ஆர்வம் இல்லை!

✱ ஐந்து மாத சிசுவாக இருந்தபோது சாய்னாவை ஒரு பட்மிட்டன் போட்டியைப் பார்க்கத் தூக்கிச் சென்று இருக்கிறார்கள். உள்ளே நுழைந்ததும்... சாய்னா முதன்முறையாக வாய்விட்டுச் சிரித்ததாம். அடக்க முடியாத ஆனந்தச் சிரிப்பாம். பின்னாட்களில் விளையாட்டில் சாதனைகள் படைத்த பிறகு, சாய்னாவின் அப்பா இந்த சம்பவத்தை அடிக்கடி நினைவுகூர்வார்!

✱ சாய்னாவுக்கு எட்டு வயது இருக்கும். அதிகாலை 4 மணிக்கே எழுப்பி, 25 கி.மீ. தொலைவில் இருக்கும் மைதானத்துக்கு ஸ்கூட்டரில் பயிற்சிக்கு அழைத்துச்



செல்வார் அவரது தந்தை. பயிற்சி முடிந்து, பள்ளிக்குக் கொண்டு வந்து விடும்போது, ஸ்கூட்டரில் அமர்ந்த படியே சாய்னா தூங்கிவிடுவாராம். அதனால், சாய்னாவை அணைத்துப் பிடித்துக்கொள்ள, அவருடைய அம்மாவும் ஸ்கூட்டரில் உடன் வரத் தொடங்கினார்!

✱ பயிற்சிக்கெனத் தினமும் 50 கி.மீ. பயணம் செய்வது சிரமமாக இருந்ததால், மைதானத்துக்கு அருகிலேயே ஒரு வீடு பார்த்து மாறிக்கொண்டார்கள் சாய்னா குடும்பத்தினர்!

✱ சாய்னாவின் பயிற்சிக்கென, அப்போதே மாதம் 12 ஆயிரம் ரூபாய் ஒதுக்கிச் செலவழித்தார் அவரது தந்தை. சாய்னாவின் தொடர் வெற்றிகளுக்குப் பிறகு, யோனெக்ஸ் நிறுவனம்தான் முதன்முறையாக சாய்னாவுக்கு ஸ்போர்ட்ஸ் கிட் அனுசரனை செய்தது!

✱ சாய்னா வீட்டின் பிரியமான இளவரசி. செல்லமாக 'ஸ்டெபி' என்றுதான் அழைப்பார்கள்!

✱ இருட்டு என்றால் இப்போதும் சாய்னாவுக்குப் பயம். அம்மா அல்லது அக்கா என யாராவது உடன் இருந்தால் தான், தூங்கவே செல்வார். 'இதுவரை ஓர் இரவுகூட இவள் தனியாகத் தூங்கியது இல்லை!' என்கிறார் சாய்னாவின் அம்மா சிரித்துக்கொண்டே!

✱ 'ராஜீவ் காந்தி கேல் ரத்னா' விருது வென்ற முதல் பெண் பட்மிட்டன் வீராங்கனை, ஒலிம்பிக்கில் கால் இறுதி வரை முன்னேறிய முதல் இந்தியப் பெண், உலக ஜூனியர் பட்மிட்டன் பிரிவில் பட்டம் வென்ற முதல் இந்தியர் என்று, பல 'முதல்' சாதனைகளுக்குச் சொந்தக்காரர்!

✱ சிறு வயதில் இருந்தே சினிமாவுக்குச் சென்றது இல்லை. ஓய்வு நேரங்களில்கூட விளையாட்டு, செய்தி சேனல்களில் மட்டுமே சாய்னாவின் கவனம் இருக்கும். பிடித்த நடிகர் என்றால், ஷாருக்கான்!

✱ பெரும்பாலும் சாதாரண ஆடைகளிலேயே இருப்பார். இதுவரை டிசைனர் சுடிதார், பகட்டான புடைவைகள் என எதுவும் வாங்கியது இல்லை. சாய்னாவின் அம்மாவும் இதுவரை புடவை உடுத்தியது இல்லை. புடைவையே இல்லாத வீடு என்ற 'பெருமை' இவர்கள் வீட்டுக்கு உண்டு!

✱ சி.பி.எஸ்.இ. சிலபஸில் பள்ளி இறுதி மட்டுமே தொட்டவர் சாய்னா. இவரது விளையாட்டுத்துறைச் சாதனைகளை ஊக்குவிக்கும் பொருட்டு, கௌரவ எஸ்.பி. அந்தஸ்து அளித்தார்கள். ஆனால், அது பட்மிட்டன் பயிற்சியைப் பாதிக்குமோ என்ற தயக்கத்தில், அந்த வாய்ப்பை சாய்னா ஏற்கவில்லை!

✱ புதிதாக வரும் லப்-டாப் கணினி மற்றும் செல் போன்களைத் தனது பிரியமான தெரிவுகளாக தெரிவு செய்து கொண்டே இருப்பார். அடிக்கடி தன் போன் நம்பரை மாற்றுவதும் சாய்னாவின் பழக்கம்!

✱ கொமன்வெல்த் போட்டிகளில் 2004 இல் இரண்டு வெள்ளிப் பதக்கங்கள், 2006 இல் மூன்று வெண்கலப் பதக்கங்கள், 2007 தேசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு தங்கப் பதக்கம், 2008 இளைஞர்களுக்கான கொமன்வெல்த் போட்டியில் ஒரு தங்கப் பதக்கம், 2010 ஆசிய பட்மிட்டன் சாம்பியன்ஷிப்பில் மூன்று வெண்கலப் பதக்கங்கள், ஆகியவை தன் மனதுக்கு நெருக்கமான வெற்றிகளாக சாய்னா உணர்பவை!

✱ வெளிநாடுகளுக்கு விளையாடச் செல்லும்போது, 'சைட் சீயிங்' மேற்கொள்ளும் பழக்கம் சாய்னாவிடம் கிடையாது. பயிற்சி, போட்டி, போட்டி முடிவுகள் குறித்த தனது பிளஸ், மைனஸ் பற்றிய அலசல்களில் மட்டுமே முழுக் கவனமும் இருக்கும். சமீபத்தில் பாரிஸுக்கு விளையாடச் சென்று, ஈபில் டவரைக் கூடப் பார்க்காமல் திரும்பியவர் சாய்னா!

✱ கம்மல் மற்றும் ஹேர்க்ளிப் பிரியை. விதவிதமாக வாங்கிக் குவித்துவிடுவார். மற்றபடி, நகைகள் மீது விருப்பம் இல்லை. கைக்கடிகாரம் அணியும் பழக்கமும் இல்லை!

✱ சாய்னா எதற்காகவும் அடம்பிடிக்கவோ, கோபப்படவோ மாட்டார் என்கிறார் அவரது தந்தை. ஆனால், பட்மிட்டன் பயிற்சியின்போது யாரேனும் குறுக்கிட்டால், சாய்னாவுக்குக் கெட்ட கோபம் வரும் என்று எச்சரிக்கிறார்!

✱ கடவுள் நம்பிக்கை அதிகம். எப்போதும் விநாயகர் சிலை வைத்திருப்பார். ஆனால், கோயிலுக்குச் சென்று வழிபடும் பழக்கம் இல்லை!

✱ டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் தான் சாய்னாவுக்குப் பிடித்த வீரர். ரோல் மாடலும் அவரே!

✱ பாலிவுட் பட வாய்ப்புகள் வந்தபோது, உறுதியாக மறுத்துவிட்டார். 25 வயதில் திருமணம் செய்துகொள்ளலாம் என்று ஐடியாவாம். எதிர்காலக் கணவரும் விளையாட்டுத்துறை பிரபலமாக இருந்தால் நல்லதாம்!

✱ போட்டி என்று, மைதானத்தில் இறங்கிவிட்டால், 'முதல் தர வீரருடன் விளையாடுகிறோம்', 'மூன்றாவது இடத்தில் இருக்கும் நாம் 22 ஆவது இடத்தில் இருக்கும் எதிராளியைச் சுலபமாக வீழ்த்திவிடலாம்' என்ற நினைப்புகளுக்கு இடம் அளிக்கவே மாட்டார். 'எதிராளி யாராக இருந்தாலும், கொஞ்சம் அசந்தாலும் நம்மை ஜெயித்துவிடுவார்!' என்று மட்டுமே நினைப்பாராம். அதுதான் தன் வெற்றியின் இரகசியம் என்கிறார்!

✱ 'மிக நெருங்கிய நண்பர்கள் யார்?' என்ற கேள்விக்கு சாய்னாவிடம் பதிலே இருக்காது. பளிச்சென்று சொல்லும் அளவுக்கு சாய்னாவுக்கு யாரும் நெருக்கமான நண்பர்கள் இல்லை என்பதே காரணம். 'பட்மிட்டன் மட்டுமே தனது ஒரே நெருங்கிய நண்பன்' என்பார்!



✱ டென்னிஸ் மீதும் ஒரு கண் இருந்தது. ஆனால், பட்மிட்டனை விட, டென்னிஸ் பயிற்சிகள் அதிக செலவு பிடிக்கும் என்பதால், அந்த ஆசையை ஆரம்பத்திலேயே தலைக்குள் புதைத்துக்கொண்டார்!

✱ கடந்த ஜூன் மாதத்தின் மூன்று வாரங்களில் இந்தியன் ஓப்பின், சிங்கப்பூர் ஓப்பின், இந்தோனேஷியன் ஓப்பின் என்று அடுத்தடுத்து சாய்னா குவித்த வெற்றிகள், அவரை உலக தரவரிசையில் இலகுவாக இரண்டாவது இடத்துக்கு உயர்த்தியது. இந்தியர் எவரும் எட்டியிராத உயரம் அது!

✱ மாநில அளவில் 10 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில் வென்று, முதன்முதலில் சாய்னா கொண்டுவந்த பரிசுத் தொகை, 300 ரூபாய். கடந்த வருடம் உலக பட்மிட்டன் பெடரேஷன் அமைப்பு நடத்திய ஒரே போட்டித் தொடரில் வென்றதன் மூலம் அவருக்குக் கிடைத்த பரிசுத் தொகை, 18,750 அமெரிக்க டொலர்கள்!

## மாதிரிக் கவிதைகள்

காட்டுக்குப் போய் விறகு எடுத்து
வந்து வயலுக்குப் போய் நெல்
எடுத்து வந்து.... பசியோடு இருந்த
போதெல்லாம் சோறு தந்த அம்மாவே
வெறும் அரிசியையே உன் வாயில்
தூவியும் கட்டை விறகுகளால்
உன்னை எரிக்கவும் தான் என்னால்
முடிந்தது!

* * *

ஒரு குருட்டுக் குருவி இரை எனக்
கொத்துகிறது - தன் குஞ்சின்
இரப்பையை....

* * *

உன் வீட்டுக்கு வந்தேன் - நீ
கோப்பி தந்தாய்
கோப்பியை விட இனித்தது
உன் விரல் பட்ட டம்ளர்!

* * *

அரிசி, மா, சீனி, உப்பு, புளி, பருப்பு
என்ற பட்டியலோடு சேர்த்து
கடைத் தெருக்களில்
விற்பனை செய்யலாமே
மணமகன்களையும்!

* * *

என் குழந்தைகளை கல்லூரிக்கு
அழைத்துச் செல்வதும்
திரும்பவும் வீட்டுக்கு அழைத்து
வருவதும் என் வீட்டுக்கு
வேலைக்கு வரும் குழந்தைகளே...

* * *

மழையே எனக்கு ஒரு வாரம்
அவகாசம் கொடு
காதலிக்கு குடை வாங்க வேண்டும்!

* * *

யாரும் சிரிக்காதீர்கள்
எனக்கு வயது நாற்பதாகிறது
இன்னுமே கலியாணம் ஆகவில்லை
காரணம் - செவ்வாய் தோஷம்
மாப்பிள்ளை தேடுவதிலேயே
கால் நூற்றாண்டு கடந்து விட்டது
இந்த வருடம் அதிர்ஷ்டம் என்று
ஜோசியர் சொல்லுகிறார்
ஜோசியருக்கும் இன்னும்
கலியாணம் ஆகவில்லையே....!

* * *

காதலர் தினத்தில் காதலிகளுக்கு
காதலர்கள் ரோஜா கொடுக்கிறார்கள்
நான் எப்படிக் கொடுப்பது
என் காதலிக்கு ரோஜாவை
'என் காதலி இந்த தேசம்'

* * *

பட்டினி கிடப்பது பற்றியும்
பாடசாலைகளில்....
கற்றுக்கொடுங்களேன்!

* * *

சிறுநீர் கழிப்பதற்காக
சாலையோரத்தில் மறைவிடம் தேடித்
தேடி அவன் களைத்துப் போனான்
ஆங்காங்கே மலங்கள்
கழிக்கப்பட்டிருக்கின்றன

* * *

பூக்கடைக்காரியை திட்ட வேண்டும்
போல இருக்கிறது - ஏமாற்றி
பூவிடமே பூவை விற்கிறாளே!

(மாதிரிகள் தொடரும்)

நெடுந்தீவு முகிலன்

# எயார் ரெல் விளம்பர தூதராக கார்த்தி ஈழத் தமிழ் ஆதரவாளர்கள் அதிருப்தி



'பருத்தி வீரன்' படத்தில் அறிமுகமாகி தொடர் வெற்றிகளை குவித்து வரும் கார்த்தி, எயர் ரெல் நிறுவனத்தின் விளம்பரத் தூதராக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இனிவரும் எயர் ரெல் விளம்பரங்களில் கார்த்தி தோன்றவுள்ளார். இந்தப் புதிய வியாபார ஒப்பந்தம் தமிழ் உணர்வாளர்களை மிகவும் காயப்படுத்தியிருக்கிறது. ஈழப்போர் நடந்த நேரம் இலங்கை அரசுக்கு ஏயர் ரெல் சாதகமாக இருந்ததாகவும், செய்யப்பட்ட படுகொலைகளை மறைக்க உதவியதாகவும் தமிழ் உணர்வாளர்கள் ஏற்கனவே எயர் ரெல் மீது குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். ஏயர் ரெல்லை புறக்கணிக்கும் விதமாக நூற்றுக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் தங்களது எயர் ரெல் இணைப்புகளைத் திரும்பிக் கொடுத்த நிகழ்வும் தமிழகத்தில் நடந்துள்ளது.
இந்நிலையில் கார்த்தி எயர் ரெல்லின் புதிய விளம்பரத் தூதராகப் பொறுப்பேற்றுக்கொண்டது ஈழ ஆதரவாளர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

## எந்த நடிகையுடனும் காதல் இல்லை - ஆர்யா

எந்த நடிகைகளையும் காதலிக்கவில்லை என்கிறார் ஆர்யா. அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''பாஸ் என்கிற பாஸ்கரன் முழுத் திருப்தி அளித்துள்ளது. அடுத்து 'சிக்கு புக்கு' படம் வெளிவரவிருக்கிறது. இந்நிலையில் பாலா இயக்கும் 'அவன் இவன்' படப்பிடிப்பும் நடந்து வருகிறது. பாலாவின் 'நான் கடவுள்' பாணியில், மீண்டும் அடர்த்தியான தாடி, மீசையுடன் நடிக்க ஆசையாக இருக்கிறது. முடி வளர்ப்பது சிரமமான விடயமாகத் தெரியவில்லை. 'நான் கடவுள்' படத்தில் நான் தோன்றியிருந்த வேடம் எனக்கு மிகவும் பிடிக்கும். ஹீரோவாக நடிப்பதால், என்னைப்பற்றி நிறைய கிசுகிசுக்கள் வருகின்றன. சில கிசுகிசுக்கள் சுவாரஸ்யமாகவும் இருக்கும். பெரும்பாலும் அவை என் வளர்ச்சிக்கு உதவியாகவே இருக்கின்றன. வீட்டில், 'எப்ப கல்யாணம் பண்ணிக்க போறே?' - என்று கேட்கிறார்கள். இப்போது அவசரம் இல்லை. எத்தனையோ பெண்களைப் பார்க்கிறோம், பேசுகிறோம், பழகுகிறோம். இதில் பார்த்தவுடனே என் மனதைக் கவரும் பெண்ணைத் திருமணம் செய்வேன். கல்யாணம் செய்துகொள்ளவேண்டும் என்ற கட்டாயத்துக்காக பெண் தேட முடியாது. என்னுடன் சேர்ந்து நடிக்கும் எந்த நடிகை மீதும் இதுவரை எனக்குக் காதல் வந்தது இல்லை.''
- இப்படித் தெரிவித்தார்.



## பிரபு தேவாவின் திருமண அறிவிப்புக்கு நடிகைகள் வாழ்த்து

நயன்தாராவை மணப்பேன் என்று மும்பையில் வைத்து சமீபத்தில் அறிவித்தார் பிரபுதேவா. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து பருத்விராஜ், ஜெனிலியா, நித்யா மேனன் போன்றவர்கள் பிரபுதேவாவுக்கு, கைலாகு கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தனராம். பிரபு தேவாவின் பேச்சில் மயங்கிய நடிகைகள் மெய்மறந்து அவரது முக பாவனைகளை உன்னிப்பாகக் கவனித்த வண்ணம் இருந்தனராம். மேலும் நடன அனுபவத்தைப் பிரபு தேவா கூறத் தொடங்கியவுடன் ஜெனிலியாவும், நித்யா மேனன் ஆகியோர் அவரைச் சூழ்ந்துகொண்டு, இடுப்பை வளைத்து வது, கால் விரல்களைத் தரையில் சமன் செய்து ஆடுவது போன்ற சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டனராம்.






## முத்தம் தர நான் தயார் - த்ரிஷா

கூலி கொடுத்தும் கரும்பு தின்ன மறுத்தவரைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? த்ரிஷா சம்மதம் தெரிவித்தும் அவரை முத்தமிட மறுத்த நடிகரைப் பற்றி வேறெப்படிச் சொல்வது?
இந்தியில் வெளியான 'லவ் ஆஜ் கல்' படத்தை தெலுங்கில் 'ரீமேக்' செய்கிறார்கள். சைப் அலிகான் நடித்த வேடத்தில் பவன் கல்யாண், தீபிகா படுகோன் வேடத்தில் த்ரிஷா நடிக்கிறார்கள்.
'லவ் ஆஜ் கல்' படத்தில் வருவதைப் போன்ற உதடும் உதடும் வைத்துக் கொடுக்கும் முத்தக் காட்சியை தெலுங்கிலும் வைக்க ஆசைப்பட்டிருக்கிறார் இயக்குநர். பவன் கல்யாணுக்கு முத்தம் தர த்ரிஷா தயாராக இருந்தாராம். ஆனால் பவன் கல்யாண் தனது வயதுக்கும், கௌரவத்துக்கும் இப்படியான காட்சிகள் நல்லதல்ல என்று த்ரிஷாவை முத்தமிட மறுத்திருக்கிறார்.

## வாய்ப்புகள் கிடைக்காமல் விட்டாலும் சம்பளத்தைக் குறைப்பதாய் இல்லை ஸ்ரேயா

'சிக்கு புக்கு', 'ரௌத்திரம்' என்று இரு படங்களும் தான் இப்போது ஸ்ரேயாவின் கைவசம் உள்ளன. மோகன்லாலுடன் நடிப்பதாக இருந்த மலையாளப் படம் பிற்போடப்பட்டதால், சமீபத்தில் அந்தப் படத்திலிருந்து விலகுவதாக அறிவித்தார் ஸ்ரேயா.
தெலுங்கு, ஹிந்தியிலும் ஸ்ரேயாவுக்கு அவ்வளவாக வாய்ப்புகள் இல்லை. இப்படி வாய்ப்புகள் வராத நிலையிலும் ஸ்ரேயா தனது சம்பளத்தை குறைப்பதாக இல்லை. இந்திய மதிப்பில் நாற்பது லட்சம் ரூபாவை சம்பளமாக வாங்கிக்கொண்டிருந்த ஸ்ரேயா, சம்பளத்தை படிப்படியாக உயர்த்தி தற்போது 75 லட்ச ரூபாவைக் கேட்டுவருகிறார்.

## மனிதனின் இதயத்தில் கடவுள் இருக்கிறார் – ஷாருக்கான்



மனிதனால் செய்யப்பட்ட எதிலும் கடவுள் இல்லை. மாறாக மனிதனின் இதயத்தில் மட்டும் கடவுள் இருப்பதாக நம்புகிறேன், என்று கூறியுள்ளார் ஷாருக்கான். இதுகுறித்து தனது 'டிவிட்டர்' இணையத் தளத்தில் அவர் கூறியிருப்பவை வருமாறு:-

கடவுள், பகவான் என எந்தப் பெயரில் நாம் இறைவனை வழிபட்டாலும், அந்த இறைவன் மனிதனின் இதயத்தில் மட்டுமே இருப்பதாக நான் நம்புகிறேன். இந்தக் கடவுள்களுக்காக மனிதன் உருவாக்கிய தலங்கள், சின்னங்கள் எதிலும் இறைவன் இருப்பதாக நான் நம்பவில்லை.

என்னைப் பொறுத்தவரை முதலில் கடவுள் நம்பிக்கை என்ற விதை மனிதனின் மனதுக்குள் ஆழமாக வேரூன்றவேண்டும். அதன் பின்புதான், கோயிலுக்கோ, மசூதிக்கோ செல்லவேண்டும்.

- இப்படிக் கூறினார்.



## தமிழை என்றும் மறக்கமாட்டேன் – அசின்



சென்னையை எப்போதும் மறக்கமாட்டேன் என்று நடிகை அசின் தெரிவித்துள்ளார். சென்னையில் காவலன் படப்பிடிப்பில் கலந்துகொண்டிருந்த அசின் தெரிவித்தவை வருமாறு:-

மலையாளத்தில் வெளிவந்த 'பொடிகார்ட்' படத்தில் நான்தான் நடிப்பதாக இருந்தது. அப் போது ஹிந்திப் படங்களில் நடித்துக் கொண்டிருந்ததால், அதில் நடிக்க முடியாமல் போய்விட்டது. இப்போது அதே 'பொடிகார்ட்' படம்தான் தமிழில் காவலனாக 'ரீமேக்' செய்யப்படுகிறது. சித்திக்தான் இயக்குகிறார். இந்தப் படத்தில் நான் நடிப்பதில் மகிழ்ச்சி. ஹிந்தியில் நடிப்பதால் தமிழை மறந்துவிடவில்லை. என்னைப் புகழின் உச்சிக்கு கொண்டு சென்றது தமிழ் திரையுலகம்தான். சென்னையை எப்போதும் மறக்கமாட்டேன்.

## கௌதம் மேனனின் படத்திற்கு இசையமைக்கிறார் ரஹ்மான்

கௌதம் மேனன் தயாரிப்பில் அவரது உதவியாளர் வீரா இயக்கி வரும் 'நடுநிசி நாய்கள்' படத்தின் பணிகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளன. முக்கிய கதாபாத்திரத்தில் சமீரா ரெட்டி நடித்துள்ள இந்தப் படம் விரைவில் வெளியாகவுள்ளது. இந்நிலையில் தற்போது கௌதம் மேனன் தனது அடுத்த தயாரிப்பான 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தின் ஹிந்தி 'ரீமேக்கில்' கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார். இந்தப் படத்திற்கான இசையை இசைப் புயல் ஏ.ஆர். ரகுமான் அமைக்க உள்ளார்.

## உதட்டு முத்தக் காட்சியில் ப்ரியா மணி

கவர்ச்சியில் தெலுங்கு ரசிகர்களைத் திக்குமுக்காட வைத்து வரும் ப்ரியா மணி, உதடும் உதடும் வைத்து முத்தம் கொடுத்து ரசிகர்களுக்கு விருந்து படைத்துள்ளார். தனக்கு சினிமாவில் ஒரு நல்ல பெயரைக் கொடுத்த பருத்தி வீரன் முத்தழகி வேடத்தை முற்றாக மறந்துவிட்டார் ப்ரியா மணி.

இப்போது குடும்பப் பாங்கான வேடங்களில் நடிப்பதை விடுத்து, கவர்ச்சியில் கலக்கிக் கொண்டிருக்கிறார்.

இந்த நிலையில் புதிய தெலுங்குப் படத்தில் இளம் ஹீரோ சுமந்த்துக்கு உதடும் உதடும் வைத்து முத்தம் கொடுத்துக் கலக்கியிருக்கிறார் ப்ரியா மணி.

'ரிம்ஜிம்' என்னும் படத்தில் நிஜமான காதல் ஜோடியைப் போலவே நடித்துள்ளனராம் ப்ரியா மணியும், சுமந்த்தும். இந்தப் படத்தில் ஒரு கவர்ச்சிகரமான முத்தக் காட்சி இருந்தால் நன்றாக இருக்கும் என்று இயக்குநர் ஆசைப்பட்டாராம். இதை ப்ரியா மணியிடம் சொல்ல அவர் உடனே சரி என்று உதட்டை ஆட்டியிருக்கிறார். ஆனால் நடிகருக்குத்தான் உடனே சம்மதம் தெரிவிக்க முடியவில்லையாம். இருந்தாலும் ப்ரியா மணி நடிகரை சம்மதிக்க வைத்தாராம்.



## நடிகைகளின் திறமையை மட்டும் பாருங்கள் – லட்சுமி ராய்

படத்தில ஒரு பாட்டுக்குக் குத்தாட்டம் போடும் நடிகைகளை 'ஐட்டம் கேர்ள்' என்று முத்திரை குத்துவது அருவருப்பாக உள்ளது என்று காட்டமாக கூறுகிறார் லட்சுமி ராய்.

படப்பிடிப்புத் தளத்தில் அவரை சந்தித்த சில செய்தியாளர்களிடம் லட்சுமி ராய் தெரிவித்தவை வருமாறு:-

அதென்ன, ஒரு பாடலுக்கு ஆடும் நடிகைகளை 'ஐட்டம் கேர்ள்' என்று கூறுகிறார்கள். அது என்ன வார்த்தை. ஒரு பாடலுக்கு ஆடுவது தவறில்லையே. அப்படி ஆடும் எங்களை 'ஐட்டம் கேர்ள்' என்று கூறுவது நன்றாகவே இல்லை. இது தவறான கண்ணோட்டம். 'ஐட்டம் நடிகை' என்று சொன்னால் மக்கள் மனதில் என்ன மாதிரியான எண்ணம் தோன்றும் என்று யாரும் யோசித்துப் பார்ப்பதில்லை. ஒரு பாடலுக்கு ஆடுகிறார்களோ அல்லது பல பாடல்களுக்கு ஆடுகிறார்களோ அதை மட்டும் பார்க்காதீர்கள். அவர்களது திறமையைப் பாருங்கள், பாராட்டுங்கள், விமர்சியுங்கள். அதை விடுத்து 'ஐட்டம்' என்று சொல்லி மனதைப் புண்படுத்தாதீர்கள் என்று காட்டமாகக் கூறினார்.

# ராணி துர்காவதி

புத்தாக்கம் : கே.கான்



**சிலர் சுருக்கெழுத்து எழுதுவதாகச் சொல்லுகிறார்களே, அதற்குக் காரணம் என்ன?**

யாரேனும் பேசும் பொழுது அவர் பேசுவதை அப்படியே நாம் எழுத முடியுமா? பாடசாலையில் உங்கள் ஆசிரியை சொல்வதை நீங்கள் அரை குறையாகத்தானே எழுதிக் கொண்டு வருகிறீர்கள். அதற்குக் காரணம், எழுதும் வேகம் பேசும் வேகத்தை விடக் குறைவாக இருப்பது தான்.

பேசும் வேகத்திலேயே எழுத வேண்டுமானால் சுருக்கமாக எழுதினால்தான் முடியும். அதைத்தான் சுருக்கெழுத்து என்று கூறுகிறார்கள். சுருக்கெழுத்து என்பது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கிரீஸ் தேசத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் இதைப் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பித்தது முந்நூறு ஆண்டுகளுக்கு முன்புதான்.

ஆயினும் நூறு வருடங்களுக்கு முன்பிருந்த 'பிட்மன்', இப்பொழுது உலகமெங்கும் கையாளப்படும் சுருக்கெழுத்து முறையைக் கண்டுபிடித்தார். நாம் எழுதும் எழுத்தையோ, மொழியையோ இதுவரை எழுதி வரும் எழுத்தைக்கொண்டு சுருக்குவதில் பயனில்லை என்று கண்டார். அதனால் ஒலிகளுக்கேற்ற புதிய குறியீடுகளைச் சிருஷ்டித்து வேகமாக எழுதும் முறையைக் கண்டு பிடித்தார்.

இப்பொழுது அந்தத் தத்துவத்தை அனுசரித்துப் பலர் பலவிதமான சுருக்கெழுத்துக் குறியீடுகளை உண்டாக்கியிருக்கிறார்கள். தமிழில் பேசுவதை எழுதுவதற்கும் சுருக்கெழுத்து முறை கையாளப்பட்டு வருகிறது. சாதாரணமாக நாம் எழுதும் போது எவ்வளவு வேகமாக எழுதினாலும் ஒரு நிமிடத்தில் 60 சொற்களுக்கு அதிகமாக எழுத முடியாது. ஆனால், சுருக்கெழுத்துக்காரர்கள் ஒரு நிமிடத்தில் குறைந்தபட்சம் 150 சொற்கள் எழுதி விடுவார்கள்.

**சாக்கு என்றும் கோணி என்றும் சொல்லுகிறார்களே, அதை எதைக் கொண்டு செய்கிறார்கள்?**

சணல் என்று ஒரு செடி இருக்கிறது. அது துவரைச் செடி மாதிரி இருக்கும். ஆனால் அதில் இலைகள் உச்சியில் தான் இருக்கும் . அது ஓர் ஆள் உயரம் வளரும், அது பூத்தவுடன் காய் பிடிப்பதற்கு முன், அதனை அடியிலிருந்து வெட்டி இலைகளை எல்லாம் நீக்கிவிட்டுத் தண்ணீரில் போட்டு ஊறவைப்பார்கள். ஒரு வாரம் ஊறியதும் அதன் மேல்தோல் பிரிந்துவிடும். அப்பொழுது அதைக் காம்பு கொண்டு அடித்து நாராக்கிக் கழுவிச் சுத்தம் செய்து உலர வைப்பார்கள். அந்த மெல்லிய நாரைக் கொண்டுதான் கோணி செய்கிறார்கள். அந்த நார் பருத்தி நூலைவிட அதிக பலமுடையதாகும். அந்த நாரைக் கொண்டு கயிறு, வடம் முதலியவற்றையும் செய்வார்கள். அதையே மிக மெல்லியதாக எடுத்து பட்டுப் போன்ற துணி நெய்வதுமுண்டு.

**சில மரங்கள் அடி மரத்தில் முடிச்சுகள் போல் இருக்கின்றனவே, அதற்கு காரணம் என்ன?**

இந்த மாதிரியான முடிச்சுகள் மரங்களுக்கு நோய் வந்து அதன் காரணமாக ஏற்படுவதில்லை. அடிமரத்தில் கிளை உண்டாக ஆரம்பிக்கும். ஆனால் சில சமயங்களில் கிளைகளாக வளராமல் முடிச்சுக்களாக நின்று விடுவதுண்டு. அப்பொழுது பக்கத்திலுள்ள கிளைகள் அவற்றை அழுத்தி அதிக உறுதியுடையனவாகச் செய்துவிடும். முடிச்சுக்களை அறுத்தால் இந்த உண்மை விளங்கும். அத்துடன் கிளைகள் தோன்றுமிடத்தில் அதிக உறுதியுடையனவாக இருந்தால் தானே கிளை சாய்ந்துவிடாமல் நிற்க முடியும்? ✱

# வியட்னாம் நாட்டுக் கதை

# பரிசு

ஹாகுவேயும் வான்தானும் இளமையில் இருந்தே நண்பர்களாக இருந்தனர். இருவரும் ஒன்றாகவே படித்துப் பெரியவர்களானார்கள். இருவருமே வாழ்க்கை முழுதும் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பதாகச் சத்தியம் செய்திருந்தனர்.

ஆரம்பக் கல்வியை முடித்தபிறகு இருவரும் உயர் கல்விக்காக ஹனோய் நகருக்குச் சென்றனர். அங்கும் கூட இருவரும் ஒரே அறையிலேயே தங்கினர்.



சில காலங்களுக்குப் பிறகு ஹாகுவை மாகாணமொன்றின் கவர்னராக அரசர் ஆக்கினார். வான்தான் தொடர்ந்து கல்வி கற்றுவந்தான். சில மாதங்கள் கழித்து வான்தான் தனது கவர்னர் நண்பரைச் சந்திக்கச் செல்லத் தீர்மானித்தான். ஆனால், தனது நண்பன் கவர்னர் பதவி கிடைத்ததும் பேராசைக்காரனாக மாறிவிட்ட விடயம் அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

வான்தான் கவர்னரின் வாசஸ்தலம் இருந்த இடத்தை அடைந்தான். வாசலில் நடுத்தர வயதான பணியாளன் ஒருவன் இருந்தான். சந்திக்க வந்தவன் வெறுங்கையோடு வந்திருப்பதை அவன் கண்டான். முகத்தைச் சுளித்தபடி, ''கவர்னர் இப்போது தங்க மீன் தடாகக் கரையில் உலாவிக் கொண்டிருக்கிறார். இன்று அவர் எவரையும் சந்திக்க மாட்டார்'' என்று சொன்னான்.

வான்தான் மறுதினமும் அங்கே சென்றான். சந்திக்க வந்திருப்பவன் மீண்டும் வெறுங்கையோடு வந்திருப்பதைக் கண்டு ''கவர்னர் இப்போது வளர்ப்புக் குரங்கோடு விளையாடிக் கொண்டிருக்கிறார். எவரும் அவருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது'' என்றான்.

வான்தான் மூன்றாவது தடவை சந்திக்கச் சென்றபோது வேலைக்காரன் கோபத்தால் கண்கள் சிவக்க, ''உனக்கு எப்போது புத்திவருமோ தெரியாது. பரிசு ஏதும் கொண்டுவராமலே சந்திக்க வருகிறாய்'' என்று கடிந்து கொண்டான்.

மறுநாள் வான்தான் கடைத்தெருவில் இருந்து ஓர் ஆட்டுக்குட்டியை வாங்கினான். அதனைப் பெரியதொரு தட்டில் வைத்து, பட்டுப்புடைவையால் மூடி, பரிசாக எடுத்து வந்தான்.

இன்று இவன் பரிசு கொண்டுவந்திருக்கிறான் என்பதை வாயிற் காவலன் கண்டான். எனவே, அவனை உள்ளே செல்ல அனுமதித்தான். அங்கே நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது. வான்தான் ஹாகுவை மிகச் சிரமத்தோடு அடையாளம் கண்டுகொண்டான். ஹாகுவே நீளமான பட்டு வஸ்திரம் ஒன்றை அணிந்துகொண்டிருந்தான். அத்தோடு மிகவும் ஆனந்தமாக அவன் இருப்பது தெரிந்தது. தன்னுடைய இளம் பருவத்துத் தோழனைக் கண்டு கொள்ளாதவன் போலிருந்தான் அவன்.

ஹாகுவே கையைத் தட்டினான். உடனே ஒரு பணியாளன் தங்கத் தட்டிலே வெற்றிலை மடித்து எடுத்து வந்தான். ஹாகுவே ஒரு பீடாவை எடுத்து வாயில் போட்டுக்கொண்டான். மற்றதை வான்தானுக்குக் கொடுத்தான். வான்தான் தட்டிலிருந்த புடைவையை அகற்றினான். வெற்றிலையை தான் தின்னாமல் ஆட்டுக் குட்டியின் வாயில் திணித்தான். ஹாகுவேயை அவமதிப்பது போன்று, ஆட்டுக்குட்டி சத்தமாக மே, மே எனக் கத்தத்தொடங்கிற்று. ''இதென்ன செய்துகொண்டிருக்கிறாய்?'' என்று ஹாகுவே ஆச்சரியம் மேலிட்டவராகக் கேட்டார். அதற்கு அவன் எந்தப் பதிலும் கொடுக்கவில்லை. அவன் ஆட்டுக் குட்டிக்கு மூன்று தடவை வணக்கம் செலுத்தினான். பின்னர் எல்லோருக்கும் கேட்கும்படியாகப் பின்வருமாறு சொன்னான். ''ஓ, ஆட்டுக் குட்டி மகாராஜாவே, நான் முகமன் கூறுவதை ஏற்றுக்கொள். நான் ஒரு முட்டாள். நீ இவ்வளவு பெரிய ஆள் என்று இது வரை எனக்குத் தெரிந்திருக்கவில்லை. உன்னுடைய கிருபையால் தான் எனது பழைய நண்பனுடைய மாளிகைக்குள் நுழைய முடிந்தது.''

இவ்வாறு கூறியவனாக ஹாக்குவைத் திரும்பிப் பாராமலே மாளிகைக்கு வெளியே போய்விட்டான். ஹாக்குவின் முகம் வெட்கத்தால் சிவந்து போயிற்று. பின்னர் வெளுத்துப் போனது. அதன் பிறகு வான்தான் ஒருபோதும் அந்தப் பேராசைக் காரனைச் சந்திக்கவில்லை. ✱

**தமிழில்: ஸீயெம்மே**




## கழுகு

கழுகுகள் பல நாட்களாகப் பசியினால் துன்புற்றுக் கொண்டிருந்தன. எல்லா இடங்களிலும் தேடியும் உணவு கிடைக்காததால், கழுகுகளின் கூட்டம் நடைபெற்றது.

''இப்படியே போனால், நாம் விரைவிலேயே செத்துப் போய்விடுவோம்'' என்று ஒரு கழுகு சொன்னது.

எல்லாக் கழுகுகளும் யோசிக்கத் தொடங்கின. கடைசியில் கழுகுத் தலைவன் உபயம் ஒன்றைத் தேடிப் பிடித்தது. அதன்படி சில கழுகுகள் இரவில் ஒளிவு மறைவாகச் சென்று நகரைச் சேர்ந்த குடியிருப்புப் பகுதிகளில் இடத்துக்கு இடம் நிறுவப்பட்டுள்ள சிலைகளைத் தமது அலகுகளினாலும் நகங்களினாலும் உடைத்துவிட வேண்டும் என்று சொன்னது.

காலையானதும் இரு சமுதாயங்களுக்குமிடையே சண்டை மூண்டது. எத்தனையோ பேர் செத்துப் போனார்கள். கழுகுகளுக்கு ஒரே மகிழ்ச்சி. அவை வயிறு புடைக்கத்தின்றன.

கழுகுகள் இப்போது ஒருபோதும் பட்டினி கிடப்பதில்லை அவற்றுக்குத் தான் தீர்வு கிடைத்துவிட்டதே! ★

# சீ... வெட்கக்கேடு...!

'லோ கிப் ஸ்டைல்' என்று சொல்லிக் கொண்டு பேண்ட்டை கீழே இறக்கி விட்டுக் கொள்வது பேஷனாகி விட்டது. இப்படி இறங்கிய பேண்டுடன்,



உள்ளாடை தெரியும்படி உலா வருவது பலரையும் முகம் சுளிக்க வைக்கிறது. இதைக் கண்டித்துச் சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் மனம் புழுங்கியபடி செல்பவர்கள் ஏராளம்.

இப்படி இறங்கிய பேண்டுடன் அலைபவர்களுக்கு எதிராக 'பேண்ட் உருவும்' போராட்டத்தில் இறங்கி உள்ளது லூசியானா நாட்டின் ஒரு பெண்கள் அமைப்பு.

அங்கு இளைஞர்களின் இறங்கிய பேண்ட் அட்டகாசம் தாங்க முடியவில்லை. கல்லூரிக்கு கூட அந்த மாடலில் உடை அணிந்து வருகிறார்கள். இதைக் கண்டு கொதித்துப் போனது 'பேடான் ராக் மெட்ரோ கவுன்சில்' என்ற பெண்கள் அமைப்பு. அவர்கள் சமீபத்தில் கூட்டம் கூட்டி 'லோ பேண்ட்ஸ்; நோ சான்ஸ்' என்ற புரட்சி பிரசாரத்தை தொடங்கி உள்ளனர்.




அவர்களின் பரபரப்பு முழக்கத்துக்கு நாடு முழுவதும் கிடைத்த வரவேற்பு, இளைஞர்களை கதிகலங்க வைத்துள்ளது.

லூசியானா நாட்டின் மகளிர் அமைப்பைச் சேர்ந்த டெனிஸ் மார்சிலி கூறுகையில்,

''இளைஞர்கள் இப்படி அலைவது பெரியவர்களை அவமதிப்பதாகவும், பெண்களை கேலி செய்வதாகவும் உள்ளது. அவர்களுக்கு எதிலும் 'நோ சான்ஸ்' என்று கூறிவிட்டால் இந்தப் பழக்கத்தை நிறுத்திக் கொள்வார்கள். அவர்களின் குடியுரிமையை திரும்பி பெற வேண்டும், வேலையை பறிக்க வேண்டும் என்று எங்கள் குழுவில் தீர்மானித்துள்ளோம்'' என்றார் ஆவேசமாக.

''இந்த விழிப்புணர்வு பிரசாரத்திற்கு நல்ல வரவேற்பு உள்ளது. நல்ல மாற்றமும் ஏற்படும் என்று நம்புகிறோம். இல்லாவிட்டால், இறக்கமாக அணிபவர்களின் பேண்ட்டை கழற்றி விடும் போராட்டத்தையும் நடத்தத் தீர்மானித்து உள்ளோம்'' என்கிறார் மார்சிலி.

இவர்களது போராட்டத்தை வரவேற்கும் ஆண்கள், ''சில பெண்களும் உள்ளாடை தெரிய பேண்ட் அணிகிறார்களே அவர்களுக்கும் இது



பொருந்துமா?'' என்று கேட்கிறார்கள். போராட்ட குழுவில் உள்ளவர்களிடம் இருந்து இதற்கு மட்டும் இன்னும் பதில் இல்லை. இந்த போராட்டத்தின் எதிரொலி இங்கும் கேட்குமோ என்னவோ!





பிரித்தானியாவின் முன்னாள் இளவரசி டயானாவின் கவர்ச்சிகரமான ஆடைகளை வடிவமைத்த கத்தரின் வோக்கர் தனது 65 ஆவது வயதில் கடந்த ஞாயிறன்று லண்டனில் புற்றுநோயினால் மரணமானார். அவர் வடிவமைத்த ஆடைகளுடன் டயானா காணப்படுகிறார். இரண்டாவது படத்தில் டயானா அருகில் நிற்பவர் தான் கத்தரின் வோக்கர்.

## இதுவரை வெளிவராத ஹிட்லரின் புதிய புகைப்படங்கள்



ஹிட்லர் 1939 ஆம் ஆண்டு ஆஸ்திரியாவுக்குச் சென்றபோது கல்லூரி மாணவிகள் அவரைச் சந்தித்த வேளை...



றொபேட் லே என்ற ஜேர்மன் கப்பல் 1939 இல் வெள்ளோட்டம் விடப்பட்ட போது அதில் ஹிட்லரும் ஜேர்மன் தொழிலாளர் முன்னணித் தலைவரின் மனைவியான இங்கிலேவும் பயணம் செய்த போது....



உலகில் பிரசித்தி பெற்ற கார் உற்பத்தி நிறுவனத்தின் தயாரிப்பாளரான போர்டினன் போர்ச் ஹிட்லருக்கு எனத் தயாரிக்கப்பட்ட காரை அவருக்கு அன்பளிப்பாக வழங்கிய போது....

(பாலா)




எமது மக்களின் பொக்கிஷம்

வலிகள், வேதனைகள் எங்கு உள்ளதோ

அங்கே சித்தாலேபங்



TIEFSTE PREISE!



1495.-
statt 2080.-



Polstergruppe Kassel
Textil-Leder beige
Mit Bettfunktion

1490.-
statt 1850.-

Möbel Ferrari

www.moebel-ferrari.ch

HINWIL Wässeristrasse 28
Tel. 044 931 20 40

Montag bis Freitag 9 bis 20 Uhr
Samstag 9 bis 17 Uhr

Direkt-Kedit -
6 Monate ohne Zins


இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2010, ஒக்டோபர் 3 ஆம் திகதி வெளியிடப்பட்டது.